


# சீறாவின் இயங்கியல்

ஏ.பி.எம். இத்ரீஸ்

# சீறாவின் இயங்கியல்

முஹம்மத் (ஸல்) அவர்களின் வரலாற்றுப் பாத்திரம் குறித்தும் தற்காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் நோக்கில் சீறாவின் இயங்கு திசைவழிகளைத் தேடும் ஒரு முயற்சி.

# சீறாவின் இயங்கியல்

ஏ.பி.எம். இத்ரீஸ்

உயிர்ப்பைத் தேடும் வேர்கள்

சீறாவின் இயங்கியல்
ஏ.பி.எம். இத்ரீஸ்

வகை : ஆய்வு

முதற்பதிப்பு: செப்டம்பர் 2005
வெளியீட்டு எண் : 04

வெளியீடு
உயிர்ப்பைத்தேடும் வேர்கள்
மஹ்மூத் ஆலிம் வீதி,
வாழைச்சேனை - 05
தொலைபேசி: 0094 777 141649
மின்னஞ்சல்: abmimthath@yahoo.com
பதிப்புரிமை: ஆசிரியர்
வடிவமைப்பு: உயிர்ப்பைத் தேடும் வேர்கள்
முன்னட்டை ஓவியம்: பாயிஃ. யஹ்யா அல்மயி

விலை ரூ. 100

முன்னுரை ❖ 7
வரலாறும் இயங்கியலும் ❖ 9
சீறாவில் மாறாததும் மாறக் கூடியதும் ❖ 11
ஒவ்வொரு நபிக்கும் ஓர் எதிரி உண்டு ❖ 13
பொதுக் குறிக்கோளும் கிளை இலட்சியங்களும் ❖ 15
முதன்மையான இலக்கைத் தேர்வு செய்தல் ❖ 18
சமகால கிளைக் குறிக்கோள்கள் ❖ 20
முறைவழிகளின் பன்மையும் வகைமையும் ❖ 23
சீறாவில் சமூகமாற்ற முறை வழிகள் ❖ 26
மக்கா காலகட்ட முறை வழி ❖ 28
மதினா காலகட்ட முறை வழி ❖ 31
சீறாவும் வன்முறையும் ❖ 32
போராட்டத்தில் வலு சமநிலை ❖ 46
சீறாவும் வலுசமநிலையும் ❖ 48
கோட்பாட்டாக்கம் தொடர்பாக ❖ 54
சீறாவில் ஒப்பந்தங்கள் ❖ 57
சீறாவும் தற்காலப் போராட்டமும் ❖ 71
மக்கள் சக்தியைத் திரட்டுதல் ❖ 75

# முன்னுரை

இன்றைய உலக நிலவரங்களையும் குறிப்பாக முஸ்லிம் சமூகத்தையும் எடுத்து நோக்கும் போது ஒரு தளமாற்றத்தையும் தீர்வையும் வேண்டி நிற்பதைக் காண முடியும். எனவே இந்த சமூகத்தின் புத்திஜீவிகளும் சீர்திருத்தவாதிகளும் தீர்வு நோக்கிச் சிந்தித்தும் வருகின்றனர். உண்மையில் இச்சிந்தனையின் விளைவாகத்தான் பல்வேறு இயக்கங்கள், கட்சிகள், கருத்தரங்குகள், மாநாடுகள், வாதவிவாதங்கள், போராட்டங்கள் சூடுபிடித்துள்ளன. சமூகமாற்றம் தொடர்பான இடையறாத இந்தப் போராட்டம் முதலில் அதற்காக உழைப்பவர்களும், அதற்கெதிரான உலக ஆதிக்கசக்திகளைக் கணக்கிலெடுக்கும் அதேவேளை தனிமனிதன், அவனது அகம், இயக்கம், அதன் உள்ளகம் என விரிந்து செல்கின்றது. சமூக மாற்றம் குறித்த இந்த ஆய்வு பெரும்பாலும் வெட்டிக் கிழிக்கப்பட்ட ஒன்றாகவே இருக்கின்றது. ஆனால் தாகம் தீராத பாலை நிலத்தைப் போன்றே பிரச்சினைகளும் தீர்வுகளும் இருக்கின்றன. நீர் புகட்டப்படும் போதெல்லாம் இன்னும் நீர் கேட்டுக்கொண்டே இருக்கின்றது. தாகம் தீர்வதில்லை என்பதைப் போல் தேவையான சமூக மாற்றம் இன்னும் நிகழவில்லை. நாளுக்கு நாள் தேவை அதிகரித்த வண்ணமே இருக்கின்றது. இதனால் முஸ்லிம்கள் பொருளாதார, அரசியல், கல்வித் துறைகளில் பின்னடைவை எதிர்நோக்குவது போல பிரிவினை, பலவீனம், நாளுக்கு நாள் பிரச்சினைகளின் தொகை அதிகரித்தே செல்கின்றது. அரசியல், பொருளாதார, ராணுவரீதியில் உலகம் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருப்பதைப் போல ஒழுக்க, பண்பாட்டு, சூழல், மனிதன், தாரவ, மிருக வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளது.

வேறொரு வார்த்தையில் சொன்னால், முஸ்லீம்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகள் இல்லை. அல்லது குறைந்தபட்சம் தீர்வு நோக்கிய பாதையில் அவை முன்வைக்கப்படவில்லை. இஸ்லாமியத் தீர்வின் அடிப்படையிலான சமூகமாற்றத்திற்குரிய களம் இன்னும் விரிந்ததாகவே உள்ளது. நடைமுறையில் அதை எப்படிப் பிரயோகிப்பது என்பது முக்கியமாகும்.

அதே நேரத்தில் இஸ்லாத்திற்காக உழைத்தவர்களை அதிமனிதர்களாகக் கட்டமைத்துக் கொண்டு அவர்களது சமூக மாற்றத்துக்கான முறைவழிகள் மாத்திரம்தான் சரியானவை என்ற மனப்பாங்கு இங்கு நிலவுவதால் நபிகளாரின் வரலாற்றுப் பாத்திரம் கலிமாவோடு மட்டும் சுருக்கப்படுவதையும் அவதானிக்கலாம். ஆனால் நபிகளாரின் முழுமையை அனைத்தையும் உட்கொண்ட சமூகமாற்றத் தன்மையை யாருடைய சீறாவிலும் காணமுடியாது.

சமூகமாற்றம் பற்றிப் பேசும்போதெல்லாம் 'ஒரு சமூகம் தன்னைத் தானே மாற்றிக் கொள்ளாதவரை அல்லாஹ் அச்சமூகத்தை மாற்ற மாட்டான்' (17:16) என்ற வசனத்தைக் கூறுவது ஒரு வாய்ப்பாடாகிவிட்டது. சமூக மாற்றத்துக்கான ஏக வழி மனமாற்றம் மட்டுமல்ல. 'தேவையான சக்திகளையும் குதிரைப்படையையும் திரட்டிக் கொள்ளுங்கள்' (8:60) என்ற வசனம் உணர்த்துவது என்ன?! அரசியல், பொருளாதார, ராணுவ, தொழில்நுட்ப, ஊடக வலுசமநிலைகளையும் நாம் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். புதிய இருப்பெடுப்பைச் செய்யவேண்டுமானால் நாம் சீறாவை மறுவாசிப்புக்குள்ளாக்க வேண்டும்.

90களின் ஆரம்பத்தில் இருந்து சீறாவை ஒரு பாடமாக போதிக்கும் பாக்கியம் எனக்குக் கிடைத்தது. அதனால் ஏற்கெனவே உள்ள வாசிப்போடு மேலும் பல புதிய ஆய்வு நூல்களை வாசிக்கும் பேறு கிட்டியது. முஸ்தபா அஸ்ஸிபாஈ, ஷேய்க் முஹம்மத் அல்-கஸ்ஸாலி, சயீத் ரமளான், ஷிப்லி நு:.மான், முபாரக்பூரி, அக்ரம் ழியா, கலாநிதி பர்கூத், முனீர் கழ்பான் ஆகியோரின் படைப்புக்கள் என்னைக்கவர்ந்த சமகாலத் தன்மை வாய்ந்தவையாகும். அதேநேரம் நவீன காலத்தில் புரட்சிகர மாற்றங்களை ஏற்படுத்திய லெனின், சேகுவரா, மாவோ, கொமைனி, அலி ஷரிஅத்தி, பிடல்காஸ்ரோ, அம்பேத்கார், பெரியார், காந்தி, அமில்கர் கப்ரால், பிரான்ஸ் பனான், பட்ரிஸ் லுமும்பா ஆகியோர்களின் வாழ்க்கைச் சரிதைகளையும் போராட்ட அனுபவங்களையும் எனக்குக் கிடைத்த அளவில் வாசித்தேன். நெப்போலியன், கான்சாஹிபு போன்றோர் நபிகளாரின் ராணுவ இயங்கியலை மிகச்சரியாக செயல்படுத்தியிருக்கிறார்கள். ஈழப் போராட்ட வரலாறு நமக்கு முன்னால் இருக்கும் அனுபவமாகும் இவை இந்நூலுக்கு ஆதாரப் பின்புலமாகும்.

அன்புடன்
**ஏ.பி.எம். இத்ரீஸ்**

# வரலாறும் இயங்கியலும்

வரலாற்றை குறிப்பிட்ட கோணத்தில் நோக்கி, தொகுத்து அதனடிப்படையில் வரலாற்றுக்குச் சில இயங்குவிதிகளை உருவாக்கிக் கொள்வதை அல்லது இயங்குவிதிகளைக் கண்டடைவதை வரலாற்று வாதம் (Historicism) என்று குறிப்பிடுகின்றார்கள். அவ்வியங்கு விதிகள் வாழ்கையின் அடிப்படை விதிகளாக முன்வைக்கப்படுவதற்கு ஆதாரப் பின்புலமாக வரலாறு அமைக்கப்படுகிறது. வரலாற்றியலில் இமாம் இப்னு கல்தூனின் 'முகத்திமா' என்ற நூல் வரலாற்று வாத நோக்கை வரலாற்றாய்வின் அடிப்படைகளில் ஒன்றாக ஆக்கிய நூல் என்று மதிப்பிடப்படுகிறது. வரலாறு எப்படி நிகழ்ந்தது என்பதுடன் ஏன் அப்படி நிகழ்ந்தது என்றும் ஆராய்ந்து அதன் விதிகளை நிகழ்காலம் நோக்கி கொண்டு வருவதற்கு வலுவான முன்னோடியாக அமைந்தது அந்நூலே. வரலாற்று ஓட்டத்துக்கு திசை மையத்தை, தர்க்க ஒழுங்கை, கட்டுக்கோப்பை, இயங்கியலை அளிக்க முயலும் எல்லா அணுகு முறையும் வரலாற்று வாதமேயாகும்.

சமூக மாற்றத்தில் அல்லது சமூக இயங்கியலில் பங்கேற்கும் அடிப்படை அம்சங்களில் பௌதீகக் காரணிகளுக்குள்ள முக்கியத்துவத்தை அலட்சியப்படுத்திவிட முடியாது. சமயங்களின் தோற்றங்களை மண்ணுக்குரிய நிபந்தனைகளோடும் பார்க்க வேண்டும் என்பதை இப்னு கல்தூன் ஒத்துக் கொள்கின்றார்.

வர்த்தக மேலாண்மையும் மேட்டுக்குடிகளின் ஆதிக்கமும் அடிமை முறையும் ஆணாதிக்க வாதமும் மரபு வழிபாடும் நிறைந்த ஒரு நாடோடிச் சமூகத்தில் புதிய சமூக அமைப்பை - உம்மத்தை கட்டியெழுப்புவதில் நபியவர்களின் வரலாற்றுப் பாத்திரம் இன்றைய பிரச்சினைகளுக்கு தீர்வுகாண வேண்டுமாயின் அவரது சீறாவைப் பகுப்பாய்வு செய்வது அவசியமாகும்.

கடவுள் கொள்கைகள் மாறும் போது அதனுடன் சமூகத்தைக் கெட்டியாகப் பிடித்திருக்கும் பல கட்டுக்களும் சடங்குகளும் மரபுகளும் ஏன்

கருத்துக்களும் கூட மாறத்தான் வேண்டும். புதிய சமய சிந்தனைகளினால் பொருளாதாரமும் பண்பாடுகளும் மாற்றமடைந்தனவா என்ற கேள்வி சமூக மாற்றங்களுக்கான அல்லது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான பௌதீகத் தளங்களை நோக்கி நம்மைக் குவிமையப் படுத்துகின்றன.

தன் காலத்தின் உயிர் நாடிகளைக் கிரகித்துக் கொண்டு அதற்கேற்ப புதிய சிந்தனைகளை வெளிப்படுத்தி சமூகப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பவனே உண்மையான சீர்திருத்தவாதியாவான். அந்த வகையில் நபிகளாரின் சீறாவின் அடிப்படைகளாக பின்வரும் அம்சங்களை நாம் கருதலாம்.

1. சமூகம், பண்பாடு, கருத்து நிலை ஆகியவற்றின் இயங்கியல் தன்மையை நபிகளார் நன்கு புரிந்து கொண்டமை.

2. இப்புரிந்து கொள்ளலின் அடிப்படையில் பழமைக்கும் புதுமைக்குமான முரண்பாட்டில் புதுமையின் வழி நின்று புதிய மார்க்கத்தை, புதிய பண்பாட்டை நிலை நாட்டுவதற்கான நவீன முற்போக்கான உத்திகளைக் கையாண்டமை.

3, கொள்கைக்காக தன்னை முற்றாக அர்ப்பணித்துக் கொண்டமை.

4. பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அல்லது சமூக மாற்றத்துக்கான அழகிய வழிமுறைகளை தனது சீறாவில் விட்டுச் சென்றமை.

பௌதீக உலகைப் போல சமூகம், பண்பாடு ஆகியவையும் இடையறாது இயங்குகின்றன. மாறுகின்றன. வளர்கின்றன. இத்தகைய இயக்கம், மாற்றம், வளர்ச்சி ஆகியவற்றையே இயங்கியல் விளக்குகின்றது. சமூகம் பண்பாடு குறித்த இந்த உண்மையை நபிகளார் நன்கு புரிந்து வைத்திருந்தார்கள். இந்தப் புரிந்து கொள்ளலே தன் காலத்து அடிப்படைப் பிரச்சினைகளை உணர்ந்து அதற்கேற்ற தீர்வுகளை நடைமுறைப் படுத்தி நபிகளார் மனித இன வரலாற்றில் யாரும் பெற்றிராத மாபெரும் வெற்றியைப் பெற்றார்கள்.

## சீறாவில் மாறாததும் மாறக் கூடியதும்

மனித இன வரலாற்றில் சமூக மாற்றத்துக்காகப் போராடியவர்களில் சமூகப் பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு சொன்னவர்களில் முஹம்மத் முதன்மையானவர் என்பதில் இருகருத்துக்கு இடமிருக்காது. இறைத்தூதரின் சீறாவில் இயங்கி வந்த விதிகளையும் உண்மைகளையும் தொகுத்து நோக்கும் போது அவற்றில் மாறாததும் மாறக்கூடியதும் உண்டு என்பதை அறிந்து கொள்ளலாம். முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு முந்திய தூதர்களின் சீறாவிலும் இவற்றில் பல கலந்திருப்பதையும் அவதானிக்கலாம். அவர்கள் ஏற்படுத்திய சமூக மாற்றங்களையும் இஸ்லாத்தின் ஒளியில் ஆராய வேண்டும். அவ்வனைத்து சமூக மாற்றப் பணிகளிலும் மாறாததும் மாறக்கூடியதும் உண்டு. எனவே அவற்றின் மாறும் - மாறாத்தன்மையும் இஸ்லாத்தின் அடிப்படையில் கவனப்படுத்த வேண்டும். அவ்வாறே கடந்த பதினான்கு நூற்றாண்டுகளாக இஸ்லாமிய வரலாற்றில் ஏற்பட்ட சமூக மாற்றங்களையும் அவற்றில் செயற்பட்ட இயங்கியல் - சமூக மாற்ற விதிகளையும் தொகுத்தறிதல் வேண்டும்.

### 1. தௌஹீத்

நபிமார்கள் செய்த சமூக மாற்றத்தில் பிரதான இடம் வகிப்பது தௌஹீத் - ஏகத்துவ சிந்தனையாகும். ஏக இறைவனை நோக்கி அழைப்பது: அவன் இணை துணை அற்றவன். அவனுக்கு பரிபூரண வழிபடல்: அவனது ஆற்றலை எல்லையற்ற கருணையை மன்னிப்பை விசுவாசிப்பது அவன் மறு வாழ்வில் வழங்கவிருக்கும் வெகுமதி, தண்டனையை விசுவாசிப்பது: முன்னைய தூதர்கள், ஏனைய வேதங்கள், மலக்குகள் ஆகியவையும் இவ்வியங்கியலில் அடங்கும்.

### 2. ஷிர்க்

தௌஹீதுக்கு எதிரானது என்ற வகையில் நபிமார்களின் போராட்டத்தில்

ஷிர்க் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. மரபு வழிபாடு, மனோ இச்சை, குற்றச் செயல்கள், சமூக அநீதி என எத்துறை சார்ந்ததாய் இருப்பினும் ஷிர்க்கின் பல்வேறு வடிவங்களுக் கெதிராக நபிமார்கள் போராடி வந்துள்ளனர். ஷிர்க்கை எதிர்ப்பதற்கான போராட்ட உதாரணங்களுக்கு வரலாற்றில் எண்ணிக்கையே இல்லை. சமூக விடுதலையில் மூடநம்பிக்கைகளுக் கெதிரான போராட்டம் பிரதான இடத்தை வகிக்கின்றது.

பல்வேறு சக்திகளுக்கு அடிமைப்பட்டு நிற்கும் மக்கள்திரள் விடுதலையைப் பெறுவது சாத்தியமற்றது. அவ்வாறே ஷிர்க்குக்கு எதிராகப் போராடும் தீர்க்தரிசிகளை வீழ்த்துவதற்காக சமூகம் வன்முறையைக் கையாண்டு வந்துள்ளது. நாடுகடத்தல், சித்திரவதை, படுகொலை என்று அதன் பட்டியலை நீட்டிக்கொண்டே செல்லலாம். நபிமார்களின் கொள்கையை விட்டுவிடும் படி கோருவதற்கு பணம், பதவி, அந்தஸ்து விலைபேசப்பட்டன.

கப்பாப் பின் அல் அர்த் மக்காவில் நேர்ந்த துன்பத்தைப் பற்றி இறுதித் தூதருக்கு எடுத்துக் கூறும் போது அவர் கூறிய பதிலும் இங்கு நோக்கத்தக்கது. புரட்சிகரமான கொள்கை முன்வைக்கப்படும் போது பாரம்பரிய மரபுகளுக் கெதிரான போராட்டத்திலும் எதிர்ப்பு என்பதும் தவிர்க்க முடியாத அம்சமாகும். இக்கட்டங்களில் சமூக விடுதலையை முன்னெடுப்பவர்கள் எதிர்ப்பைக் கண்டு பின்வாங்காமல் தொடர்ந்து உழைப்பதே அப்பணியில் வெற்றிபெறுவதை சாத்தியமாக்கும்.

# ஒவ்வொரு நபிக்கும் ஓர் எதிரியுண்டு

சமூக மாற்றத்துக்கான இயங்கியலில் மாறும் பண்பிலும் நிலையானதும் மாறக்கூடியதும் உண்டு. "நாம் ஒவ்வொரு நபிக்கும் பாவிகளில் இருந்து ஓர் எதிரியை உருவாக்கியிருந்தோம்." *(25:31)* என்ற அல்குர்ஆனின் கூற்று ஒவ்வொரு தீர்க்கதரிசியும் அவர்களது சமூகத்தில் ஒரு குறிப்பிட்ட வகையில் எதிரிகளையும் சந்தித்தனர் என்பதை வெளிப்படுத்தி நிற்கின்றது. இந்த எதிரி கொள்கை முன்வைக்கப்பட்ட பின்பே வெளிப்படுவான். அதை அழிக்க - முனைப்போடு செயற்படுவான். உரையாடலுக்கான வாயிலை மூடுவதற்கு முயற்சிப்பான். மக்கள் மத்தியில் கொள்கை சுதந்திரமாகப் பரவுவதை தடை செய்வதே இவனது நோக்கமாகும். நபிமார்களின் தந்தை இப்றாஹீம் (அலை) அவர்களில் இருந்து முஹம்மத் (ஸல்) அவர்களை எதிர்த்த பல எதிரிகளை அல்குர்ஆனும் வரலாறும் பதிந்து வைத்துள்ளது. பிர்அவ்னில் இருந்து அபூஜஹ்ல் வரை எதிரிகளின் பெயர்ப் பட்டியலை குறிப்பிட முடியும்.

முகவுரையாகத் தந்த மேற்குரித்த விளக்கங்களில் இருந்து சமூக மாற்றத்துக்கான செயற்பாடுகளில் மூன்று நியதிகள் தொழிற்படுவதைக் காணலாம்.

**முதலாவது கட்டம்:** அனைவருக்குமான அழைப்பின் தொடக்கமாகும். அதன் ஆரம்பத்தில் தீர்க்கதரிசிகள் தமது தூதை எத்திவைத்து அனைவரும் அதை ஏற்க வேண்டுமென அவாவுறுவர். இதற்காக அழகிய முறையில் உரையாடுவர்.

**இரண்டாவது கட்டம்:** இது எதிர்கொள்ளும் கட்டமாகும். கொள்கைக் களத்தில் மோதுகை நிலை ஏற்படும் கட்டம் என இதனை வர்ணிக்கலாம். இக்கட்டத்திலிருந்து யாரும் தப்ப முடியாது. இங்கு இருதரப்பிலிருந்தும் ஆதாரங்கள் முன்வைக்கப்படும். எதிர்த் தரப்பு தொடர்ந்து பொய்ப்பித்துக் கொண்டேயிருக்கும்.

**மூன்றாவது கட்டம்:** இது அடக்குமுறை, சித்திரவதை, சோதனைகள்

நிரம்பிய கட்டமாகும். எதிர்ப்புச் சக்திகள் இக்கட்டத்தில் உரையாடல்களுக்கான வாயில்களை அடைத்துவிட ஆசைப்படுவர். இங்கு போராட்டத்தில் வேறு சில தளங்களுக்குள் பிரவேசிக்கும் நிலையும் ஏற்பட்டு விடுகின்றது. தெரிவுகள், உத்திகள் கையாளப்படும் கட்டமாகவும் இது பரிமாணம் அடைகின்றது. இக்கட்டத்தில் அனைவரும் கொள்கையை ஏற்கும் சாத்தியம் குறைவாகவே தென்படும்.

இக்கட்டத்தில் அல்லது இப்போராட்டத்தில் அநீதி இழைக்கப்பட்டவர்கள் எப்போதும் சமூக விடுதலைக்காக உழைப்போரின் அணியிலேயே இணைந்து கொள்வர். அத்துமீறல் என்பதும் கொள்கையை விசுவாசித்தவர்களின் அணியிலேயே அதன் எதிரிகளால் நிகழ்த்தப்படும் அனைவருக்குமான அழைப்பின் வாயில் திறக்கப்பட்டு கொள்கைப் பிரசாரம் நடைபெறுவதைப் போலவே அரசியல் தளத்தில் அதைச்சார்ந்தோர் அப்பொறுப்புக்களை சுமக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவர். ஈற்றில் உயிர்த்தியாகம், உடமைகள் அழிப்பு, சிறைவாசம் என்ற நிலை உருவாகும்.

இது மேலும் தெளிவாக்கப்பட வேண்டிய கருத்தாக்கமாகும். இவை ஒவ்வொன்றிலும் காணப்படும் நிலையான மாறும் தன்மையுள்ள பண்புகளைக் கண்டறிதல் அவசியமாகும். நம்பிக்கை, வழிபாடு, மூலாதாரம், ஹராம் ஹலால் போன்றவை மாறாத நிலையான பிரிவைச் சார்ந்ததாகும்.

ஆனால் கால, இட அதிகார உறவுகள், சமூக கட்டமைப்புக்கள், வலுசமநிலைகள், மோதுகை வடிவங்கள், தோற்றப்பாடுகள் மாறும் தன்மை படைத்தவையாகும். ஆனால் இவை அனைத்தையும் மொத்த இலட்சியத்தோடும் இஸ்லாமிய மூலத்தோடும் தொடர்புறுத்தியே அணுக வேண்டும். மாறும் யதார்த்தத்திற்கு சட்ட வசனத்தை உட்படுத்தி ஆராய்வதே தீர்வு காண்பதற்கு சிறந்த வழிமுறையாக அமையும்.

# பொதுக் குறிக்கோளும் கிளை இலட்சியங்களும்

பொதுவாக நபிமார்களின் வரலாற்றைப் படிக்கும் போதும் குறிப்பாக முஹம்மத் (ஸல்) அவர்களின் சீறாவைப் படிக்கும் போதும் கிளை இலட்சியங்களுக்கான போராட்டத்தையும் அவதானிக்க முடியும். இவ்விலட்சியங்கள் குறித்த எதிரியோடு குறித்த ஷிர்க்கோடு குறித்த அநீதியோடு போராடுவதை நோக்கமாகக் கொண்டிருக்கும். வேறு வார்த்தையில் சொல்வதாயின் எல்லா தெய்வீக அழைப்பும் பிரதான - முழுமைக் குறிக்கோளை அடைவதற்கு முன் பல தடைகளைத் தாண்ட வேண்டி ஏற்பட்டுள்ளது. பிரதான முழுமைக் குறிக்கோள் அல்லது பொதுக்குறிக்கோள் என்று இங்கு நாம் குறிப்பிடுவது ஏகத்துவக் கோட்பாட்டின் வெற்றியையே. வாழ்க்கையின் எல்லாப்பரிமாணங்களிலும் பின்பற்றப்பட வேண்டியது அதுதான். எனவே அதை அடைவதற்கான தடைகள் கிளை இலட்சியங்களை கட்டமைக்கின்றன. அவற்றை நீக்குவதன் மூலமே பிரதான குறிக்கோளை அடைய முடியும்.

குறிப்பிட்ட எதிரியை நிர்மூலமாக்குவது ஓர் சீர்கேட்டை ஒழிப்பது அல்லது ஒரு தடையை நீக்குவது போன்ற கிளை இலட்சியம்தான் சமூக மாற்றத்தில் அல்லது சமூக இயங்கியலில் 'நிலையானதை' வடிவமைக்கின்றன. ஆனால் ஒவ்வொரு நிலையிலும் அது பல்வேறு வடிவங்களில் வெளிப்படும். அதே நேரத்தில் அது மாறும் தன்மை கொண்டதாகவும் காணப்படும். மாறும் தன்மை என்பது இவ்வாறே நோக்கப்படுகின்றது. எனவே எல்லா சமூக மாற்றங்களிலும் துணைக் குறிக்கோளை வரையறுப்பது அவசியமாகின்றது. சமூக மாற்றப் பணியை எதிர்கொள்ளும் முதல் எதிரி குறைவாக இருக்கலாம். அல்லது அதிகரித்திருக்கலாம். அதிகரிப்பு நிலை அதை வெளிப்படுத்துமாறு வேண்டி நிற்கலாம். அத்து மீறல்களின் போது அது சுடப்படலாம். அல்லது வேறு தீர்வுகளுக்கும் வரலாம். தற்காலத்தைப் பொறுத்தவரை காலனியம், குடியேற்றம், இனச்சுத்திகரிப்பு, அகதிமை, பெண்ணியம் போன்றவை இருக்க முடியும். அல்லது தேச உருவாக்கத்தில் சம பங்காளியாய் இருத்தல், சமத்துவம், ஷூறாவை ஒழுங்கமைத்தல், உம்மத்தை ஒருங்கிணைத்தல், பிக்ஹை புத்துயிர்ப்பாக்கல் போன்ற சமூக எழுச்சியை ஏற்படுத்துவதாக இருக்கலாம்.

பொதுக் குறிக்கோளுக்கும் கிளைக் குறிக்கோளுக்குமிடையில் பிரிப்பு அவசியமென ஏலவே குறிப்பிட்டோம். பொதுக்குறிக்கோளை வரையறுப்பது இலகுவானது. அது குர்ஆனினதும் சுன்னாவினதும் ஆதார சுருதியாக உள்ளது. குர்ஆனையும் சுன்னாவையும் கடைப்பிடிப்பது அவசியம் என்ற நியதியின் அடிப்படையில் பொதுக்குறிக்கோளை வரையறுப்பதில் கருத்துவேற்றுமை உருவாவதில்லை. அவ்வாறே கிளை இலட்சியங்களை வரையறுப்பதிலும் அவற்றின் பொது அம்சத்தில் கருத்து வேறுபாடு கிடையாது. என்றாலும் அவற்றை நுணுக்கமாக வரையறுப்பதிலும் அவற்றுக்கிடையில் 'முதன்மையானது' (அவ்லவிய்யா) எது என்பதை வரையறை செய்வதிலும் இஜ்திஹாத் பன்மைத்துவம் ஏற்பட வாய்ப்புண்டு. இக்கட்டத்தில் நாம் கருத்துவேறுபட்டால் கிளை இலட்சியங்களில் முதன்மைப் பாட்டை வரையறை செய்வதில் எழுந்த கருத்து வேறுபாடே அதற்கு காரணமாகும். கிளை இலட்சியங்கள் ஒவ்வொன்றினதும்; அவற்றுக்கிடையில் முதன்மையை வரையறுப்பதிலும் அவை இரண்டினதும்; வரையறுக்கப்பட்ட உண்மையான மூலம் பொதுக்குறிக்கோளேயாகும். அதன் மூலாதாரம் இறைவசனமே யாகும்.

உதாரணமாக பொதுக் குறிக்கோள்; இஸ்லாத்தை முஸ்லிம்களின் வாழ்வு அல்லது மொத்த உம்மத்தில் அல்லது குறித்தவொரு ஆள்புல எல்லைக்குள் நடைமுறைப்படுத்துவதாக இருந்தால் அதில் அழைப்பாளர்களிடையே எவ்விதக் கருத்துவேறுபாடுகளும் ஏற்பட மாட்டாது. ஆனால் குறித்த ஆள்புல எல்லையில் உள்ள பிர்அவ்னை எதிர்த்தல் அல்லது நிருவாக ஒழுங்கை மாற்றுதல், மத்திய அரசுடன் ஒத்துழைத்தல், சமூக அடிக்கட்டுமான வசதிகளை ஏற்படுத்தல், அல்லது அரசியல் தலையீடற்ற இஸ்லாமிய கல்வி, பொருளாதார சமூகக் கட்டமைப்பை உருவாக்குதல், அல்லது அரசுக்கிடையில் இணைப்புப் பாலமாகச் செயற்படல், புற ஆதிக்கத்தை எதிர்க்க உள்ளக எதிரியுடன் கூட்டுச் சேர்தல், பலவந்த வெளியேற்றத்தை எதிர்த்தல், அல்லது நிறைவேற்றதிகாரத்தை ஒழித்தல், குறித்த சூழலியல் அல்லது ஒழுக்கப் பிரச்சினைக்கு எதிர்ப்புத் தெரிவித்தல் அல்லது ஊடகச் சுதந்திரம், மனித உரிமைப் பிரச்சினை, ஏகத்துவக் கோட்பாட்டில் புகுந்துவிட்ட அனைத்திறைக் கொள்கையை எதிர்த்தல் அல்லது சிந்தனை, சட்டத்துறையில் ஏற்பட்ட இஜ்திஹாத் தேக்க நிலையை நீக்குதல் போன்ற அனைத்திலும் அனைவரும் உடன்பட்ட கருத்தைக் கொண்டிருப்பார்கள் என்று கூற முடியாது.

ஒவ்வொரு குறிக்கோளின் முக்கியத்துவத்தையும் அபாயத்தையும் வலியுறுத்தும் போதும் கருத்து வேறுபாடு அதிகரிக்கும். வேறுவகையில் கூறுவதானால் பல கிளைக் குறிக்கோள்களை எய்தாமல் பொதுக் குறிக்கோளை அடைவதும் சாத்தியமாகாது. அதே முஸ்லிம் சமூகம் அந்நிய அதிகாரத்தின் கீழ் அல்லது சிதறிய நிலையில் வாழுமாயின் நிலைமை இன்னும் மோசமாகும். எனவே பொதுக் குறிக்கோளை அடைவதற்கு எண்ணற்ற தடைகள் வந்து குவிய ஆரம்பிக்கும். பொதுக்குறிக்கோளை அடைவதற்கு அவை ஒவ்வொன்றையும் சீர் செய்ய வேண்டிய தேவையும் ஏற்படும். குறைஷிய ஆட்சி வீழ்ச்சிக்கு வராத நிலையில் இஸ்லாமிய சமூகம் சாத்தியப்பட்டிருக்க முடியுமா என்பதை சிந்திக்க வேண்டியிருக்கின்றது. மதீனாவில் யூதர்களின் கொட்டத்தை சாசனத்தை உருவாக்கி அடக்காது விட்டிருந்தால் மனிதர்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்திற்கு வந்திருப்பார்களா?!

# முதன்மையான இலக்கைத் தேர்வு செய்தல்

கிளைக் குறிக்கோள்களின் இந்தத் தொகுதியை ஒரே பாய்ச்சலில் ஒற்றை முறை வழியாலே அடைய முடியாது. எல்லாத் தேசத்திலும் எல்லா நிலையிலும் அந்த நிரற்படுத்தல் சரியாகவும் பொருந்திவர மாட்டாது. வேறுபட்ட கட்டங்களில் வேறுபட்ட இலக்குகளை எடுப்பதும் ஒவ்வொரு நிலையிலும் முதன்மை எதற்கு வழங்குவது என்பதை வரையறுப்பதிலிருந்தும் தப்பிச் செல்லவும் கூடாது. ஒரு இலக்கை அடுத்த இலக்கிலிருந்து முதன்மையாக்குவது அதன் சிறப்புத்தன்மையில் இருந்தல்ல. ஏனெனில் அனைத்து இலக்குகளிலும் அதன் அடிப்படை ஆதார சுருதியைப் பார்க்கும் போது அடையப்பட: சாதிக்கப்பட வேண்டியதே யாகும். ஆனால் 'சிறப்பியம்' என்பது ஒவ்வொரு தடையின் 'பருமனை' வரையறுப்பதாலும் குறிப்பிட்ட கட்டத்தில் அதன் வகிபாகத்தையும் பொறுத்தது. உதாரணமாக பலஸ்தீனில் சயனிஸ ஆட்சி நிலவுகிறது. எனவே உள்ளக வீழ்ச்சிக் கெதிராகவோ அல்லது 'விடுதலை இயக்கத்துக் கெதிராகவோ மோதுகைக் கட்டத்தை வைக்க முடியாது. இங்கு முதன்மையான பணி எதிரியின் இருப்பை அப்புறப் படுத்துவதேயாகும். ஏனைய பணிகளும் பிரச்சினைகளும் ஏற்றத்தாழ்வான பல கட்டங்களை நோக்கி நகர ஆரம்பிக்கும். அவற்றில் எதனையும் புறக்கணிக்க முடியாது. எதிரியின் இருப்புக்கெதிரான போராட்டத் தோடு முரண்படாதவாறு ஏனைய பணிகளை அதன் 'அளவு' பருமனுக் கேற்ப கையாள்வது அவசியமாகும். இக்கட்டத்தில் ஒரு அழைப்பாளன் இஸ்லாமிய அழைப்புப் பணியை செய்ய அல்லது அகீதாவை சீர்படுத்த அல்லது இஸ்லாமிய சிந்தனையை சீர்படுத்த அல்லது தனிமனித உருவாக்கம் குறித்துப் பேசினால் அதில்தான் அவர் ஈடுபட வேண்டும். அவர் எதிர்ப்புப் போராட்டத்தின் பக்கம் திரும்பக் கூடாது. அவருடைய பணிகளோடு ஒப்பிடும் போது அதை தாழ்ந்ததாக ஆக்குவது பல்வேறு கிளைக் குறிக்கோள்களுக்கு மத்தியில் முதன்மையை வரையறுப்பதில் குறித்த கோட்பாட்டை முன்னிறுத்தியதாக அது மாறக்கூடும். எனவே இங்கு இரண்டு இஜ்திஹாதுகளை ஒன்றுடன் ஒன்று சமதையாக அதனதன் சுயத்தையும் செல்நெறியையும் இழக்காமலும் உருவாக்க வேண்டிய தேவை ஏற்படுகின்றது. அவ்வாறு உருவாக்கினால் இவ்விரண்டு

செல்நெறிகளும் குறிப்பிட்ட தடையை குவிமையப்படுத்தும் போது ஒன்றை ஒன்று நிராகரிக்க மாட்டாது. அதாவது எதிரியின் இருப்பை நீக்குவதற்கான போராட்டத்திற்கு முக்கியமளிப்பவர்: த.்.வா செய்தல், அகீதா சீராக்கல், சிந்தனை சீராக்கல், தனிமனித உருவாக்கம் போன்றவற்றின் முக்கியத்துவத்தை மறுக்கமாட்டார். ஆனால் முதன்மையை குவிமையப்படுத்துவதன் எல்லைக்குட்பட்டுத்தான் இதற்குத் தீர்வு காண்பார். அகீதாவை சீராக்கல் பணிக்கு முதன்மை அளிப்பவரும் எதிரியின் இருப்புக் கெதிரான போராட்டத்தின் முக்கியத்துவத்தை மறுக்க மாட்டார். ஏனெனில் அவர் வரையறை செய்து கொண்டுள்ள முதன்மைகளுக்கு அது உட்படுகின்றது. ஆனால் இரு நிலைகளிலும் வேறுபட்ட முறை வழிகளுக்கு அல்லது செல்நெறிகளுக்கு முன்னால் நாம் நிற்கின்றோம். இதனால் யதார்த்தத்தில் வேறுபட்ட இரு விளைவுகளையும் நாம் சந்திக்க வேண்டி வரும். கிளைக்குறிக்கோள்களின் முதன்மையை வரையறுப்பதில் உள்ள முரண்பாடு எல்லா இடங்களிலும் நிகழும் சமூக மாற்றப்பணிகளில் அல்லது சமூக இயங்கியலில் நிகழ்ந்தே வருகின்றது.

கிளைக் குறிக்கோள்களை சட்ட ரீதியாக அல்லது கோட்பாட்டு ரீதியாக அல்லது ஒட்டுமொத்த சமூக இயங்கு திசைவழியைத் தீர்மானிப்பதாக வைத்து சிறப்பு எடுகோள் அடிப்படையில் 'முதன்மையை' வரையறை செய்யக் கூடாது. ஏனெனில் இவ்வனைத்துக் குறிக்கோள்களும் இஸ்லாமியத் தன்மை வாய்ந்தவை: ஷரிஅத்துக்கு உட்பட்டவை. எனவே அவை சாதிக்கப்பட்டு ஆகவேண்டும். ஆக 'முதன்மையை' வரையறுப்பதானது கால, இட, சூழல் வழங்கிகளுக்கு மத்தியில் குறிப்பிட்ட தடை, பருமன், அதன் வகிபாகம், அபாயம், முக்கியத்துவம் என்பவற்றோடு தொடர்புற்றதாக இருக்கும்.

# சமகால கிளைக் குறிக்கோள்கள்

பொதுக் குறிக்கோள்களை அடைவதற்கு தடையாய் இருப்பவைகளை அகற்றும் நோக்கில் தோன்றும் கிளைக்குறிக்கோள்களுக்கான பட்டியல் ஒன்றை தயாரித்துக் கொள்ளும் போது மேற்குறித்த கருத்து இன்னும் தெளிவுடையதாக மாறும். உதாரணமாக இரட்டைப் பேரினவாதம், பலவந்த வெளியேற்றம், பிராந்திய வல்லரசுகளின் ஆதிக்கம், கல்வி, பொருளாதார சமூகப் பின்னடைவுகள், முஸ்லிம் சமூகத்தின் உள்ளே வேர்பிடித்துள்ள மரபு வழிபாடு, ஊடகப் பயங்கரவாதம், முஸ்லிம்களை தனி உம்மத்தாக - தேசமாக அங்கீகரிக்காமை, வரலாற்றுச் சவால்கள், நவீன கொலனியம், உலக மயமாக்கம், நுகர்வியம், பிம்ப மைய ஆதிக்கம், சிறுபான்மையை அணிதிரளாமற் செய்யும் அல்லது காயடிக்கும் அரச சார்பற்ற நிறுவனங்கள் போன்ற 'குறிப்பான' திலிருந்து விடுபட்ட நீண்ட பட்டியலை கிளைக்குறிக்கோள்களாக முன்வைக்க முடியும். இஸ்லாமிய கிராமம் ஒன்றை அல்லது தன்னாட்சி அதிகாரப் பிராந்தியம் ஒன்றை அல்லது தன்னாட்சி அதிகார அரசுக்குள் அகச்சுயாதிக்கம் உடைய அதிகாரத்தைப் பெறுவது குறுங்கால அல்லது நீண்டகால இலட்சியமாக இருந்தாலும் மேற்குறிப்பிட்ட தடைகளைத் தாண்டியே ஆக வேண்டும். இத்தடைகள் கிளைக் குறிக்கோள்களாக மாறும் பட்சத்தில் 'முதன்மையாக்கல்' என்ற ஏணியை வரையறை செய்து கொள்ளுதல் வேண்டும். முதன்மையுடைய குறிக்கோளை அடைவதாயினும் அந்நிலையில் முதன்மையற்ற குறிக்கோள்களை அல்லது தடைகளை நீக்குவதாயினும் இவ்வேணி அவசியமாகும்.

முதன்மையாக்கலின் மிகப் பெரும் அபாயம் என்னவெனில் குறிப்பிட்ட இடத்துக்குள்ளேயே அது சுழன்றுகொண்டிருப்பதாகும். அடிப்படைக் காரணத்தையும் அல்லது ஒட்டு மொத்தக் காரணங்களையும் அல்லது எல்லா சமூக நிலைமைகளையும் அதற்குள்ளே அடக்கிக் கொண்டு ஏனைய குறிக்கோள்களை கொஞ்சமேனும் தொடாமல் முடங்கிப்போகும் நிலைமை ஏற்பட்டு விடும். பின்னர் நாம் கட்டியெழுப்பிய 'முதன்மை வாதத்தை' தகர்க்க நேரிடும். அதாவது தனிமனித சீராக்கம், கல்வி புகட்டல், சிந்தனைத் தெளிவை வழங்கல், அகீதாவை சீர்படுத்தல் போன்றவை இடம் பெறும்

போது குறிப்பிட்ட இடத்தில் பேரினவாதத்தின் ஆதிக்கம் அல்லது ஒரு பிர்அவ்னின் அதிகாரம், பாடசாலையில் இருந்து ஊடகம் வரை தனிமனித உருவாக்கத்தைக் கெடுக்கும் காரணிகள், மூளைசாலிகள் வெளியேற்றம், இன ஒதுக்கல், பிரதேச வாதம் போன்ற பல்வேறு தடைகள் இருக்கும் போது ஒன்றை மட்டும் முதன்மைப் படுத்துவதால் வெற்றி எப்படி சாத்தியப்படப் போகிறது? யதார்த்தத்தில் இவை எல்லாம் கிளைக் குறிக்கோள்களாக இருப்பதால் முதன்மையை அதன் வகிபாகத்தை மட்டும் வைத்து கணிக்கக் கூடாது. ஏனைய வட்டங்களை கட்டவிழ்ப்புச் செய்து நிலமை முழுவதையும் ஊடுபாவக் கூடிய தன்மை அதற்கிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். எனவேதான் முதன்மை இலக்கை எய்தச் செய்கின்ற பணியில் சிந்தனா எழுச்சி முக்கியமானதாகும். பொதுக் குறிக்கோளை அடைவதற்கு ஏதுவாக கிளைக் குறிக்கோள்களின் வெற்றிக் கதவுகளைத் திறக்கும் ஆற்றலை சிந்தனைப் பரவல் மூலம் பெற்றுவிட முடியும்.

நாம் ஒரு தீமையை வரையறை செய்யும் போது அது குறிப்பிட்ட எதிரியுடன் தொடர்புற்றதாக இருக்கும். அவன் அத்தீமையை போஷித்து வளர்ப்பவனாக இருப்பான். அந்த வகையில் நிறைவேற்றதிகாரமும் ஒரு தீமைதான். சிலபோது குறித்த தீமையை விட அது பெரிதாகவும் இருக்க முடியும். ஏனெனில் அவ்வதிகாரத்தினூடாகப் பல தீமைகள் ஏற்படுவதால் தீமைதான் எதிரி பற்றிய வரையறையைத் தந்து கொண்டிருக்கும். வெகுமக்கள் நிலைப்பட்ட போராட்டத்தைக் கொண்டுசெல்லும் போது தீமையை மிகக் கறாராக வரையறை செய்வது அவசியமாகும். இந்தச் சட்டகத்துக்குள் நின்று கொண்டுதான் அகீதாவை சீராக்கல், உள்ளகப் பிளவுகளை நீக்குதல், தியாகத்துக்குப் பழக்குதல் போன்ற பணிகளில் குவிமையப் படுத்த முடியும். அடக்குமுறை, கைது, சிறைவாசம், சித்திரவதைகளின் போது, பொறுமை, துணிவு போன்ற பண்புகளையும் குவிமையப்படுத்த வேண்டிவரும். மோதுகைக் கட்டத்துக்கு வருகின்ற போது அர்ப்பணிப்பு, முன்னிற்றல் போன்ற பண்புகள் அதிகம் தேவைப்படும். பொதுமக்கள் ஆதரவைப் பெறுவதற்காக வன்முறையற்ற சாத்வீக அணுகுமுறைகளையும் கையாள வேண்டி ஏற்படலாம். சமூக மாற்றத்துக்கு உதவுவதற்காக மக்களைத் திருப்பும் நுழைவாயிலாக அது இருக்கலாம். முஷ்ரிக்குகளை அகீதா மூலம் எதிர் கொள்ளலாம். முஸ்லிம்களாயிருந்தால் அகீதாவை சீராக்குவதன் மூலம் எதிர் கொள்ள முடியும். கிளை இலட்சியங்களை வரையறுப்பதின் முக்கியத்துவத்தை இவ்வாறே நாம் நோக்கலாம். எதிரிகளின் முன்னணி, தீமையின் வகை,

சமூக மாற்றத்தில் பங்குகொள்ளும் மக்கள் திரள் ஆகியவற்றைப் பொறுத்து முதன்மையின் ஏணியை நிறுத்த முடியும். இதில் உள்ள தவறு அதாவது முதன்மையை வரையறுப்பதில் உள்ள தவறு என்ன வெனில் ஒவ்வொரு நிலமைக்கேற்ப மாற்றத்தை நிகழ்த்துவதற்கு போதிய நிபந்தனைகளை கடைப்பிடிப்பதோடு இழுத்துச் செல்லமாட்டாது. மாறாக குறித்த இடத்தில் ஏனைய இலக்குகளை சாதிக்க விடாமல் குன்றச் செய்துவிடும். வேறு வார்த்தையில் கூறுவதனால் நபிமார்களின் அனுபவங்களை பல்வேறு சமூக மாற்றப் பணிகளில் ஆராயும் போது கிளைக்குறிக்கோளை வரையறை செய்வதில் ஒரு நியதி இருப்பதைக் காணமுடியும். அதை வரையறுப்பது எப்படி; அதை எடுத்துரைப்புச் செய்வது எப்படி; அதனை அணுகுவது எவ்வாறு; அதன் சட்டகத்துக்குள் தயார்படுத்திக் கொள்வது எவ்வாறு என்பதெல்லாம் திறந்த கதையாடல்களாகும். அதற்கான வாயில் அகலத்திறந்துள்ளது. அதைக் குறிப்பிட்ட அச்சில் மட்டும் வார்க்க முடியாது. ஒரு வாயிலால் மட்டும் அதனைக் கடக்க முடியாது. கால, இட, சூழமைவுக்கேற்ற அழகிய தேர்வு முக்கியமானதாகும். விளைவு, பயன் என்பவற்றைக் கொண்டே அத்தேர்வு இடம்பெறும். கிளைக்—குறிக்கோள்களுக்கிடையில் முதன்மையாக்கல் என்ற ஏணியை தூக்கி நிறுத்திவிட்டால் உடனே வேறு ஒரு சிக்கல் உருவாகி விடுகின்றது. அதுதான் இலக்கை நிறுவும் முறைமையாகும். அதாவது எதிரியை எதிர்கொள்ளும் முறைமையும் முதன்மைப் படுத்தலைக் கையாளுவதன் முறைமையும் ஒவ்வொரு இலக்கோடும் அதன் எல்லை, பருமனுக்கேற்ப கையாளுவதையும் பொறுத்ததாகும். அது சமூக இயங்கு திசைவழியில் உள்ள முறைவழிச்சிக்கலாகும். அதை ஸ்டடஜி, டெக்டிக் என்று கூறுகின்றோம்.

நிலையானது மாறக்கூடியது என்பதெல்லாம் முஹம்மத் (ஸல்) அவர்கள் அல்லது அவருக்கு முன்னைய நபிமார்கள் கிளைக் குறிக்கோளை அடைவதில் கடைப்பிடித்த முறைவழிகளின் பன்மைத்துவத்தோடு, வகைமையோடு தொடர்பானதாகும். பிரதான எதிரிக்கு அல்லது தீமைக்கு அல்லது ஒழுக்க வீழ்ச்சிக் கெதிராக மோதுகையைக் கொண்டு செல்வதில் ஒவ்வொரு தூதருக்கும் விசேட முறைவழிகள் இருந்திருக்கின்றன. இங்கு நாம் முறைவழி என்று குறிப்பது ஸ்டடஜி, டெக்டிக் என்ற பதங்களையே. இதை இஸ்லாமிய வாதிகளும் பயன்படுத்தத் தொடங்கியுள்ளனர். ஸ்டடஜி பன்முகப்பட்டதால் ஒரு நிலையில் இருந்து இன்னொரு நிலைக்கு ஓரிடத்திலிருந்து இன்னோரிடத்திற்கு ஒரு சூழ் நிலையில் இருந்து இன்னொரு சூழ்நிலைக்கு மோதுகையை நிகழ்த்துவதற்கான டெக்டிக்கும் பன்முகப்பட்டதாக அமைகின்றது. எல்லாத் தீர்க்கதரிசிகளும் பங்குகொள்ளும் நிலையான அம்சத்தைப் பொறுத்தவரையில் அது தௌஹீதுக்கான அழைப்பாகும். அல்லது குப்ர், ஷிர்க்குக்கு எதிரான போராட்டமாகும். எனவே ஒவ்வொரு நிலையிலும் ஒரு குறிப்பிட்ட எதிரியை எதிர்கொள்ள வேண்டிய அவசியத்தை அது ஏற்படுத்துகின்றது.

இப்றாஹீம் (அலை) சிலையுடைப்பைச் செய்து அதன் போலித்தன்மையை வெளிப்படுத்தினார். அதிகாரத்தின் குறியீடாக இருந்த அச்சிலை உடைக்கப்பட்டது. அதன் பின் அவர்மீதான வன்முறை ஆரம்பித்தது. எனவே மற்றொரு இடத்தில் தனது கொள்கையை நிலைநாட்டுவதற்கான ஹிஜ்ரத்தை மேற்கொள்கிறார். மனைவி உட்பட யாரும் தூதை ஏற்காத லூத் (அலை) தன் ஊரைவிட்டும் வெளியேறுகிறார். நூஹ் (அலை) கப்பல் கட்டும் பணியை தனது முறைவழியாக்கிக் கொள்கின்றார். துல்கர்னைன் பல பௌதீகக் காரணிகளை தன்வயப்படுத்திக் கொண்டு பெரும் வெற்றியை ஈட்டியுள்ளார். யூனுஸ் தப்பியோடி தனது பணியை மேற்கொண்டார். ய:கூப் (அலை) தனது குழந்தைகளை எகிப்துக்கு அனுப்பும் போது “பிள்ளைகளே! ஒரு வாயிலால் நுழையாதீர்கள், பல்வேறு வாயில்களால் நுழையுங்கள்'' (யூசுப் 67) என்று உபதேசிக்கின்றார். எனவே ஒரே நேரத்தில் பல்வேறு தெரிவுகள் இருக்க

முடியும். ஆனால், அவர்களை இணைத்து நிற்கும் புள்ளி எகிப்தை நோக்கிய பயணம்தான். மூஸா பிர்அவ்னைத் திருத்துவது சாத்தியமாகாத போது தனது தோழர்களுடன் வெளியேறுகிறார்.

ஆனால் இறுதித் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் சமூக இயங்குதிசை வழிகளை அறிமுகம் செய்திருப்பதைப் போல் யாரும் வரலாற்றில் செய்யவில்லை என்பதே உண்மையாகும். ஆரம்பத்தில் குறைஷித் தலைமை, பின்னர் மதீனாவில் யூதர்களின் ஷிர்க், அரேபிய ஜாஹிலியத், மக்கா வெற்றி, பின்னர் உலகம் முழுவதும் தூதைப் பரப்புவதில் மோதுகையைப் பயன்படுத்திய முறைவழிகள் அனேகம். அம்முறை வழிகளில் விரிவும் ஆழமும் இருக்கின்றன. மாறாததும் மாறக்கூடியதும் இருக்கின்றன. பல்வேறு நிலைகளையும் கட்டங்களையும் அது கொண்டிருக்கின்றது. ஒவ்வொரு கட்டத்திலும் நிலையிலும் சூழமைவிலும் மிகப் பொருத்தமான தீர்வுகளையும் அவை முன்வைக்கின்றன. இப்பாரிய சமூக மாற்றப் பணியில் அல்லது இயங்கியலில் த∴வா உரையாடல்களுக்கான மிக உன்னத வழிமுறைகளை இறைத்தூதர் தனது சீறாவில் விட்டுச் சென்றுள்ளார். துன்பங்களைச் சகித்தல், பொறுமை காத்தல், ஹிஜ்ரத் மேற்கொள்ளல் போன்ற அரிய பல குணங்களையும் அவர் தந்துள்ளார். மக்கா கட்டத்தில் மோதுகையை நிகழ்த்தும் வெற்றிகரமான முறைவழியாகவும் அது இருந்தது. பின்னர் பாதுகாப்பான அத்திவாரத்தை எழுப்புவதற்கு புலப்பெயர்வு வழிமுறை கையாளப்படுகின்றது. அல்லது, மதீனாவில் ஓர் அரசை நிறுவுவதற்கான பணிகளை நபிகளார் மேற்கொள்கின்றார். போர்ப் பிரகடனம் செய்யப்படுகின்றது. ஜிஹாத் கொடி உயர்கிறது. இக்கட்டத்தில் பல்வேறு பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் நிகழ்கின்றன. குறைஷித் தலைமைகளுடன் மக்காவில் நிகழ்ந்த பிரதான போராட்டத்துக்குப் புறம்பாக கிளைப் போராட்டங்களும் நடைபெற்று வந்தன. அதில் இஸ்லாமிய அரசுக்கான முன் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வந்தன. இவ்வனுபவத்தில் வெற்றிகளும் தோல்விகளும் மாறிமாறி ஏற்படத்தான் செய்தன. ஒப்பந்தங்களால் பேச்சுவார்த்தைகளால் உறுதிப்பட்ட உறவு மோசடியாலும் ஏமாற்றாலும் உடைபட ஆரம்பித்தது. ஸ்திரமும் வாய்மையும் மேலோங்கி இருந்ததைப் போல நயவஞ்சகமும் குரோதமும் அங்கு கோலோச்சவே செய்தன. ஹுதைபியா உடன்படிக்கையுடன் ஸ்டடஜியில் ஒரு சமநிலைக் கட்டத்தை நோக்கி இஸ்லாமிய சக்திகள் நகரத் தொடங்கின. இது மோதுகை ஸ்டடஜிகளில் மிக உயர்வான கட்டமாகும். ஒன்றில் தோற்கவோ அல்லது

வெல்லவோ முடியுமான கட்டமாகவும் அது இருந்தது. இக்கட்டத்தில் செயல்படும் முறைவழி; ஒப்பந்தம், போர் நிறுத்தம், ஒப்பந்த ஷரத்துகள் என்ற நிழலில் மிகுந்த சிக்கலானது. எதிரியின் அசைவுகளை நோக்கிய அதி விழிப்பையும் கறாரான முடிவையும் பாய்ச்சலையும் நிகழ்த்துவதற்கு மிகப்பெரும் அர்ப்பணிப்பைச் செய்ய வேண்டியிருந்து. போரையோ படையணியையோ நேரடியாகக் கையாளாது, பரஸ்பர ஆக்கிரமிப்புக் கட்டமாக அது அமைந்திருந்தது எனலாம். இக்கட்டம் பின்னர் தாக்குதல் நிலைக்கு மாறுகின்றது. எதிரியே துணிச்சலற்ற நிலைக்கு மாறுகின்றான். அவனது உள்ளகப் பலம் வீழ்ச்சியடைகின்றது. அவனது அணிகள் சின்னாபின்னப் படுகின்றன. புற ஆக்கிரமிப்பு அதிகரிக்கின்றது. ஈற்றில் ஹுதைபியாக உடன்படிக்கைக்கு எதிரி ஓடோடி வருகின்றான். எதிரி அவனது முடிவை அவனது 'கைலாகி'னாலேயே அறிவித்துவிடுகின்றான்.

## சீறாவில் சமூக மாற்ற முறைவழிகள்

ஸ்டடஜி, டெக்டிக் எனும் முறைவழிகளுக்கு இறைத்தூதரின் சீறாவில் பன்மடங்கு உதாரணங்களைக் காட்ட முடியும். காலம், இடம், சூழல், எதிரி, மக்கள், வலுசமநிலைகள் போன்றவற்றோடு தொடர்புடைய வழங்கிகளில் அவற்றின் தாக்கத்தையும் நன்கு அறியக்கூடியதாக உள்ளது.

முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது அல்குர்ஆன் இறங்குவது இறை நாட்டமாக இருந்தது. த்ஃ.வாவுக்குரிய 'வெளி'யாக ஆரம்பத்தில் அரபுத் தீபகற்பமே இருந்தது. அப்பிரதேசம் தன் உள்ளகக் கட்டமைப்பில் பல்வேறு அரபுக் கோத்திரங்களையும் பல இனக்குழுக்களையும் நகர்ப்புறங்களிலும் நாட்டுப் புறங்களிலும் கொண்டிருந்தது. தீபகற்பத்தின் மத்தியில் அசையும் நாடோடி அரபுக் குழுக்களை மையப்படுத்திய ஒரு நாகரீக சீர்வலையும் அங்கே பின்னப்பட்டிருந்தது.

மக்கா, எத்ரிப், தாயிப் ஆகிய பிரதேசங்களில் பொதுவாக கோத்திரங்கள் சுதந்திரத் தன்மையுடன் காணப்பட்டன. பாரசீக, ரோமா ஆகிய அக்கால வல்லரசுகளின் தலையீட்டை விட்டும் அவை தொலைவில் இருந்தன. தெற்கில் இருந்த ஹபஷி நாடு ரோம பாரசீக நாடுகளுடன் மோதுகையில் இருந்தது. அது அறபுத் தீபகற்பத்தில் ஒரு நட்புறவை நாடி நின்றது. சர்வதேச வர்த்தகப் பாதை அரபுத் தீபகற்பத்தை ஊடறுத்து கிழக்கே இந்தியாவரையும் தெற்கே ஆபிரிக்கா வரையும் சென்றது. பொதுவாக, மக்கா, மதீனா, அரபு நாட்டுப் பொருளாதாரமும் பல்வேறு பண்பாடுகள், வேறுபட்ட அரசியல் முறைகளுடன் ஒரு கூட்டுறவை ஏற்படுத்திக் கொடுத்தது. அயலிலேயே கிறிஸ்தவமும் யூதமும் காணப்பட்டது. கிறிஸ்தவ யூத மதங்களைத் தழுவிய அரபுக் கோத்திரத்தவரும் அங்கே இருந்தனர்.

அரசியல் அறிவு, போராட்டக் கலை, சமூக நிலவரங்கள், உலகப் பொருளாதார விடயங்களைப் பார்ப்பதை விட்டு ஒட்டு மொத்தமாக ஜாஹிலியா என அடையாளப்படுத்துவது இயங்கியலைப் புரிந்து கொள்வதற்குத் தடையாய் அமைகின்றது. ஜாஹிலிய்யா என்பது ஒரு

பண்பு சார்ந்த புரிதலே அன்றி அதில் எடுப்பதற்கு ஒன்றுமில்லை என்று கூறுவதற்கல்ல. அகீதாவில் காணப்பட்ட ஷிர்க், கோத்திர வெறி, மரபு மோகம், சமூக அநீதிகள், குற்றச் செயல்கள் போன்றவற்றை விளக்கும் ஒரு கருத்தாக்கமே ஜாஹிலிய்யத் ஆகும். அதேவேளை, அறபுத் தீபகற்பத்தின் சனத்தொகைக் கட்டமைப்பு, திசைவழிகள், அறிதல் முறைகள், ஒழுக்க மதிப்பீடுகள், மையமற்ற உள்ளக வலுசமநிலைகள், உலகப் பொருளாதாரத்தில் அதன் வகிபாகம், உலக மோதுகையில் அதன் கேந்திர முக்கியத்துவம் போன்ற பல்வேறுபட்ட பண்புகளையும் அது கொண்டிருந்தது. இவ்வனைத்து இயங்கு திசை வழிகளையும் இறைத்தூதர் பயன்படுத்திக் கொண்டதால் இறைத்தூது வெற்றிகண்டது. அரசை நிறுவுதல், உம்மத்துக்களை ஒருங்கிணைத்தல், உலகளாவிய வெற்றி, த:.வாவின் பரவல் அதற்குப் பின்னரே ஏற்படுகின்றன.

## மக்கா காலகட்ட முறைவழி

சமூக மாற்றத்துக்கான ஷரத்துகள் இக்கட்டத்தில் காணப்பட்டன. முதலாவது வஹி அருளப்படல் அடுத்தது அரபுத் தீபகற்பத்திலும் அதற்கு வெளியிலும் உலக அளவில் காணப்பட்ட அக, புற பௌதீகக் காரணிகளை இரண்டாவதாகக் குறிப்பிடலாம்.

இங்கு கிளைக்குறிக்கோள் மக்காவில் சிலைகளை உடைத்தல், ஷிர்க்கை வீழ்த்துதல், அரசை நிறுவுதல், உம்மத்துக்களை ஒருங்கிணைத்தல் என வரையறை செய்யப்படுகின்றது. பின்னர் சுற்றியிருந்த வல்லரசுகள் இரண்டுடனும் மோதுகை ஏற்படுகின்றது. அதை அடுத்து இஸ்லாம் உலகத் தலைமைத்துவத்திற்கு நகர்த்தப்படுகின்றது.

ஸ்டடஜி, டெக்டிக் முறைவழிகளைப் பொருத்தவரை கோத்திரங்களுக்கிடையிலான Power Strugle ஐ கவனத்திற் கொண்டே; மக்காவில் குறைஷியர்களுக்கிடையே நிலவிய உள்ளக வலுசமநிலைகள், செல்வாக்குகள் கவனத்திற் கொள்ளப்பட்டன.

பகிரங்க த∴வாவுக்கு ரஸூலுல்லாஹ் கட்டளையிட்டார்கள். யாரும் அவரைக் கொல்லவோ, நீதிமன்றத்தில் நிறுத்தவோ முடியாது என்ற நம்பிக்கையில் குறைஷித் தலைமைகளோடும் அவர்களின் மதத்தோடும் சவால்விட்டார்கள். இறைபாதுகாப்போடு போராட்டம் அவரைப் பாதுகாத்தது. அடுத்தவர்கள் அதை ஏற்றுக் கொண்டார்கள். குறைஷியரும் ஏனைய அரபுக் கோத்திரங்களும் அவரைப் பாதுகாக்கும் நிலைக்கு வந்தன. மக்காக் கால கட்டத்தில் இறைத்தூதர் கையாண்ட முறைவழி அதன் பயனைக் கொடுத்தது. இதனை நாம் சீறாவில் ஒப்பந்தங்கள் என்ற தலைப்பில் விரிவாக விளக்கியுள்ளோம். மக்காவில் எதிர் கொள்ளல் முறைவழி சமூகத்தின் நிலையையும் கட்டமைப்பையும் கருத்திற் கொண்டு எடுக்கப்பட்டது. எவ்வாறு அணுகுவது; குறித்த கட்டத்தின் நிலமையினை அதன் பண்புகளுக்கு ஏற்ப எவ்வாறு பேணுவது என்பவற்றுக்கான உயிர்ப்பான முன்மாதிரியை அன்னார் வழங்கினார். இது இறைபாதுகாப்போடு த∴வாவுக்கு கிடைத்த ஆரம்ப நிலைப்

பாதுகாப்பாகும். இது ஆரம்பத்தில் பலவீனமாக இருந்தாலும் ஒரு கூரையாக இருந்தது. துன்புறுத்தலுக்கு நோவினைக்கு விமர்சனத்துக்கு இப்பாதுகாப்பு வழிவிட்டாலும் கொலைக்கு இட்டுச் செல்லவில்லை. இப்பாதுகாப்புக் கூரையின் கீழ் தூண்டிகளின் பல்வேறு வடிவங்களுக்கும் அனுமதிக்கப்பட்டது. இது மோதுகையில் குறித்த சமநிலையைப் பேணியதாக இம்முறைவழி காணப்பட்டது.

இக்கட்டம் மக்காவில் த:்.வாவின் வளர்ச்சிக்கட்டத்தை அடையமுடியுமான கூரையை எல்லைப்படுத்திக் கொண்டதைவிடவும் அதிகமாக எடுத்துக் கொள்ள முடியாத போதிலும் அதன் இறுதி எல்லைகளை இக்கட்டத்திலேயே அடைய ஆரம்பித்தது. இங்கிருந்துதான் இறைத்தூதர் த:்.வாவைக் கட்டியெழுப்புவதற்கு பாதுகாப்பான ஒரு தளமாற்றத்தைச் செய்வதில் குறைஷிகளுடன் போட்டியிடக்கூடிய வேறு அதிகார மையங்களை அல்லது உதவியைப் பெறுவதற்கான நடவடிக்கையில் இறங்குகின்றார். நபிகளாரைக் கொல்வதற்கு குறைஷித்தலைமை முடிவெடுத்த போது மக்காவில் பாதுகாப்புக் கூரையின் எல்லையை அவரால் உறுதி செய்துகொள்ள முடிந்தது. முன்னைய விதியின்படி அல்லது மரபின்படி குறைஷித்தலைமை நடந்துகொள்ள வில்லை. அதற்கெதிராகவே செயற்பட்டது. அதுபோதாதென்று அவரின் கொலையில் அனைத்துக் கோத்திரமும் பங்கெடுக்க வேண்டுமென்ற வலுவான தீர்மானமும் குறைஷித் தலைமையால் எடுக்கப்பட்டது.

இங்கே மக்காவில் இருந்து எத்ரிபுக்குச் செல்வதற்கான ஹிஜ்ரத் 'ஷரத்துக்களி'லிருந்து வர ஆரம்பிக்கின்றது. நுஸ்ரத் அடிப்படையில் இறைத்தூதர் ஒப்பந்தம் செய்துகொள்கின்றார். இவ்வொப்பந்தம் கூட கொலைத் தீர்மானத்தை குறைஷியர் விரைந்து செயல்படுத்துவதற்கான முக்கிய காரணமாக எடுக்கலாம்.

மக்கா காலகட்டத்தில் சமூக மாற்ற இயங்கியல் முறைவழியை நாம் உற்று நோக்குகின்ற போது சிக்கலான, ஒன்றுடன் ஒன்று ஊடாடிய நிபந்தனைகளின்; மக்காவின் அகப்புற, அரேபிய, சர்வதேச நிலமைகளின் பண்பு நிலைப்பட்ட தொகுப்பாகவே அது அமைந்திருக்கின்றது.

ஆரம்பத்தில் அவதானிக்க வேண்டியது அதிகாரம், செல்வாக்கு என்பவற்றைப் பகிர்வதிலும் குறிப்பிட்ட அதிகாரப் பின்னணியில் தீர்மானம் எடுப்பதிலும் ஒரு மையமற்ற தன்மை காணப்பட்டது. அங்கு ஒரு தனிநபர்

ஆட்சியோ, ஏக தலைமைத்துவத்தின் கீழான ஒருமைப்பட்ட பிரிவோ இருக்கவில்லை. இது மக்காவுக்குப் பொருந்துவதைப் போல அரபுத் தீபகற்பம் முழுமைக்கும் பொருந்திவரும் பண்பாகும். நேரடியான சர்வதேச தலையீடு அற்று சுயாதீனமாகவே இந்நாடக மேடை அரங்கேறுகிறது. அதாவது வலு சமநிலையைத் தீர்மானிப்பதில் அகக் காரணியின் வகிபாகம் கண்டிப்பானதாக இருந்தது.

மக்கா காலகட்டத்தை அதில் கடைப்பிடிக்கப்பட்ட முறைவழிகள் அணுகுமுறை ஆகியவற்றை முன்னைய சமநிலைகளின் தொகுப்புக்கு உட்பட்டே பார்க்க வேண்டும். அதிகாரத்தின் வகை, அதன் கட்டமைப்பின் வடிவங்கள் உதாரணமாக நகரங்களின் சுயாதீனத் தன்மை, கோத்திரங்களின் சுதந்திரம் என்பவற்றோடு அப்போது நிலவும் 'பொதுப்புத்தி' (கூட்டு நினைவு) மனித உறவுகளைக் கட்டமைத்துள்ள அதற்கு உதவும் மரபுகள் அங்கே நிலவும் போராட்ட வடிவங்கள் என்பவற்றையும் சேர்த்துப் பார்ப்பது முக்கியமாகும். உதாரணமாக, வேறொரு சூழலில் மற்றொரு இடத்தில் காப்புமுறை வழியை நடைமுறைப் படுத்த முடியுமா?! வேறுபட்ட பண்புகளைக் கொண்ட முதற்கட்டத்தில் சமூக மாற்றத்துக்கான முறைவழியை எடுக்கவேண்டிய நிலை காப்புமுறைக்கு இருக்கவில்லை. இறைத்தூதரின் முறைவழியைத் தவிர வழங்கிகளின் மாறும் தன்மையே அதற்குக் காரணமாகும். இங்கு சுன்னாவைக் கடைப்பிடித்தல் என்பது உள்ளடக்கமே அன்றி உருவம் அன்று. கருத்தியல் தேசத்துக்கான அக, புற தன்னியல்பான, பருண்மையான காரணிகள், வழங்கிகள் பற்றிய அறிகையாகும். சமூக மாற்றத்துக்கான, இயங்கியலுக்கான முறைவழியை வரையறுக்கும் போது அல்லது கட்டங்களாகப் பிரிக்கும் போது முதற்கட்டம் மக்கா கால கட்டமாகக் கொள்ளப்படுகின்றது. அதைப் பொதுவான குறியீட்டு அர்த்தத்திலேயே எடுத்துக் கொள்ள வேண்டும். அதன் உள்ளீட்டைப் புரிந்து கொள்ளவேண்டும். சொல்லுக்குச் சொல் வார்த்தைக்கு வார்த்தை எடுத்துக் கொள்ளக் கூடாது. அல்லது அதன் வடிவத்தைக் கொண்டாடவே கூடாது.

# மதீனா காலகட்ட முறைவழி

மதீனா காலகட்டத்தில் அல்லது அரசுருவாக்கத்தில் அல்லது அத்திவாரமிடலில் இறைத்தூதரின் சமூகமாற்றத்துக்கான முறைவழியை நாம் ஆழமாகப் புரிந்துகொள்வது முக்கியமாகும். இது ஆக்கிரமிப்புக் கட்டமாகும். துடைத்தழிப்புக்கான முயற்சிகளைத் தடுத்து நிறுத்திய கட்டமென்றும் கூறலாம். ஸ்டடஜி சமநிலையைப் பெற்றுக் கொடுத்த ஹுதைபிய்யா கட்டத்தை அடைவதற்கு பேச்சுவார்த்தைகளும் ஒப்பந்தங்களும் போர் வியூகங்களும் முனைப்புப் பெற்ற கட்டமாகவும் இது கருதப்படுகின்றது. பொதுத்தாக்குதலை ஆரம்பிப்பதற்கான தயார்நிலைக் கட்டத்திற்கு நகருவது இங்கிருந்துதான். இதுதான் மக்கா வெற்றிக் கட்டமாகக் கொள்ளப்படுகின்றது.

இக்கட்டத்தில் சமூக மாற்றத்துக்கான முறைவழி அதன் பொது ஸ்டடஜி தரத்தில் அல்லது நாளாந்த டெக்டிக்கில் விரிவான தீர்வுகளோடு எத்ரிபில் உள்ள சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் மிக நுண்ணியதாக கையாளப்படுவதைக் காணலாம். இதைப்பிரதிபலிப்பது மதீனா சாசனமாகும். அதன்பின் ஹிஜ்ரத்திலிருந்து ஹுதைபியா வரை நடைபெற்ற போர்களைக் குறிப்பிடலாம். இதில் உள்ளடங்கியதாக பேச்சுவார்த்தைகள், மோதுகைகள், அதில் ஏற்பட்ட கஷ்டங்களைக் குறிப்பிடலாம். சமூக மாற்றத்துக்கான முறைவழிகளையும் விதிகளையும் அபரிமிதமாகக் கொண்டிருந்த கட்டமும் இதுவேயாகும். அதாவது வடிவத்தில் அல்ல, உள்ளடக்கத்தில் ஆகும். இரு அனுபவங்களில் ஒத்த நிலைகள் அங்கு காணப்படுகின்றன. கால, இட, சூழமைவுக் கேற்ப அது பிரயோகிக்கப்பட்ட முறைகளுக்கிடையில் உள்ள வேறுபாட்டைப் புரிந்து கொள்வது முக்கியமாகும். அரபுத் தீபகற்பத்தில் நகரங்களின் சுயாட்சித்தன்மை, கோத்திரங்களின் சுதந்திரம், மத்திய அரசின்மை, மத்திய படைப்பிரிவின்மை, சர்வதேசத் தலையீடின்மை போன்ற பண்புகள் மக்கா, மதீனா, பத்ஹ் காலகட்டங்களின் ஒவ்வொரு முறைவழியையும் தீர்மானிப்பதற்கு உதவுகின்றது. நுஸ்ரத், ஹிஜ்ரத், அரசுருவாக்கம், விடுதலை ஆகிய செயற்பாடுகளுக்குப் பின்னால் த:.வா பரவுவதற்கும் உலகளாவிய வெற்றியைப் பெறுவதற்கும் வழிசமைத்துக் கொடுத்தது என்றால் மிகையல்ல.

# சீறாவும் வன்முறையும்

பனிப்போருக்குப் பிந்தி வன்முறை பற்றிய கருத்தாக்கமானது மிகுந்த கவனத்தை பெற்று வருகின்றது. சமூக மாற்றுக்கான முறைவழிகள் பற்றிச் சிந்திக்கின்றபோது அதற்கெதிரான சக்திகள் வெல்லப்பட இதன் தேவை உணரப்படுகின்றது. எனவே வன்முறை பற்றிய கருத்தாக்கமானது இஸ்லாத்தோடு எந்தளவு தொடர்புபடுகின்றது என்று ஆராயப்படுவது அவசியமாகும்.

வன்முறை என்ற சொல்லாடல் பெரும்பாலும் பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் ஆகிய சொல்லாடலுடன் இணைத்தே பார்க்கப்படுகின்றது. வரலாற்றின் தொடக்கத்திலிருந்து இந்த வன்முறை தொடர்ந்து வருகின்றது. நாடுகள், இனக்குழுமங்களுக்கிடையில் முடிவுறாத போராட்டங்களின் நீண்ட பட்டியலை தரமுடியும். உள்நாட்டுப் போர், உள்நாட்டுப் புரட்சி, எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் என்று அவற்றை வகைப்படுத்தியும் அறியலாம்.

வன்முறையை நியாயப்படுத்தாத அல்லது அதனோடு கூட்டுச்சேராத/ இணையாத சக்திகள் வரலாற்றில் காண்பது மிக அரிது. வன்முறையை மறுப்பவர்கள், ஆயுதத்தைத் தொடாதவர்கள் மிகக் குறைவு. படையோ, இராணுவமோ, நீதிமன்றமோ, சிறையோ, எல்லைப் பாதுகாப்போ இன்றி அல்லது சிறிய அளவிலேனும் வன்முறை இன்றி ஒரு நாடோ, அரசோ, உருவாக வில்லை என்பதுதான் வரலாறாகும். நாடுகளுக்கிடையே எல்லைப்பாதுகாப்புக்குக் கூட இராணுவம் தேவைப்படுகின்றது. தற்போதைய மேற்கத்திய கருத்தாக்கத்தில் வன்முறை என்பது சற்று ஆழமான புரிதலை வேண்டி நிற்கின்றது.

ஒவ்வொரு நிலையிலும் அதன் இயல்பு, இலக்குகள், அவசியம் கையாள வேண்டிய நிர்ப்பந்தம் என்பவற்றுக்கேற்ப வன்முறை பற்றிய நிலைப்பாட்டை எடுப்பது அவசியமாகிறது.

வன்முறையின் பக்கம் சார்ந்திருப்பதைப் பொறுத்தவரையில் அது புலமை வட்டத்தோடு தொடர்பானதா அல்லது அந்த வன்முறையின் விளைவால்

வந்துசேரக்கூடிய தாக்கங்களை வைத்து அதை மொத்தமாக மறுதலிப்பதோ, அல்லது ஒட்டுமொத்தமாக அங்கீகரிப்பதே நல்லதா என்ற கேள்வி எழுகின்றது.

இந்த விடயத்தை விளக்குவதற்கு நாம் இஸ்லாத்திடம் வந்தால் அங்கே இஸ்லாம் ஜிஹாதுக்கு அழைப்புவிடுத்த நிலையும் காணப்படுகின்றது. அழகிய உபதேசம், அகிம்சை மூலம் தீர்வு காணப்படுவதையும் அவதானிக்க முடியும். சிலபோது இரண்டும் கலந்த நிலையும் காணப்படுகின்றது. அன்பு, கருணை, பொறுமை, சகிப்பு என்ற நிலைகளிலிருந்து போராட்டக்கட்டத்துக்கு நகர்ந்ததையும் அவதானிக்க முடிகிறது இஸ்லாமிய அகீதாவில் அல்லது இஸ்லாமியப் பண்பாட்டில் போராட்டம் இரண்டாம் பட்சமானவை அல்லது இறுதித் தீர்வாக இருக்குமாயின் மேற்கத்தியப் பண்பாட்டில் அது மையமாக இருக்கின்றது.

இஸ்லாம் வன்முறையை மொத்தமாக தடைசெய்கின்றது என்று யாரும் கூற முடியாது. மாறாக வன்முறைக்கான ஒழுங்கு விதிகளை வைக்கமுடியும். அல்லது வன்முறைகளுக்கு இட்டுச் செல்லாதவாறு பயிற்றுவிக்க முடியும். முஸ்லிம்களுக்கும் முஸ்லிம் அல்லாதவர்களுக்குமிடையிலான உறவாயினும் அல்லது அவர்களுக்கிடையிலான உறவாயினும் இத்தலைப்பு ஒவ்வொரு நிலைமைக்குரிய சூழ்நிலையிலும் விவாதிக்கப்பட வேண்டியதாகும். இது கோட்பாடு சார்ந்ததாகும். மேற்கத்திய வாதிகளும் மதச்சார்பற்ற புலமையாளர்களும் இஸ்லாத்தையும் வன்முறையையும் இரு அளவுகோள்களின் கீழ் உள்ளடக்கி ஆராய்கின்றனர். இஸ்லாம் வாளாலேயே பரப்பப்பட்டது வாளின் வரலாறே இஸ்லாத்தின் வரலாறு என்றவாறு எழுதியுள்ளனர். இன்னொருசாரார் இஸ்லாம் தாராளத்தன்மை கொண்ட சமயம், எந்தவடிவில் வந்தாலும் அது வன்முறையை முற்றாக மறுக்கின்றது என்றபடி எழுதி வருகின்றனர். இஸ்லாமிய அணி வன்முறையைப் பயன்படுத்தினால் அது இஸ்லாத்திற்கு வெளியிலானது, அந்நியமானது என்று அவர்கள் கூறுகின்றனர்.

## முன்னேற்பாடுகளுக்கும், அமுலாக்கலுக்குமிடையில் வன்முறை பற்றிய தீர்மானம்

வன்முறை அவசியம் எனக் கூறுவோர் முன்வைக்கும் காரணங்கள் குறித்த

நிலைமையின் முன்னால் பன்முகப்பட்டதாக காணப்படுகின்றன. குப்ர், ரித்தா சிலநேரங்களில் காரணமாக இருக்க காலணித்துவ ஒத்துழைப்பு மற்றொரு பொழுதில் காரணமாகின்றது. அல்லது அடக்குமுறை அதிகாரம், சித்திரவதை இன்னொரு சந்தர்ப்பத்தில் காரணமாக முன்வைக்கப்படுகின்றது. எந்த சீர்திருத்தத்திற்கு அரசு அனுமதிக்காத நிலை, சுதந்திரமாக சுவாசிக்கவே முடியாத நிலையில் வன்முறையைத் தவிர வேறு வழி இல்லையோ அங்கு நியாயமான காரணம் வந்து விடுகின்றது. இன்னும் சில வேளைகளில் அனாச்சாரங்களும் சீர்கேடுகளும் மலிகின்றபோது வன்முறை உருவாக வழியேற்படுகின்றது. அருகே இருக்கும் அரசின் அச்சுறுத்தலிலிருந்தும் தன்னைக் காத்துக் கொள்ள வன்முறையை நாட வேண்டியுள்ளது.

இந்த விளைவை அடைய முடியமான ஒவ்வொரு தர்க்கத்தையும் நாம் வைக்க வேண்டும். அதன் வினைமையின் தரத்தை, நோக்குநிலையை அல்லது முன்னேற்பாடுகளின் சரியான தன்மையை அல்லது சரியற்ற தன்மையை பார்க்கக் கூடாது. அதாவது வன்முறையை பயன்படுத்துவதற்கான தீர்மானத்தை எடுப்பது கூடுமானதா என்பதிலேயே எமது கவனக் குவிப்பைச் செய்ய வேண்டும்.

முன்னேற்பாடுகளின் பக்கம் குறிப்பாக இறை நிராகரிப்பு அல்லது றித்தா போன்ற விடயங்களாக இருந்தால் அதற்குரிய பிக்ஹ் ரீதியான முடிவை கவனமாக ஆராய்வது அவசியமாகும். இது தொடர்பாகத்தான் விவாதமே நிகழ இருக்கின்றது இதன் அபாயத் தன்மை காரணமாகத்தான் இரண்டாம் கட்டத்திற்கு நாம் நகரவேண்டியுள்ளது அது வன்முறைக் கட்டமாகும்.

இங்கு நாம் விவாதிப்பது வன்முறையோடு தொடர்பான கருத்தாகும். இந்த முன்னேற்பாடுகளுக்கு அல்லது அவற்றில் சிலவற்றுக்கு இறுதித் தீர்வை அது கொண்டு வரவேண்டுமென்ற அவசியம் கிடையாது.

இதை வேறு வார்த்தையில் சொல்வதானால் வன்முறை நோக்கை எட்டுவதற்கான முன்னேற்பாடுகளுக்கும் வன்முறையைப் பயன்படுத்துவதற்குமிடையில் வேறுபடுத்துவதற்கான தீர்மானத்துக்கு மிடையில் வேறுபாடு இருக்கின்றது. முதலாவது வகைமையில் தங்கியுள்ளது. ஒன்றில் அகீதா ரீதியானது; ஷரீஆ ரீதியானது அல்லது தேசிய ரீதியாக இருக்கலாம்; இனத்துவமாக இருக்கலாம்; பொதுநலனோடு பண்பாட்டோடு தொடர்புடையதாக இருக்கலாம். ஆனால் மேலே கூறப்பட்ட

எல்லாம் ஒருவகையானது. செயல், அமுலாக்கல், தீர்மானம் மற்றொரு விடயமாகும். ஏனெனில் எதிர் கொள்ளலுக்கு இறங்கிச் செல்வோமானால் இந்த முன்னேற்பாடுகளுக்கு இழுத்துவராத ஷரத்துகளும், நியதிகளும் இங்கு காணப்படுகின்றன. இந்தப் பக்கத்திலிருந்து நுண்ணிய விவாதம் தேவைப்படுகின்றது. ஏனெனில் இது வலு சமநிலை, சூழமைவு, வெற்றி தோல்விக்கான காரணிகளை வழங்குகின்றது. இப்பணிக்காக மிகச் சரியாக திட்டமிடாவிட்டால் அல்லது அதைவிட்டும் பாய்ந்துவிட்டால் தோல்விகளே வந்துசேரும். பல இழப்புக்களையும் அழிவுகளையும் பெற நேரிடும். மோசமாக இல்லாவிட்டாலும் நிலைமை அப்படியே இருக்கும் அல்லது பெரும்பாலும் பின்னடைவுக்கே அது இட்டுச் செல்லும் அல்லது இருந்ததை விட மோசமான நிலையை வந்தடையும்.

## வன்முறையைப் பயன்படுத்திய அனுபவங்கள்

சமூகமாற்ற இயங்கியல் அனுபவங்களின்படி வன்முறையைப் பயன்படுத்துபவனுக்கு அது இருமுனைவாள் போன்றதே என்பதையே நிரூபித்துள்ளது. ஏனெனில் அவன் நெருப்போடு விளையாடுகிறான். மிகுந்த கவனம், நிலைமைகள் மீதான மிகச்சரியான கணிப்பு இல்லாமல் வன்முறையைப் பயன்படுத்தக் கூடாது. ஏனெனில் அதிலேற்படும் தோல்வி பல அழிவுகளையும் துயரங்களையும் உருவாக்கும். இலக்கை அடைய முடியாதுபோகும். சில போது இலக்கு தூரமாக்கிவிடக் கூடும். உதாரணமாக இரு படைகளுக்கிடையில் போரில் குதிப்பது ஆழ்ந்த பார்வையையும் சிறந்த கணிப்பையும் வேண்டி நிற்கின்றது. படைக்கு முற்றாக அழிவு வரும் என்றால் போரில் ஈடுபடாமல் தவிர்ப்பதே மிகவும் ஆரோக்கியமானது. இது மாதிரிக் கட்டங்களில் போராட்டத்தின் வேறு வடிவங்களை நோக்கி நகர முடியும். பின்வாங்கி முன்னோக்கித் தாக்குதல் சிறு படைப்பிரிவை வைத்து (கொரில்லாத்) தாக்குதல் நடத்துதல், காடுகள் மலைப்பிரதேசங்களில் ஒளிதல், சிவில் சமூகத்தோடு இணைதல் போன்ற ஆரோக்கியமான முறை வழிகளை நாடுவது நலம் பயக்கும்.

'இது குணப்படுத்த முடியாத நோய், இதற்கு அறுவைச் சிகிச்சையைத்தவிர வேறு வழியில்லை' என்று கூறக் கூடிய அளவுக்கு விளைவுகளை அடையும்போது செய்யக் கூடிய முன்னேற்பாடுகளில் கவனக் குவிப்பை மேற்கொள்வதை விடவும் வன்முறைத் தீர்மானத்தை எடுக்கும் போது பதிற்றுக் கணக்கான தடவை அது பற்றி ஆழமாக ஆராய வேண்டும்.

இங்கு தீர்மானம் ஆழ்ந்த அறிவு, தகவல் திரட்டு, வகைகள், நிபுணத்துவ அறிவு என்பவற்றிலிருந்து எடுக்கப்படவேண்டும். நிலைப்பாட்டைத் தீர்மானிப்பதில் காரண காரிய அறிவு, சிறந்த கணிப்பீடு, முன்னேற்பாடுகளுக்கு தேவைப்படுவதைவிட இவை அபரிமிதமாக இருக்க வேண்டும். தீர்மானம் எடுக்கும் போது சிறந்த கணிப்பீடு வந்துவிடுமானால் தயார்நிலை, அமுலாக்கலில் ஒவ்வொரு தொடர்சியான எட்டும் முன்னையதைவிட அதி சிக்கலானதாக மாறும். அந்நேரத்தில் முன்னையதைவிட சுயத்தன்மையுடன் கருத்தியல் ஷரத்துக்களை தாராளமாகக் கொண்டிருக்க வேண்டும். முன்னைய கணிப்பீட்டுக்கு இதுவே அவசியமாகும். அதன் த:.வா சாத்தியங்களை முதன்மையாக, மிகச் சரியாக திட்டமிட வேண்டும்.

தெளிவான அறிவின்றி, சிறந்த கணிப்பின்றி, திட்டமிடலின்றி நினைத்தவாறெல்லாம் வன்முறை வழியைக் கையாளுவது கூடாது. இத்துறையில் நல்லெண்ணத்துக்குப் பின்னால் மறைந்து கொள்ளவும் முடியாது. இதில் இரத்தம் சிந்துதல், உயிரிழப்பு, சமூகமாற்றப்பணி ஸ்தம்பிதம் அடையவும் வாய்ப்புண்டு. பெருந்தவறு ஏற்பட்டால் எம்மைச் சார்ந்திருப்போருக்கு எதிர் மறை விளைவுகயையே அது தோற்றுவிக்கும். எனவே தலைமைகள், இதுவிடயத்தில் மிக நுட்பமான அறிவோடும் பொறுப்புணர்வோடும் செயற்பட வேண்டியது அவசியமாகும்.
வன்முறைக்கு பல ஸ்டடஜி வழிமுறைகள் உள்ளன. இறந்தகால வரலாறும் நிகழ்காலமும் அதற்கு நல்ல சான்று. ஒவ்வென்றுக்கும் ஷரத்துகளும் நியதிகளும் உள்ளன. அவற்றுக்கான சில உதாரணங்களை நோக்குவோம்.

## வன்முறையும்
## அந்நிய ஆக்கிரமிப்பும்

வன்முறை ஸ்டடஜிகளில் மிகவும் வெற்றிகரமானது ஒரு நாடு அந்நிய ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியிருக்கும்போது ஒரு தேச விடுதலைப்போராளி தேர்ந்தெடுக்கும் வன்முறைதான். நகரங்கள் கிராமப்புறங்களில் ஆயுதப் போராட்ட வடிவம் அல்லது அருகிலுள்ள நாடுகளின் அல்லது பெரிய சிறிய குழுக்களின் அமைப்பாக்கம், மலைகளில் காடுகளில் பாதுகாப்பு பெறும் முறை அல்லது நாட்டின் உள்ளேயோ அல்லது வெளியேயோ குறிப்பிட்ட பிராந்தியத்தில் அத்திவாரமிடல், போன்ற பல்வேறு வடிவங்களாக விரிவாக்கம் பெறலாம். இந்த ஸ்டடஜிகளுக்கு

உதாரணங்களாக அல்ஜீரியாவின் விடுதலைப்போராளி அப்துல் காதிர் லிபியாவின் விடுதலைப் போராளி உமர் முக்தார், பாலஸ்தீனப் புரட்சிகள், ஆப்கானிஸ்தான் விடுதலைப் போராட்டங்களைக் குறிப்பிடலாம். அந்நிய ஆக்கிரமிப்புக்கு எதிராக வன்முறையைக் கையாளும் போதும் ஆயுதம் தூக்கும் போதும் தேவையான ஷரத்துக்கள் காரணமாக இருக்க வேண்டும். இந்த எதிர்ப்புக்காக மக்களை முதலில் தயார்படுத்துவது அவசியமாகும். ஆக்கிரமிப்பு நாடுகளின் போட்டியைப் பயன்படுத்தியோ அல்லது எதிரிகளின் தரப்பிலிருந்து பெரும்பாலும் நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவியைப் பெறுதல் வேண்டும். இங்கு வன்முறை என்பது மிகச் சிறிய ஒழுங்கமைக்கப்பட்ட பணியல்ல. மாறாக ஆக்கிரமிப்பிலிருந்து விடுதலைபெற வேண்டும் என்ற வேட்கையால் பற்றியெரியும் அக்கினிக் குண்டமாகும். வெற்றி என்பது கொலனிய ஆக்கிரமிப்புக்கு எதிரான ஆயுத எதிர்ப்பு அனுபவங்களுக்குக் கிடைத்த பெருந்தொகை நண்பர்களேயாகும். தோல்வி என்பது பலமுறை முயற்சிக்க முடியாதவாறு ஒரு சுற்றிலேயே இடம்பெறும்.

## வன்முறையும் உள்நாட்டுப் போரும்

உள்நாட்டு மோதுகைகளில் வன்முறையைக் கைக்கொள்வதானது வெற்றிக்கும் தோல்விக்கும் இடையிலே அமைந்துள்ளன. வெற்றிவாய்ப்புக்களுடன் ஒப்பிட முடியாததை விடவும் தோல்விக்கான உதாரணங்களே மலிந்து கிடக்கின்றன. இஸ்லாமிய வரலாற்றிலும் தோற்றுப் போன சம்பவங்களே அதிகம். ஆனால் தற்காலத்தில் மத்திய தென் அமெரிக்க நாடுகளின் அனுபவங்களில் இதற்கு பல உதாரணங்களை காட்ட முடியும். பல தடவைகள் நசுக்கிய போதும் கியூபா, நிகாரகுவாவில் வெற்றியீட்டிய சந்தர்ப்பங்களை குறிப்பிட்டாக வேண்டும். நகரங்களின் போராட்டத்தில் மார்க்குவைலாவின் அனுபவமும், ஈவோராவின் அனுபவமும் முக்கியமானது. பொலிவியாவில் கியூபாவின் அனுபவம் மீளமுயற்சித்தபோது சூழமைவுகள் முழுமையாக வேறுபட்டு அமைந்திருந்தன. இம்மாதிரிக் கட்டங்களில் வெற்றிக்கான அல்லது தோல்விக்கான காரணிகள் பெரும்பாலும் மூன்று பிரதான அம்சங்களால் தீர்மானிக்கப்படுகின்றன. முதலாவது ஆட்சியின் ஒழுங்கமைப்பும், அதன் படைப்பிரிவின் ஒற்றுமை அல்லது ஆட்சியின் பிளவும், படைப்பிரிவின் உடைவும் ஆட்சிபலமாகவும் அதன் பின்னால் படைப்பலமும் ஒன்றாக

அணிவகுத்து நின்றால் வன்முறை தோல்வியிலேயே முடிவுறும் ஆனால் சுவர் பிளவுற்றும் அல்லது பிளவுறும் நிலையிலிருந்தால் வன்முறையைப் பொறுத்தளவில் புரட்சி மிகக் குறைந்த தரத்தில் நிகழ்ந்தாலும் அல்லது ஆர்ப்பாட்டங்கள் வெடித்தாலும் வெளிநடப்புக்கள் விரிவடைந்தாலும், கணிசமான வெற்றியைத் தழுவலாம்.

இரண்டாவது நிபந்தனை: அரசியல், மற்றும் நிர்வாக ஒழுங்கில் பெருமளவில் அவநம்பிக்கை ஏற்படவேண்டும். ஆட்சிநிலைப்பதில் அவர்கள் எதிர்பார்க்கை வைக்கக்கூடாது. ஆட்சியின் சீர்கேடு, அநீதி அத்துமீறல், தீவிரம், பொடுபோக்கு, மக்களின் நலன்களை துஷ்பிரயோகம் செய்வதாக இருக்க வேண்டும். அப்போது ஆட்சிக் கெதிரான வன்முறைவழியை மக்கள் வரவேற்பர் அல்லது பெருந்திரளாக வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டம் செய்வர். வழக்காறுகளை உடைத்து சவாலாக மாறுவர். இங்கு வெற்றிக்கான வாய்ப்புகள் உயர்ந்து காணப்படும். ஆனால் மக்கள் ஒதுங்கி நின்று, அல்லது அவநம்பிக்கை அடையாமல் படையை எதிர்கொள்ளாமல் சுய எதிர்ப்புச்சக்திகளைக் காட்டாமல் பெரும்பாலான கட்டங்களில் பார்வையாளர்களாக இருந்துவிட்டால் விளைவு படைக்கும் நிர்வாக ஒழுங்குக்கும் சார்பாகப் போய்விடும் என்பதில் சந்தேகமில்லை. இங்கு வன்முறை காய்ந்தது போல் தென்படும். ஆனால் ஈரமான ஓலையில் தீப் பொறியொன்று பட்டு அணைந்து போவதைப் போன்றதே.

மூன்றாவது நிபந்தனை: இது பிராந்திய சர்வதேச நிலை சார்ந்தது. ஆட்சியை அதன்போக்கில் செல்வதற்கு விட்டுவிடுவதாகும். வலுசமநிலையில் வெளிநாட்டு தலையீடு காரணமாக அதாவது வல்லரசு சக்திகள் வலு சமநிலையை சமப்படுத்த வரும் போது சர்வதேச கவன ஈர்ப்பின் மையமாக அது மாறும். அங்கு உள்பிளவுகள்தோன்றும் உதாரணமாக ஈரான் மன்னர் ஷா வீழ்ச்சியடைந்த கட்டத்தில் நிகழ்ந்ததைக் காணலாம். ஆனால் சமூகமாற்றப் பணிகள் குறித்த வெளிநாட்டுத் திருப்திநிலையைப் பொறுத்தவரை அது கியூபாவைப் போன்றும் அமையும். வெளிவலுசமநிலை அரசின் நலனை உறுதிப்படுத்துவதாக இருந்தாலும் மேற்குறிப்பிட்ட இருநிலைகளிலும் நிகழ்ந்ததற்கு மாற்றமாக வந்துசேரும் நிகாரகுவாவில் வெற்றியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் வெளிநாட்டு சமநிலை குலைய உதவியாக அமைந்தது. (சோவியத்தைவிட்டு அமெரிக்கா பின்வாங்கியமை) பின்னர் முன்னைய வெளிச்சமநிலையில் தளர்வு ஏற்பட்டது. (சோவியத் பின்னடைவு வீழ்ச்சி) புரட்சி அதிகாரம் அதன் எதிரிகளாலேயே வீழ்ச்சியடைந்தது.

இங்கு முக்கியம் என்னவெனில் சில அடிப்படை நிபந்தனைகள் பூர்த்தியடைகின்ற போது இன்னும் சில நிபந்தனைகள் எய்தப்பட வேண்டும். ஒவ்வொரு நாட்டுக்குமுரிய தனித்தன்மையோடு அது இணைக்கப்பட வேண்டும். சமூகமாற்றத்துக்கான ஸ்டடஜி தேர்வில் தீர்மானம் எடுக்கின்ற நேரத்தில் அதனை கவனித்தல் வேண்டும். குறிப்பாக படைக்கு எதிராக வன்முறையைப் பயன்படுத்தும் போது அல்லது மக்கள் எழுச்சியைத் தூண்டும் அல்லது புரட்சிமூலம் சமூகமாற்றம் செய்யும் போது அல்லது பொதுத் தேர்தலின் போது வன்முறைவழியை ஆராய்வது மிகவும் முக்கியமாகும்.

## வெற்றிகரமான அனுபவங்களைப் பின்பற்றல்

இங்கே கவனத்தைப் பெறாத பல அனுபவங்கள் இருக்கின்றன. இவ்வனுபவத் தொகுதி நிபந்தனைகள் நிறைந்ததும், உயிரோட்டமான வடிவிலும் உள்ளன. ஒரு காரணியின் போதிய தன்மையைப் பெற்றும் உள்ளன. குறித்த நாட்டில் புரட்சிக்குழு பெற்ற வெற்றிகரமான அனுபவத்தை தொலைவிலுள்ள மற்றொரு நாட்டுக்கு நகர்த்துவது கிராமப்புறத்தில் (காஸ்ரோ - கிபாரா) ஆயுதம்தாங்கிய போரா சிந்தனையை நகர்த்த முயன்றவர்களுக்கு நடந்ததைப் போன்று அல்லது நகரங்களில் (கிரீபாஸ் - மார்க்குவைலர்) ஆயுதம் தாங்கி போரா சிந்தனை அல்லது நீண்டகால மக்கள் போராட்ட சிந்தனை. அல்லது கிராமப்புறங்களிலிருந்து (மாஓசேதுங்) நகரங்களை பணியவைத்தல் அல்லது ஆயுதம் தாங்கிய இந்திபாழா (எழுச்சி) சிந்தனை - ரஷ்யாவில் (லெனின்) ஒக்டோபர் புரட்சி அனுபவங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடலாம். ஒவ்வொரு வெற்றிகரமான புரட்சிக்குப் பின்பும் அதை அப்படியே பின்பற்றப்போய் தோற்ற அனுபவங்கள் பல கிடைத்துள்ளன. தோற்றுப் போன ஆயுதம் தாங்கிய ஆனுபவங்களை படிப்பினைக்காக தனியாக்கிப் பார்க்காது பொதுமைப்படுத்த முயன்றதேயாகும். நாடு, சூழமைவு, பிராந்தியம், சர்வதேச நிலை, வலுசமநிலை என்பவற்றை தனியாக ஆராயவில்லை.

ஒவ்வொரு வெற்றிகரமான அனுபவத்துக்குப் பின்னரும் கோட்பாட்டாக்கம், பொதுமையாக்கல் பணி உண்டென்பதை வரலாறு உறுதிப்படுத்தியுள்ளது. வடிவம், முறைவழி என்ற அடிப்படையில் முன்மாதிரிப்பன்மையை அதற்குவழங்கும். நோக்கோடு அதன் தனிப்பண்புகள் பற்றிச்சிந்திக்காமல் அப்படியே பின்பற்றுவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. விளைவு

அடுக்கடுக்கான தோல்விகளைப் பெற்றுத்தருகின்றன. எத்தனை நகர எழுச்சிப் போராட்டங்கள் இரத்த ஆறை ஓட்டியிருக்கிறது. ஒக்டோபர் புரட்சியைப் பின்பற்றி லப்பூடாபிஸ் பெர்லினிலிருந்து குவாங்கோ யங்சிடியாங் வரை மாஓசேதுங் வழிமுறையைப் பின்பற்றி எத்தனை குழுக்கள் போராட முயற்சித்தன. அதன் விளைவு மலேசியாவிலிருந்து பிலிப்பைன்ஸ் ஊடாக இந்தியாவரை அழிவுதான் மிஞ்சியது. பிடல்காஸ்ரோவின் அனுபவத்தை வைத்துக்கொண்டு மலைகளில் பாளையமடித்த போராளிகள் ஈற்றில் அழிவையே தழுவினர். மாக்கொய்லா கோட்பாட்டைப் பின்பற்றிய லெத்தின் அமெரிக்க நகரங்களில் ஆயுதம் தூக்கியவர்களும் மடியிலேயே கொல்லப்பட்டனர்.

எனவேதான் புரட்சிகர அனுபவங்களைப் படிக்க வேண்டும். ஆனால் அவற்றை அப்படியே பின்பற்றக் கூடாது. ஒவ்வொரு நிலமைக்கும் விசேடத்துவமான குணங்கள் உண்டு. அதை முதலில் ஆழமாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

முதலில் பாதுகாப்பு அத்திவாரத்தில் (காப்பு விதி) இருந்தே ஆரம்பிக்க வேண்டும்.

ஆயுதப் பணிக்கு சில நிலமைகள் உள்ளன. பாதுகாப்புக்கான அத்திவாரத்தை நாட்டுக்கு வெளியே இட்டுக் கொள்ள வேண்டும். பல நிலமைகளில் நிகழ்ந்ததைப் போன்று அதிலிருந்து செல்லவேண்டும். வரையறுத்துக் கொள்வதில் மேம்பாடு அடைய வேண்டும். இக்கட்டத்தில் வன்முறை விதி பாதுகாப்புத் தரும் அரசின் நிலைப்பாட்டுக்கு ஏற்ப எப்போதும் மாற்றத்துக்கு உட்படும். அது சர்வதேச அனுசரணையாக சர்வதேச அழுத்தமாக சிலபோது நேரடி இராணுவ உதவியாக அல்லது ஆயுதப்பணிக்கு எதிர்த்தரப்பைத் தூண்டுவதாகக் கூட இருக்கலாம். இக்கட்டத்தில் பின்பற்றவேண்டிய முக்கியவிதி பாதுகாப்புத் தரும் நாட்டில் அடிப்படையில் தங்கியிருப்பதாகும். பாதுகாப்புத் தரும் நாட்டின் பக்கமிருந்து ஆயுதப்பணிகளை மேற்கொள்வதற்கு எதிர்ப்பு அணி பயன்படுத்துவதற்கான நிலமைகளுக்கு சில உதாரணங்கள் உள்ளன. பேரம்பேசலை அங்கீகரிக்கவேண்டும் என்பதற்காக அருகிலிருக்கும் நாட்டின் மீது அழுத்தங்களை மேற்கொள்வதன் மூலமாக போரில் ஈடுபடுவதற்கான பேரம் பேசல் முடிவுறும் போது நாடகம் அரங்கேறும். இலட்சியம், கோட்பாடு, எதிர்பார்க்கை நோக்கிய எமது பணிகளில் நாம் வெறுமனே ஒரு கருவியாக இருந்தது வெட்டவெளிச்சமாகும். அந்த

அளவுக்கு அல்லது சில நஷ்டங்களை ஏற்படுத்தும் அளவுக்கு தாண்டிச் செல்ல முடியாது. அவ்வாறே அதன் வெற்றியின் சாத்தியங்களைப் பொறுத்தவரை காப்பு அரசுக்கெதிராக செயலூக்க அழுத்தத்தைக் கொடுக்கும் சக்திக்கும் மேலாக வல்லரசுகள் தற்காத்துக் கொள்கின்றன. எதிர் அடக்குமுறையைக் கையாளுகின்ற அதன் சக்தி காரணமாக வாபஸ் என்று கணிக்கக் கூடிய நிலையில் அந்த எல்லைகளில் அது இருக்கும். இச்செயலை பனிப்போர் சூழ்நிலைகள் அதிகளவில் தனது நோக்கங்களுக்காகப் பயன்படுத்தி வந்துள்ளன. பனிப்போர் முடிந்த பின் மூச்சுத்திணறிய போதும், புதிய உலக ஒழுங்கு ஏற்பட்டபின்பும் இதுபோன்ற நடவடிக்கைகளுக்கு காப்பு அரசுக்கு மிகக் குறைந்த ஆதரவே கிடைத்து வந்திருக்கின்றது. சர்வதேச உதவிகாரணமாக சயனிய அரசைத் தவிர சுதந்திரத்தோடு நடைமுறைப்படுத்த சக்தி பெறவில்லை. வல்லரசுகளுக் கிடையிலான வலு சமநிலையில் புதியமாற்றம் தோன்றும் போது இந்நிலமையில் மாற்றம் ஏற்படலாம். வல்லரசுகள் தங்களுக்கிடையே நிகழும் மோதுகையை குறைப்பதற்காக உளவுத்துறை வழிமுறையை தொடர்ந்து பயன்படுத்திவருவதும் இங்கு நோக்கத்தக்கது.

சிறுபான்மையை பொறுத்தவரையில் வன்முறையைக் கையாளும்போது ஏற்படும் அடிப்படைப்பிரச்சினை யாதெனில் பொதுமக்களை அது பார்வையாளர் தளத்தில் வைத்திருக்கும். சிலபோது கைதட்டுபவர்களாக மாறுவர். ஆனால் அதைப்பின்பற்ற முடியாது. அல்லது அதிலிருந்து தொலைவிலாகி வேறு ஒரு நிலத்தில் இருந்துகொண்டு மோதுவதற்கான சாதகமாக அது மாறலாம். எனவேதான் கருத்தியல் தேசத்துக்குள்ளேயோ அல்லது உம்மத் என்ற தளத்திலோ சமூகமாற்றப்பணியை ஸ்பரிசிக்க முடியுமான முறைவழி அல்ல. ஏனெனில் இந்நடவடிக்கை இதை எதிர்கொள்வதற்கான மில்லியன் கணக்கானோரின் பலத்தை வேண்டி நிற்கின்றது. எனவேதான் ஒவ்வொரு ஸ்டடஜிக்கும் ஒரு மாற்றம் அல்லது ஒரு எதிர் கொள்ளல் இருப்பது அவசியமாகும். சட்டமியற்றுவோனுக்கு ஏற்பவும் பொதுமக்களுக்கு ஏற்பவும் முன்னணியில் பொதுமக்கள் பங்கு கொள்ளவும் இயங்கக்கூடிய அளவில் அதன் செயலாளி சக்தி பெற்றிருக்க வேண்டும்.

## தனிநபர் பயங்கரவாதம்

எதிர்த்தரப்பிலுள்ள தலைமைகளை அழிப்புச்செய்ய மேற்கொள்ளப்படும்

வன்முறையை இது குறிக்கின்றது. இது இரண்டு தளங்களில் பயன்படுத்தப்படுகின்றது. அவற்றில் ஒன்று: சர்வதேச மற்றும் போராடிக் கொள்ளும் பெரும் முன்னணிகளின் தரத்தில் இடம் பெறுவதாகும். இக்கட்டத்தில் அதன் இலக்குகள் எதிரியை அதிர்வூட்டல், குலைத்தல் அல்லது பேரம் பேசுதலின் போது அழுத்தத்தைக் கொடுத்தல் என்பவற்றுக்கு மேலதிகமாக இருக்கமாட்டாது. நாடுகளுக்கிடையிலான அல்லது பெரும் முன்னணி இயக்கங்களுக்கிடையில் மோதுகையின் நீரோட்டத்தைத் தீர்மானிப்பதில் இது ஒரு இரண்டாம் தரக்காரணியாக இருக்கின்றது என்பதையே அனுபவங்கள் உறுதிப்படுத்துகின்றன. இவ்வன்முறையின் செயலாளி போர்க்காலச் சூழலில் அதிகரித்துக் காணப்படுபவர் என்றே தோன்றுகிறது. குறிப்பாக எதிரிக்கு எதிராக காற்று வீசும் போது தற்கொடைத் தாக்குதல்கள் பெருவீழ்ச்சியைக் கொண்டுவருகின்றன. அல்லது உடனடித் தாக்கங்களை விளைவாக்குகின்றன. ஆனால் ஸ்திரமான சூழ்நிலைகளில் அல்லது எதிரி மேன்நிலையில் இருக்கும் வேளைகளில் இவ்வன்முறை பருண்மையாகவுமே வரையறுக்கப்பட்ட தாக்கத்தைக் கொண்டதாகவுமே இருக்கின்றது. உடனடியாக நஷ்டத்தை ஏற்படுத்துகின்ற அதேவேளை அது பயன்படுத்தப்பட்ட இலக்குக்கு எதிரான விளைவையும் கொடுத்துவிட வாய்ப்பிருக்கிறது.

நபி (ஸல்) அவர்கள் பணிப்பின் பேரில் மேற்கொண்ட தற்கொடைத் தாக்குதலுக்கான மூன்று நான்கு அனுபவங்களை சீறா ஆய்வாளர்கள் எடுத்துக் காட்டியுள்ளனர். ஆனால் அவை அனைத்தும் போர்ச் சூழலில் கிளர்ச்சிப் பிரகடணத்துக்காகச் செய்யப்பட்டவை. வழமையான சூழலில் அல்ல என்பதை யாரும் கவனத்திற் கொண்டதாகத் தெரியவில்லை. இந்த முறைவழி ஒரு கோட்பாடு அல்ல. மக்கா காலகட்டத்தில் இதைப் பயன்படுத்தவில்லை. உதாரணமாக அவற்றில் ஒன்றுதான் அம்ரிப்னு உமையா அழ்ழமீரியை நபிகளார் மக்காவுக்கு அனுப்பி அபிசுபியானைக் கொல்லுமாறு ஏவினார்கள். இது நபிகளாரை பிரச்சினைக்குத் தள்ளுகின்றவர்களைப் பழிவாங்குதல் என்ற முடிவின் பேரிலேயே இது நிகழ்ந்தது. குறைஷித்தலைவர்கள் ரஜீஃ. வாசிகளுடன் இணைந்து செயல்பட்டனர். அம்ரை அனுப்பியது எச்சரிக்கை செய்யும் நோக்கிலாகும். அம்ரு குறைஷிகளுக்கு நன்கு பரிச்சயமானவர். அபிசுப்யானை அடைவது அவ்வளவு எளிதாக இருக்கவுமில்லை. உண்மையில் இதுதான் நடந்தது. அடுத்த தற்கொடை தாக்குதலுக்கான சம்பவம் நபிகளாரோடு போரிடுவதற்கு திட்டம் தீட்டிய தனிநபர்களை நோக்கியதாக இருந்தது.

யாஸிர் பின் ரஸாம் அல் யஹுூதி, க:.பின் அல் அஷ்ரப், காலித் பின் சுப்யான், இப்னு நபீஹ் அல்ஹுூதலி ஆகியோரின் நிலைமைகளைக் குறிப்பிடலாம்.

சமூகமாற்றத்தை நிகழ்த்துவதில் இம்முறைவழியைப் பின்பற்றுபவர் பின்வரும் கோட்பாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். தற்கொடைத்தாக்குதல்கள் எதிரியை அழிக்கும் அல்லது அச்சுறுத்தும் அல்லது எதிரிகளை வீழ்ச்சிக்கு இட்டுச் செல்லும். இந்த முறைவழி கஷ்ஷாஸ்களாலும் அவர்களைப் போன்றவர்களாலும் இஸ்லாமிய வரலாற்றில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

ரஷ்யாவிலும் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பாதாள உலக மனிதர்களாலும் இம்முறைவழி கையாளப்பட்டது. இன்றுவரை அதன் செல்லப்பிள்ளைகளால் இது கையாளப்பட்டு வருகின்றது. ஆனால் தற்கொடைத்தாக்குதலால் தொடர்ச்சியான வெற்றிகளை ஈட்டினாலும் சமூகமாற்ற இலக்கை அடைய முடியாது என்பதையே அனுபவம் உணர்த்தியுள்ளது. ஆட்சியாளர்கள் தனிமனிதப் பயங்கரவாதத்தை இலேசாகக் கருதி விட்டுவிடமாட்டார்கள். அவர்களில் சிலர் பயந்தாலும் அவர்கள் அதைவிட மோசமான அடியையே சமூகமாற்றப் பணியாளருக்கு எதிராகநிகழ்த்துவர். உலகின் எல்லா அனுபவங்களும் இதனையே உறுதிப்படுத்துகின்றன. இத்தாக்குதலின் முடிவுகள் கவலையாகவே முடிந்திருக்கின்றன. இந்தக் கோட்பாட்டாளர்களுக்கு மட்டுமல்ல, சமூகமாற்றப் பணியாளருக்கும் தான்.

பலவீனருக்கு எதிரான இந்தப் பலவானின் வழிமுறை சிலர் நினைப்பதற்கு மாற்றமாகவே அமைந்துள்ளது. பலவீனரின் பயங்கரவாதம் என்றே அது அழைக்கப்படுகின்றது. மிகப்பலவீனமான அணியாகிய சமூகமாற்றப் பணியாளருக்கு எதிரான ஆயுதம் என்ற ஆதாரத்தின் கீழ் எதிரணியை முற்றாக நசுக்குவதற்கு உண்மையில் தனிநபர் பயங்கரவாதத்தைக் கையாள முயற்சித்த அனுபவங்கள் இதனையே உணர்த்தி நிற்கின்றன. மற்றொரு கோணத்தில் கோட்பாட்டாளரின் அணியில் பெரும்பாலானோர்களில் இதனைத்தாண்ட முடியாத ஷரீஆ தார்மீகச் சிக்கல்களை ஏற்படுத்தியுள்ளதையும் அவதானிக்கலாம். தற்காலத்தில் இச்செயல்புரிபவர் பலவீனனாகவோ, பலவானாகவோ இருப்பினும் எதிர்மறை விளைவுகளையும் நஷ்டத்தையுமே ஏற்படுத்தியுள்ளது. வெளியக ஆக்கிரமிப்பு எதிரியுடன் ஒத்துழைப்பு வழங்கி போருக்கெதிராக இந்த

வழிமுறையை விடுதலைப் போரில் அல்லது பெரும்பாலான புரட்சிகளில் தற்கொடைத் தாக்குதல் மேற்கொள்வதன் மூலம் சிலர் திருப்திப்படுவதாகவும் தெரிகிறது. இது போர்ச் சூழலில் புரட்சிக்காலங்களில் மேற்கொள்ளப்படுவதையே இங்கு குறிக்கின்றது. வழமையான, அன்றாட சூழ்நிலையில் அல்ல. ஆனால் தற்கொடைத் தாக்குதலை ஆரம்பித்து வைத்த பலஸ்தீனிய அனுபவத்தில் குடும்பம், இயக்கச் செயற்பாடுகளைப் பொறுத்தவரை எதிர் மறைவிளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. வன்முறை உரையாடலின் கதவை அடைத்துவிடுகின்றது. வன்முறையைத் தொடங்குவது மட்டுமல்ல பேச்சுவார்த்தைக் கட்டத்தில் அதனை ஓயவைக்கவும் தெரிந்திருக்க வேண்டும்.

# போராட்டத்தில் வலுசமநிலை

முரண்பட்ட போராட்டக் கட்டங்களில் அல்லது சமூக மாற்ற செயல்நிலைக் கட்டங்களில் வலுசமநிலையோடு தொடர்பான தலைப்பைப் போல அபாயகரமான ஒரு தலைப்புக் கிடையாது. நமக்கும் நமது எதிரிக்கும் இடையிலான வலு சமநிலைதான் நாம் தற்காப்பில் இருக்கிறோமா அல்லது தாக்குதலில் ஈடுபடுகிறோமா அல்லது இரண்டுக்குமிடையில் இருக்கிறோமா என்பதை நிர்ணயம் செய்கின்றது. பிரிவினைவாதப் போரில் பிரவேசிப்பதை அல்லது தவிர்ப்பதைப் போலவே அது கிளைப் போராட்டங்களில் உள் நுழைவதற்கான முறைமையை உறுதி செய்கின்றது.

கால இட வர்த்தமாணங்களில் ஒரு நிமிடத்தில் வலு சமநிலையின் அளவைக் கணிப்பதில் ஒன்றோடொன்று சமப்படும் உள்நுழையும் காரணிகளின் தொகு நிலையை நாம் அவதானிக்கும் போது இத்தலைப்பின் அவசியமும் அபாயமும் கூடிச் செல்வதைக் காணலாம். அவ்வாறே சமூக மாற்றத்துக்கான இயங்கு திசையில் அது பயணிக்குமா அல்லது அதற்கெதிரான திசையில் செலுத்துமா அல்லது இரண்டுக்குமிடையில் இருக்குமா என குறிப்பிட்ட வலுசமநிலையை வளர்த்தெடுத்து எதிர்காலப் போக்கை வரையறுக்கும் போது இத்தலைப்பின் முக்கியத்துவத்தை உணரலாம். இருக்கும் வலுசமநிலையில் மாற்றம் நிகழாமல் எந்த சமூக மாற்றமும் அதன் இலக்கை நோக்கி முன்னகரமாட்டாது.

எனவே, சமூக மாற்றப் பணிகள் அனைத்தும் வலுசமநிலைகளின் நேரடி உறவைப் பெறுதல் வேண்டும். குறிப்பிட்ட இட காலத்துளியில் மட்டுமல்ல வலுசமநிலையை அதன் நலன் சார்ந்து மாற்றத்தை நிகழ்த்த வேண்டுமாயின் மோதுகையின் சிக்கலான பாதையைக் கடப்பதற்காக எடுக்கப்பட்ட அரசியல் நடவடிக்கையிலும் நேரடி ஊடாட்டம் இருந்தே ஆகவேண்டும்.

வலுசமநிலை தொடர்பான கற்கை நெறியில் இஸ்லாமிய வாதிகளின் அறிவு பலவீனமானதாகவே உள்ளது. ஆன்மீக நியதிகள், காரணிகளின் முக்கியத்துவத்தைக் குறைத்து பௌதீகக் காரணிகளின் கணிப்பை உயர்த்த

வேண்டிவரும் என்பதனால் இவ்விடயப் பொருளை விவாதிப்பதை விட்டும் ஒதுங்கிக் கொள்கின்றனர். இங்குதான் வரலாறு மற்றும் பெரு மோதுகைக்கான குறிப்பாக இறைத்தூதுக்கும் நிராகரிப்புக்கும் இடையிலான மோதுகையை விவரணம் செய்வதில் சடவாத மெய்யியலின் இயலாமை தெற்றெனப் புலப்படுகிறது. அதேவேளை முரண்பட்ட சடவாதக் காரணிகளையும் வலுசமநிலைகளையும் விவரணம் செய்ய முடியாதிருப்பதும் வரலாற்றையோ இறைத்தூது நிகழ்த்திய பெரும் மோதுகைகளையோ சமநிலை பேணுகையோடு நுட்பமாக விவரிக்கவும் முடியாது போய்விடும். ஒவ்வொரு வரலாற்று செயல்நிலையோடும் வலுசமநிலைகளில் சிக்கல்தன்மை, கருத்துநிலை நியதிகளின் சட்டகத்துக்குள் கால இட சமூக வர்த்தமாணங்களுக் கேற்ப அவை தொழிற்படும் என்பதையும் அவர்கள் அறிந்துவைத்துள்ளார்கள். இச்செல்நெறி நியதிகளின் இடத்தை நீக்கமாட்டாது. அபௌதீக விதிகளின் தலையீடு அங்கே பரிபூரணம் அடைகின்றது.

சடவாத மெய்யியலின் மேலாதிக்கம் எதிர்நிலைக்கு இட்டுச் செல்லக் கூடாது. பௌதீகத்தையும் அபௌதீகத்தையும் சமாந்தர நிலையில் நோக்கும் இஸ்லாமிய உலக நோக்கை ஏற்பதே சிறப்பானது. நபிகளாரின் சீறாவில் இயங்கும் வலுசமநிலைக் கட்டங்களைப் புரிந்து கொள்ளவே இவ்விவரணத்தை முகவுரையாகக் குறிப்பிட்டோம்.

# சீறாவும் வலுசமநிலையும்

சீறா ஆய்வாளர்கள் சீறாவை அல்லது இஸ்லாமிய அழைப்புப் பணியின் வரலாற்றை மூன்று பிரதான கட்டங்களாக வகுத்துள்ளனர். அவற்றில் முதலாவது,

1. மக்கா கட்டம்: அது ஒரு பலவீனக் கட்டமாகும்.
2. மதீனா கட்டம்: அது ஒரு இருப்பெடுப்புக் கட்டமாகும்.
3. பத்ஹு கட்டம்: இஸ்லாத்தின் பரவல்

வேறு சிலர் முதலாவது கட்டத்தை த:.வாக் கட்டம் என்றும் இரண்டாவதை நுஸ்ரத் கட்டம் என்றும் முன்றாவதை பத்ஹ் கட்டம் என்றும் வகுத்துள்ளனர்.

இக்கட்டங்களை வலு சமநிலை நோக்கில் நாம் மறுவாசிப்புச் செய்யும் போது முதல் கட்டத்தில் எதிராளி இராணுவ மற்றும் மூலோபாயத்தில் மேல்நிலையில் இருப்பதைக் காணமுடியும். அப்போது ஆயுத ரீதியான எதிர்கொள்ளல் சாத்தியமற்றதாக இருக்கின்றது. இரண்டாவது கட்டத்தைப் பொறுத்தவரையில் வலுசமநிலையின் நிலைமாறும் கட்டமாகும். இக்கட்டத்தில் பாதுகாப்பான அத்திவாரத்தில் இருப்பு உறுதிப்படுத்தப் படுவதோடு மெலிதான தாக்குதலும் ஆரம்பமாகும். அது ஸ்டடஜி அல்லாமல் திட்டமிடல் தரத்திலேயே மோதுகை நிகழும். கொள்கை அழியாமல் காப்பதற்கான போர் என்றும் சொல்லலாம். போரில் முழுமையாகப் பிரவேசிக்காமல் அங்கொன்றும் இங்கொன்றுமாக இத்தாக்குதல் நடைபெறும். பத்ரில் இருந்து ஹுதைபிய்யா உடன்படிக்கை நடைபெற்ற போராட்டங்களில் இக்குணாம்சத்தை அடையாளம் காண முடியும். எதிரி ஸ்டடஜியிலும் அழிப்பு யுத்தத்திலும் கவனக்குவிப்புச் செய்திருக்கும் வேளையில் முஸ்லிம்கள் தற்காப்புப் போரிலேயே ஈடுபட்டு வந்தனர். கந்தக் அஹ்ஸாப் போராட்டங்களில் முஸ்லிம்களின் போர் முறை இவ்வாறே அமைந்திருந்தது.

## வலுசமநிலைக்கான மூன்று கட்டங்கள்

மாவோசேதுங் தனது சீன அனுபவத்தில் மக்கள் போராட்டத்தை அடிப்படையாகக் கொண்டு வலு சமநிலையை மூன்று கட்டங்களாக வகுத்துள்ளார். முதல் கட்டம், கொள்கை உருவாக்கமாகும். முதல் கட்டத்தில் எதிராளி இராணுவப் பலத்தில் ஸ்டடஜி மேல் நிலையிலேயே காணப்படுவார். அதே வேளையில் புரட்சிகர மாற்றுக்கான குழு அதாவது மக்கள் படையணி தற்காப்புப் போரிலேயே ஈடுபடும். இதன் பின்னர் வலு சமநிலை இரண்டாம் கட்டத்தை நோக்கி நகரும். அப்போது இரு அணியும் வலு சமநிலையில் ஏறத்தாழ ஒரே நிலையில் இருப்பர். அதாவது ஒருவர் மற்றவரை எதுவும் செய்யமுடியாத ஒரு பதகளிப்பு நிலை அங்கு காணப்படும். இக்கட்டத்தின் குணாம்சமே ஒவ்வொரு அணியும் மூன்றாவது கட்டத்தை அடைவதற்கான மேன்நிலைக்கு புதிய வலுக்களை தயார் செய்கின்ற கட்டமாகவும் இருக்கும். இவ்விராணுவ மேன்நிலை ஈற்றில் ஒரு பொதுத்தாக்குதலாகப் பிறப்பெடுத்து பூரண வெற்றியில் நிறைவெய்தலாம் என்பதே சேயின் கருத்தாகும்.

மதீனாக் காலப்பிரிவில் இருந்த இஸ்லாமிய அனுபவம் இந்த வகை சார்ந்ததே. நபிகளாரின் சீறாவிலும் இஸ்லாமிய மூலாதாரங்களிலும் இயங்கும் பொது விதியாகவும் இதனைக் கொள்ளலாம். உலக அனுபவங்களைப் போலவே சீறாவிலும் இக்கட்டங்களைத் தெளிவாகப் பார்க்கும் சாத்தியம் உள்ளது. இம்மூன்று கட்டங்களும் ஒவ்வொரு கட்டத்திலும் இடம்பெறவும் முடியும். குறைந்த வலுசமநிலை நடுத்தர வலு சமநிலை உயர் வலுசமநிலை என அக்கட்டங்கள் அமையலாம். உயர் நிலைக்கட்டமே இரண்டாம் கட்டத்திற்கு வலுசமநிலையை நகர்த்துகின்றது.

ஒவ்வொரு கட்டத்திலும் காணப்படும் இத்தகு நிலை அதில் மோதுகையை நிகழ்த்த பலத்தைத் திரட்ட எதிராளியை எதிர்கொள்ள விசேட பண்பாகக் கொள்ளப்படுகின்றது. ஒரு கட்டத்தில் வரும் மூன்றாம் நிலையான உயர் வலுசமநிலையே அடுத்த கட்டத்திற்குள் தள்ளும் தகு நிலையே இரு அணிகளைப் பொறுத்த வரையிலும் மிகவும் நுட்பமான அதி அபாயகரமான கட்டமாகவும் விளங்குகின்றது. இக்கருத்துப் புலத்தில் நின்று பார்க்கும் போது மக்கா கட்டத்தில் உயர் வலுசமநிலையாக அவ்ஸ் கஸ்ரஜ் உடனான ஒப்பந்தம் நிகழ்கிறது. முதற்கட்டத்தில் மிக அபாயகரமான நிகழ்வுதான் ஹிஜ்ரத் ஆகும்.

இக்கட்டத்தில் உருவாகும் அரசியல் பேச்சுவார்த்தை ஸ்டடஜி மேன்நிலை நோக்கி நகர்வதற்கான பெரும் வாய்ப்பை அளிக்கின்றது. மிகச்சிக்கலான, கொந்தளிப்பான இக்கட்டத்தில் மோதுகையை நடத்திச் செல்வதில் உலக நாடுகளின் மக்கள் போராட்டங்கள், புரட்சிகர அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படுவது முக்கியமாகும். ஆங்கில கொலனியத்துக் கெதிரான விடுதலைப் போரில் மலாய் மக்களின் அனுபவம் முக்கியமானது. இராணுவ ரீதியாக தோற்கடிக்க இயலாத போது ஸ்டடஜியில் இரு தரப்பும் சமநிலைக்கு வந்த போது ஆங்கிலேயர் மலாய் மக்களை அரசியல் பேச்சுவார்த்தைக்கு அழைத்து உரிமைகளை வழங்கும் சமத்துவ இடைக்கால அரசொன்றுக்கான ஏற்பாட்டுக்கு வந்தனர். தேர்தலுக்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. ஆனால் புரட்சியை நடாத்திய தலைமைத்துவம் சார்பான பதில் குறிகளை வெளிக்காட்டியதால் தேசிய விடுதலைக்குள்ளே பிளவுகள் ஏற்படலாயின. இராணுவத்தை ஏற்போர் மறுப்போர் என இரண்டாகப் பிளவுபட்டு சமூக அரசியல் சக்திகள் இவ்வனுபவத்துக்கு தம்மைப் பலியாக்கிக் கொண்டனர். விளைவு புரட்சி மூலமான ராணுவ வலுசமநிலை பிரித்தானியப் படையின் நலனுக்கானதாய் மாறியது. ஈற்றில் புரட்சி தோல்வியில் முடிய வலுசமநிலையின் இரண்டாம் கட்டத்திலேயே புரட்சி முற்றாகத் துடைத்தழிக்கப்பட்டது.

ஹுதைபிய்யா உடன்படிக்கையில் தீர்மானங்கள் எடுக்கும் வேளையில் இறைத்தூதரின் அனுபவம் அபாயகரமான சவாலைச் சந்திக்கவே செய்தது. தோழர்கள் இறைவிசுவாசம், நபிமீதான நம்பிக்கை, வஹிபற்றிய அறிவு இல்லாதிருப்பின் பெரும் பிளவே ஏற்பட்டிருக்கும். உரிய நேரத்தில் ஹிஜ்ரத் மேற்கொள்ளப்படாதிருந்தால் நபிகளாரை இரகசியமாகக் கொன்றொழிப்பதற்கான கட்டத்திற்கு குறைஷியர் நகர்ந்த பின் பெரும் அபாயம் ஏற்பட்டிருக்கும். மக்காவுக்குள் இஸ்லாமிய அணி பிரவேசித்த போது பரம வைரிகளுக்குப் பாதுகாப்பும் அனைவருக்கும் பொது மன்னிப்பும் என்ற சுலோகத்தை முன்வைத்ததும் முக்கியமானது. இத்தகைய அரசியல் முடிவுகள் அந்நேரங்களில் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகின்றன.

எனவேதான் நபிகளாரின் சீறாவைப் பொதுவாகவும் மதீனா அனுபவத்தைக் குறிப்பாகவும் நுண்ணாய்வுக்கு உட்படுத்துவர். மோதுகை நிகழ்த்துவதற்கான அனைத்து மூலோபாயங்களையும் நபிகளாரிடம் பயில்வது அவசியமாகும்.

அதாவது ஒவ்வொரு கட்டத்தையும் நகர்த்தும் திறமை பற்றியும்

அபாயகரமான அல்லது கொந்தளிப்பான கட்டங்களில் அதை எவ்வாறு தமக்குச் சாதகமாக கையகப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதையும் கற்றல் வேண்டும். நபிகளாரையும் அவரது தோழர்களையும் போராளிகளையும் வஹியின் ஊடாகவும் நுஸ்ரத் மூலமாகவும் எல்லாக் கட்டங்களிலும் பாதுகாத்தலும் ஈமானோடும் மஷ்ூறாவோடும் திட்டமிடலோடும் நுண்ணிய தீர்மானங்களோடும் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் கற்றறிதல் வேண்டும். வஹியைத் தவிர மற்ற அனைத்துக் குணாம்சங்களும் நபிகளாரின் மரணத்தை அடுத்து இஸ்லாமிய வாழ்க்கைப்போக்கில் இடம்பெறவே செய்தன. குறிப்பாக நான்கு கலீபாக்களின் காலத்தில் இதனை அவதானிக்கலாம். பிற்கால இஸ்லாமிய வரலாற்றில் இச்செயற்பாடுகளைக் காணமுடியும். நபிகளாரின் காலத்தில் நபித்தோழர் என்பதற்காக பௌதீகக் காரணிகளுக்கு அப்பாற்பட்ட முறையிலே உதவி கிடைத்துவிடவில்லை. மேற்குறிப்பிட்ட ஈமானிய, இபாதிய்ய, தவக்குலிய்ய குணாம்சங்களையும் பொருத்தமான நேரத்தில் பொருத்தமான பௌதீகக் காரணிகளைக் கொண்டு எதிராளியுடன் வெற்றிகரமாக மோதுகையை நடத்தியதன் விளைவாகவே வரலாற்றில் சாதனையாளர்களாக மாறினர்.

ஹிஜ்ரத்திலிருந்து ஹுதைபிய்யா உடன்படிக்கை வரை மதீனாக் கட்டத்தில் இராணுவ ரீதியான வலுசமநிலை முஸ்லிம்களைப் பொறுத்தவரை முதல்கட்டத்திலேயே இருந்தது. குறைஷிகளும் அவர்களைச் சுற்றி இருந்தவர்களும் ஸ்டடஜியில் மேன்நிலையில் காணப்பட்டனர். முஸ்லிம்களும் அவர்களோடு நேச உறவைக் கொண்டிருந்த கோத்திரங்களும் தற்காப்பு ஸ்டடஜியிலேயே இருந்தனர். இக்கட்டத்தில் உஹத் போராட்டத் தோல்வி, மதீனா ஆக்கிரமிப்பு நிகழ்ந்தது. ஒவ்வொரு நிமிடமும் முஸ்லிம்கள் அச்சுறுத்தப்பட்டனர். ஆனால் அச்சுறுத்தப்பட்ட அதே நேரத்தில் தொடர்ச்சியான தற்காப்புப் போரிலும் ஈடுபட்டு வந்தனர். ஒரு போராட்டத்தோடு நிறுத்திக் கொள்ளாமல் அதை அடுத்து மற்றொரு போராட்டம் என தொடர்ந்து நடாத்தினர். பிரதான போராட்டங்களின் எண்ணிக்கை எழுபதுக்கும் மேல் இருக்குமென சீறா நூல்கள் குறிப்பிடுகின்றன. அவற்றில் பெரும்பாலானவற்றை நபிகளாரே முன்னின்று நடாத்தினார். முஸ்லிம்களுக்கு மத்தியில் இந்த டெக்டிக் கடிவாளம் இருப்பது அவசியமாகும். முழுமையான வெற்றிக்கு பகுதியாகக் கிடைக்கும் வெற்றிகள் தேவைப்படுகின்றன. அவற்றிலே முக்கியமானதுதான் பத்ர் வெற்றியாகும். இதுவே அக நம்பிக்கையை ஊட்டி எதிரியை வீழ்த்தலாம் என்ற நம்பிக்கையை முஸ்லிம்களுக்கு

ஏற்படுத்தியது. டெக்டிக் ரீதியாக நோக்கும் போது தற்காப்புக் கட்டத்திலேயே அன்றைய முஸ்லிம்கள் இருந்துவந்தனர்.

## மூலாதாரம் எது?

நவீன உலகில் நடைபெற்ற தேசிய விடுதலை இயக்கங்களின் ஒக்டோபர் புரட்சி அல்லது மக்கள் புரட்சி போன்ற அரசியல் இராணுவ அனுபவத்தளங்களில் நின்று இஸ்லாமிய வரலாற்றை அல்லது சீறாவை நோக்குகின்றபோது முழுமையான அறிவியல், இயங்கியல் அனுகுமுறைகளை வகுத்துக் கொள்ளமுடியும். மாவோசேதுங் கூறுவதை விடவும் சீறா நிறையவே எமக்குக் கற்றுத்தரும். மாவோ மக்கள் விடுதலைப் போராட்டத்தின் ஒரு சமகால கோட்பாட்டாளர் எனக்கருதப்படுபவர். அகிலத்துவ சமதர்ம சமூக மாற்றப் பணிகளுக்கான இயங்கியல் விதிகளைக் கண்டுபிடித்தவர்.

ஏலவே அவரது கோட்பாடுகளை நாம் குறிப்பிட்டுள்ளோம். முதற் கட்டத்தை ஸ்டடஜியில் தற்காப்புக் கட்டம் என அவர் வர்ணிக்கின்றார். டெக்டிக் தாக்குதல், டெக்டிக் மேன்நிலை மூலம் நிலைத்திருத்தலுக்கான அவசியம் தொடர்பாகவும் விட்டுச் செல்லலின் கடிவாளத்தைப் பாதுகாப்பது தொடர்பாகவும் நபிகளாரின் அனுபவத்தில் மாவோவை விடவும் அதிகமான உதாரணங்களை நமக்கு எடுத்துக் கூறமுடியும். போராட்ட விதிகளை உடைப்பதில் ஆயுதப் புரட்சி நடைபெறும் வேளையில் லெனினிய அனுபவத்தையே நாம் பெரிதும் கைக்கொள்கின்றோம். லெனின் கூறுவதைப் போல முதல் கட்டத்தில் டெக்டிகில் புறப்படுகை மீதான பாதுகாப்பும் பொதுத்தாக்குதலுக்கு நகருவதற்கு முன்னால் எதிரியைக் குழப்பமுறச் செய்து கருத்தியல் பாதுகாப்பை தொடரும் நோக்கோடு பகுதியளவிலான வெற்றிகளை ஈட்டுவதும் அவசியம் எனக் கூறுகின்றார். போராட்ட விதிகளில் அதன் இயங்கியலில் மகத்தான சிந்தனைப் பள்ளி ஒன்று அவர்களின் வரலாற்றில் இல்லாத நிலையிலும் மேற்கண்டவாறு லெனின் கூறியிருப்பதை அவதானிக்க முடிகிறது.

மதீனாக் கட்ட அனுபவத்தின் இராணுவ ஆய்வை ஹுதைபிய்யா உடன்படிக்கை வரையிலும் அதற்குப் பின்னாலும் மேற்கொள்வதானது எம்மைப் பொறுத்தவரையில் மிகவும் அவசியமானதாகும். அது ரிஸாலத்தோடும் த:.வத்தோடும் இணைந்த புதிய மனிதனை உருவாக்குவதும் விதிவிலக்கான உலகளாவிய நாகரீக பதிலீட்டை

வழங்குவதுமே முதலாவது சீறா அனுபவமாகும். அது நமது சமூகப் போராட்டத்தின் அதிகளவு அடிப்படையாக்கலை மேற்கொள்வதற்கும் நவீன நாகரீக அபாயத்தை எதிர்கொள்ளவும் அவநம்பிக்கையைப் போக்கவும் உதவும். இஸ்லாம், பாரம்பரியம் வரலாறு யாருக்கு ஆய்வுக்குரியதாக இருக்கிறதோ அவர் சீறாவை இக்கோணத்திலிருந்து பார்க்கட்டும். அறிஞர்கள், சிந்தனையாளர்கள், ராணுவவியலாளர்கள் சீறாவை அதன் எல்லாக் கோணங்களிலும் ஆராய்ந்துள்ள முடிவுக்கே அவர் வந்து சேருவார்.

இங்கு சுட்டிக் காட்டவேண்டிய விடயம் என்னவெனில் மேற்கின் மோகத்தில் அதன் ஊற்றுக்கண்களில் மொண்டு வருபவர்கள் நமது உம்மத்தின் பாரம்பரியத்தையும் வரலாற்றையும் ஆராய வேண்டும். எமது பாரம்பரியமும் வரலாறும் மிகவும் செழுமையானது. கற்பதற்கும் பயில்வதற்கும் ஏராளம் அதில் இருக்கின்றன. எழுந்தமானமாக நுனிப்புல் மேய்வதும் கூடாது. நாம் ஏனையவர்களைவிட வித்தியாசமான வகைமாதிரி வரலாற்றுப் பாரம்பரியத்தைக் கொண்டுள்ளோம். அது பல்வேறு வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட சமூகங்களுடன் உரையாடிய அனுபவம் அதற்கிருக்கின்றது. இங்கு ஆய்வு என்பது சில அம்சங்களைப் பொறுக்கி எடுப்பது அல்ல. காரிஜிகள், கராமித்தாக்களோடு சுருக்கிக் கொள்வதும் உசிதமாகாது. பதினாலு நூற்றாண்டுகளாக நடந்த வரலாற்று இயங்கியலையும் முழுமையாக உட்கொண்டு விதிகளைத் தேடுவதும் வகுப்பதுமே இன்றுள்ள மிகப்பெரும் பணியாகும். அல்குர்ஆன் சுன்னாவைப் புறக்கணித்த வறட்டுத்தனமான வக்கிரமான றுஸ்டிய மு∴. தஸிலாப் போக்கும் நமக்கு உதவமாட்டாது.

இஸ்லாமிய உம்மத்தின் எழுச்சிக்காக புலமைசார் உழைப்பாளிகள் இஸ்லாமிய வரலாற்றுப் பாரம்பரியத்தை ஒரு தனியான நாகரீக அடையாளத்துடன் குறுக்கிக் கொள்ளாமல் சுன்னா என்னும் சிந்தனைப் பள்ளியின் விவேக ஈவுகொண்ட மாணவர்களாக இருக்கவேண்டும். சுன்னாவின் மாபெரும் சமூக மாற்றம் அரபு மண்ணுக்கப்பாலும் எப்படி சாதனை புரிந்தது உலக நாகரீகத்தின் தலைமைத்துவம் எப்படிக் கிடைத்தது பற்றியும் சிந்திப்பது அவசியமாகும்.

## கோட்பாட்டாக்கம் தொடர்பாக

இதற்கு முன் ஹுதைபிய்யா உடன்படிக்கை மோதுகைக் கட்டங்களின் வளர்ச்சி அளவீடுகளோடும் ஸ்டடஜி சமநிலை நோக்கி நகரும் கட்டத்தின் தொடக்கத்தைப் போல பாரிய சுமையை தாங்குவதற்கான ஸ்டடஜி சமாதானப் பேச்சுவார்த்தை போன்றவற்றோடு பொதுத்தாக்குதலை நோக்கி நகரும் கட்டம் தொடங்குகின்றது. நபிகளாரின் புறத்தில் கட்டத்தை நுணுக்கமாகக் கணிப்பீடு செய்யும் நிலை காணப்படுகின்றது. அவர் நிலைமையை கூர்மையாக அவதானிக்கின்றார். யுத்த நிறுத்தம் முஸ்லிம்களுக்கு ஸ்டடஜி மேன்நிலையை நோக்கி நகர வழிவகுக்கும் எனக் கருதுகிறார். இதே கண்ணோட்டத்தைத்தான் குறைஷிகளும் கொண்டிருந்தனர். எனவே ஹுதைபிய்யா உடன்படிக்கையை மீறுவதும் யுத்த நிறுத்தத்திற்கு எதிராகச் செயற்பட்டு இஸ்லாத்துடனான சமாதானக் கரத்தை துண்டித்துக் கொள்ள விரும்புகின்றனர். ஆனால் இராணுவ ரீதியான சமநிலை வளர்ச்சி இந்த உதவியின் மூலம் ஸ்டடஜி மேன்நிலைக் கட்டத்திற்கு முஸ்லிம்களை நகர்த்தியது. இக்கட்டத்தில் முஸ்லிம் படை மக்காவை நோக்கிப் பொதுத்தாக்குதலைப் பிரகடனஞ் செய்ய உதவியது. குறைஷித்தலைவர்களுக்கு இராணுவப் போர் முடிந்துவிட்டது எனத் தெரியவந்ததும் இக்கட்டத்தில் போரற்ற முழுமையான ஒரு தோல்வியே ஏற்பட்டது. நபி (ஸல்) அவர்கள் தான் பின்பற்றிய அரசியல் மூலம் பொது மன்னிப்பையும் விடுதலையையும் வழங்கினார்கள். அக்கணத்தில் எதிராளிகளும் இணைவைப்பாளர்களும் இஸ்லாத்தைத் தழுவலாம் என அதன் கதவுகளைத் திறந்து கொடுத்தார்கள்.

நபிகளாரை எதிர்த்துப் போராடியதில் அவரைத் துன்புறுத்தியதில் அவரது தோழர்களைக் கொலை செய்ததில் குறைஷிகளுக்கு ஒரு கறுப்பு வரலாறே இருந்தது.

இங்கு மோதுகைக்கான விஞ்ஞானபூர்வ அரசியல் அணுகுமுறை போரை இறுதிமுடிவுக்குள் கொண்டுவரும் பங்கை ஆற்றுகின்றது. கொன்றவன் அல்லது கொல்லப்பட்டவன் முன்னிலையில் எதிராளி ஒன்று கூட்டப்பட்ட வேளையிலும் பல்வேறு கைகலப்புகள், உயிரிழப்புகளிலிருந்து நீங்கிய

யுத்தமற்ற ஒரு நிலையை ஏற்படுத்தி பல அரபுக் கோத்திரங்கள் கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் இணைந்து அதன் வலுசமநிலையை அதிகரித்தது.

நாம் ஹுதைபியா உடன்படிக்கையை நோக்கி நமது பார்வையைத் திருப்பினால் மிகவும் அபாயகரமான ஸ்டடஜி முடிவுகளில் ஒன்றாக இருப்பதை நாம் காணலாம். யுத்த நிறுத்தத்திற்காக குறைஷிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது அவர்களின் தந்திரோபாயங்களை நிறுத்துவது மோதுகையின் போக்கை ராணுவக் களத்தில் குறைஷிப்படையும் மதீனாப்படையும் நேரடியாக மோதுவதற்கு ஆப்புவைத்து விடுகிறது. இருதரப்பிலும் உள்ள நடுவர்குழுக்களையும் இப்பேச்சுவார்த்தையில் சந்திக்க முடிகிறது. இவை முரண்டுபிடித்த கோத்திரங்களாகவும் அல்லது வெற்றி பெறும் அணியோடு இணைந்து கொள்ள காத்திருந்தவர்களாகவும் காணப்பட்டனர். இக்கட்டத்தில் வலுசமநிலை மீதான ஸ்டடஜியின் தாக்கம் இருந்தது. யார் அதைக் கையகப்படுத்திக் கொள்கிறாரோ அவர் ராணுவ வலுசமநிலையை தன்னலனுக்காகப் பயன்படுத்திக் கொள்ளமுடியும். இக்கட்டத்தில் இருக்கின்ற ஒவ்வொரு தரப்பினரும் கையாளும் முறையில் அரசியல் போராட்டத்தை நடத்துவது இராணுவப் போராட்டத்தில் ஈடுபடுவதை விடவும் மேன்நிலையில் காணப்பட முடியும். ஆனால் சமாதான வடிவத்தையோ அல்லது யுத்த நிறுத்த வடிவத்தையோ எடுத்துக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. ஈரானிய அனுபவத்தில் பெக்தியார் அரசாங்கத்தை அல்லது ஒக்டோபர் புரட்சிய அனுபவத்தில் கரிம்ஸ்கி அரசையோ அல்லது இரண்டாம் உலக மகா யுத்தத்திற்குப் பின்னரான அனுபவங்களில் இடைக்கால அரசாங்க வடிவத்தையோ எடுத்துக் கொள்ள முடியும்.

ஸ்டடஜியில் மேன்நிலையில் காணப்படும் தரப்பு இரண்டாம் கட்டத்தில் சார்பியலில் பின்வாங்கல் நிலைக்கு வந்து பேச்சுவார்த்தையோ அல்லது யுத்த நிறுத்தத்தையோ அல்லது சமாதானத்தையோ கோரி நிற்க முடியும். சில நேரத்தில் அதிகாரத்தை கையகப்படுத்துவதற்கான மாற்றுத் தீர்வுகளையும் முன்வைக்கலாம். அதை விரும்பியோ அல்லது நிர்ப்பந்தமாகக் கூடச் செய்யலாம். எதிர்நிலை தலைமையின் மீது பொறுப்பாக்கப்படும் நியதி என்னவெனில் அதற்குப் பதிலளிக்க வேண்டும் அல்லது பதிலிகளை முன்வைக்க வேண்டும். பொருத்தமான முடிவு வழங்கிகளுக்கு ஏற்ற நுண்ணிய கணிப்பீட்டை வேண்டி நிற்கின்றது என்பதையே அனுபவங்கள் உறுதிப்படுத்துகின்றன. எனவேதான் இது எல்லாக் கட்டத்திலும் ஓர் அசல் பண்பைப் பெற்றிருக்கிறது. அது

அரசியல் பேச்சுவார்த்தையில் முரண்பட்ட சமநிலைகள் தோன்ற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். ஆனால் கொமைனி லெனினின் வழிமுறைக்கு மாற்றாக ஒரு கலப்பு நிலைப்பாட்டையே எடுத்தார். பொதுமக்களின் பிடிவாதத்திற்கு வழிவகுக்காமலும் தலைமைத்துவத்தின் நம்பகத்திற்கு குந்தகம் ஏற்படாமலும் பார்த்துக் கொண்டார்.

ஸ்டடஜி சமநிலைக் கட்டத்தில் அரசியல் முடிவின் முக்கியத்துவம் போராட்டத்தில் அரைப்பகுதியை அது சரியாக இருந்தால் சம்பாதித்துக் கொள்கிறது. முடிவு தவறாக இருந்தால் போராட்டமே தோற்றுப் போய்விடுகிறது. எனவே வழங்கிகளின் ஊற்றுக்களைக் கண்டடைய வேண்டிய தேவை இருந்தது. எல்லா நிலைகளிலும் அது திரும்பத் திரும்ப வருவதில்லை. பேரம்பேசலை அங்கீகரிப்பதற்கு தயங்குபவர்கள் குறித்து அவதானமாகவும் இருக்க வேண்டியுள்ளது. வழங்கிகளையும் தனியான சூழ்நிலைகளையும் கருத்திற் கொண்டு எந்தவொரு பேரம் பேசலுக்கும் இணங்குபவர்கள் விடயத்திலும் அவதானமாக இருக்கவேண்டும். தங்கள் பிரச்சினைகளை வழங்கிகள் சூழ்நிலைகள் தனித்துவங்களின் மீது எழுப்புவதற்குப் பகரமாக வேறு அனுபவங்கள் குறிப்பான நிலைகளை அவர்கள் சான்றாகக் கொள்ள முடியும்.

மோதுகை இயங்கியலை நிறுத்தியவர்களில் முன்னோடியானவர் என்ற வகையில் ஹுதைபிய்யா உடன்படிக்கையின் பக்கம் நம் கவனத்தைத் திருப்புவோம். இது நபிகளார் கட்டங்களை உறுதி செய்வதிலும் தீர்மானங்களை எடுப்பதிலும் பயன்படுத்திய முறைமையை கற்றுக் கொள்வதேயாகும். வடிவத்தைப் பேணுவதோடு முடிவை அப்படியே பின்பற்றுவதோடும் சுருக்கிக் கொள்வதற்கல்ல. முரண்பட்ட வழங்கிகள் சூழ்நிலைகளில் மறு உற்பத்தி செய்வதற்காகும். ஹுதைபிய்யா உடன்படிக்கை மீதான விவாதம் அவ்வுடன்படிக்கை ஷரிஆ நோக்கில் ஆகுமா இல்லை ஆகாதா என்பதோடு குறுக்கப்பட்டுவிடக் கூடாது.

ஷரிஆ நோக்கில் ஆகும் என்ற கூற்று வாஜிப் என்ற கருத்தைத் தருவதால் அது அல்லாத முரண்பட்ட வழங்கிகள் உள்ள சூழலில் ஆகாது என்ற முடிவுக்கே வந்துசேரும். மேலெழுந்த வாரியான சிந்திப்பு தவறான ஒப்பிடல்கள் நிகழ்வதற்கும் பிழையாக கியாஸ் பிடிப்பதற்கும் இட்டுச் செல்லும். இத்தீர்மானம் எடுக்க வேண்டுமா? எடுக்கக் கூடாதா? என்ற எல்லா வகைமைக்கும் முக்கியத்துவம் கொடுத்து சமகாலப் பிரிவில் கிடைக்கும் வழங்கிகள், சூழ்நிலைகள், விசேட தன்மைகள் ஆகியவற்றிற்

கேற்ப ஷரிஆவின் கருத்திற்கு அமைவாகத் தீர்மானம் எடுக்கப்படவேண்டும். ஒஸ்லோ ஒப்பந்தத்துடன் அல்லது கேம்டேவிட் ஒப்பந்தத்துடன் ஹுதைபிய்யா உடன்படிக்கையை ஒப்பிடுவது மேலெழுந்த வாரியான சீறா வாசிப்பினூடாக வருகின்ற முடிவாகும். இவ்வொப்பந்தங்களின் பின்னர் ஹுதைபிய்யா உடன்படிக்கையைப் போல வலுசமநிலைகள், வழங்கிகள் பலஸ்தீனியர்களுக்குச் சார்பாக வரவேண்டும் என எதிர்பார்ப்போம். ஒஸ்லோ, கேம்டேவிட் ஒப்பந்தங்களுக்குச் சார்பாகப் பேசுவோர் கூட ஏகோபித்து ஏற்றுக் கொண்ட விடயம் தான் ஸ்டடஜி சமநிலை நோக்கி அதிகாரம் தங்கள் நலனுக்குக்காக நகரவில்லை என்பது. ஸியோனிஸ எதிர்ச் சக்திகளுக்கும் பிராந்திய சர்வதேசிய நேச சக்திகளுக்கும் சார்பான ஸ்டடஜி சமநிலையிலேயே அவ்வொப்பந்தம் சென்று முடிந்தது. வலுசமநிலையில் பலஸ்தீனியர் வீழ்ச்சியடைந்தனர். இதனால் பிராந்திய ஆக்கிரமிப்பில் இஸ்ரேலியரின் கட்டமைப்பு உறுதிப்படுத்தப்பட்டது. கோட்பாட்டு சட்ட நோக்கில் இருந்து பார்க்கும் போது ஒஸ்லோ,கேம்டேவிட் ஒப்பந்தம் இரண்டும் உள்ளடக்கத்தில் ஹுதைபிய்யா உடன்படிக்கையை ஒத்திருக்கவில்லை என்பதையே எடுத்துக் காட்டுகிறது.

இவ்வாறு கூறுவதன் நோக்கம் ஹுதைபிய்யா உடன்படிக்கை குறித்து எமது வாசிப்பை அதன் வடிவத்தையும் தாண்டி அகலிக்க வேண்டும் என்பதே. மோதுகையின் இயங்கியலில் ஹுதைபிய்யா அவசியப்படுத்தும் கோட்பாட்டு முறைமையை அறிவதே நமது பொறுப்பாகும். அவ்வாறு அறிந்தால்தான் முஸ்லிம் தரப்பிலான அதிகாரப் படிநிலையில் உயர்வதற்கு வழியேற்படும்.

# சீறாவில் ஒப்பந்தங்கள்

## ஒப்பந்தங்கள் ஏன்?

அல்குர்ஆனையும் சீறாவையும் படிக்கின்ற ஒருவர் வேறு எதிலும் காணாத படிப்பினைகள் போதனைகள் இருப்பதைக் கண்டுகொள்வார். கால, இட, பட்டறிவு வேறுபாடுகளுக்கேற்ப படிப்பினைகளும் வேறுபட்டு நிற்கும். இஸ்லாமிய வரலாற்றில் இஜ்திஹாத் துறையில் பன்மைத்துவங்கள் உருவாகுவதற்கு இது ஒரு முக்கியமான காரணமாகவும் இருக்கக் கூடும். எனவே, இஸ்லாமிய சமூகத்தில் இவ்விஜ்திஹாத் பன்மைத்துவத்தை நாம் அங்கீகரிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட கருத்தில் மாத்திரம் வெறித்தனமான பின்பற்றுதல் இருக்கக் கூடாது. மாற்றுக் கருத்தை மதிக்க வேண்டும். பொதுக் கருத்து நிலைக்கு ஷூறா அமைப்புக்கு பயிற்றுவித்துக் கொள்வதும் அவசியமாகும். இப்பண்பு இருக்கும் போதே இஸ்லாம் எல்லாக் காலத்துக்கும் இடத்துக்குமுரிய மார்க்கமாக தன்னைத் தகவமைத்துக் கொள்ள முடியும்.

உடநிகழ்காலத்தில் சமாதானப் பேச்சுக்கள், ஒப்பந்தங்கள் குறித்த ஒரு மயக்க நிலை இஸ்லாமிய சக்திகளிடம் காணப்படுகின்றது. அல்குர்ஆனையும் ஹிஜ்ரத்துக்கு முந்திய சீறாவையும் படித்துப் பார்க்கின்ற ஒருவர் நபிகளார் முஷ்ரிக்குகளோடும் காபிர்களோடும் நடாத்திய பேச்சுவார்த்தைகளையும் ஒப்பந்தங்களையும் கண்டுகொள்ள முடியும். நபிகளாரின் சமூக அமைப்பில் எதிர்நோக்கிய பேச்சுவார்த்தை ஒப்பந்தச் சிக்கலைப் போல வேறொன்றில்லை. இஸ்லாமிய அரசின் நிழலிலேயே அவர் வாழ்ந்தார். அவ்வரசு தன் அடிப்படைகளை ஆழப்பதித்து உலகளாவிய தன்மை கொண்டதாக மாறியது. அது பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்கினாலும் முஸ்லிம்களுக்கு மத்தியில் இருந்த அகப்பிளவுகளின் அபாயங்களையோ அல்லது ஆட்சியாளரின் எதேச்சதிகாரப் போக்கையோ குபேர வர்க்கத்தின் தோற்றத்தையோ தத்துவ சிந்தனை பரவல்களையோ எதிர்கொள்வது தொடர்பாகத்தான் இருந்தது. ஆனால் இன்று முஸ்லிம்கள் பல்வேறு நாடுகளாக, தேசங்களாகப் பிளவுண்டு விட்டனர். சர்வதேசத்

தலைமைத்துவம் ஷிர்க்குக்கும் குப்ருக்குமே ஆதரவளிக்கின்றன. ஒரே சமூகம் பல்வேறு பிரிவுகளாகவும் அரசியற் கட்சிகளாகவும் சிந்தனை முகாம்களாகவும் பிளவுண்டு கிடக்கின்றது. இப்பிளவுகளிற் சில இஸ்லாமிய மூலாதாரத்தை இணைத்தனவாய் உள்ளன. ஏனையவை மதச்சார்பின்மையை ஏற்றுக் கொள்வதுடன் இஸ்லாத்தோடும் தம்மைப் பிணைத்துக் கொண்டுள்ளன. மூன்றாவது சாரார் நாஸ்திகப் போக்கிலான மதச்சார்பற்ற தன்மையைப் பிரதிபலிக்கின்றனர்.

சில அரசாங்கங்கள் அதன் சட்ட யாப்பில் இஸ்லாத்தை அரச மதமாக ஏற்றுக் கொண்டு இஸ்லாம் அல்லாத சட்டங்களை நோக்கிச் செல்கின்றன. அல்லது ரோம சட்டத்தை அடிப்படையாகக் கொண்ட யாப்பையே அவை பின்பற்றுகின்றன. இவ்வரசுகளின் சார்பாக இயங்கும் புலமையாளர்களும் அரசியல் கட்சிகளும் அமெரிக்காவுக்கோ அல்லது பிரான்சுக்கோ அல்லது பிரித்தானியாவுக்கோ விசுவாசமாக நடந்து கொள்கின்றனர். இதற்கு முன்னர் ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும் விசுவாசமாக இருந்து வந்தனர். சிலபோது இந்த விசுவாசம் சிந்தனா ரீதியாகவும் சிலபோது அரசியல் பொருளாதார ராணுவ ரீதியாகவும் இருந்து வந்தது. அல்லது சிந்தனை, அரசியல், பொருளாதாரம் என்ற முப்பரிமாணங்களிலும் விசுவாசம் இருந்தது. இஸ்லாமிய சமூகங்களின் உள்ளே காணப்பட்ட இப்பிளவுகள் பல் தன்மை கொண்டதாகவும் சிக்கல் நிறைந்ததாகவும் இருந்தன. இது இஸ்லாமிய அடிப்படையிலோ அல்லது அது அல்லாத அடிப்படையிலோ மட்டும் ஏற்பட்ட பிளவு அல்ல. அவ்வாறே அமெரிக்க அல்லது ரஷ்ய அல்லது இச்சக்திகளுக்குப் புறம்பான நாடுகளுடன் கொண்ட நேசத்தின் அடிப்படையில் ஏற்பட்ட பிளவும் அல்ல. மாறாக ஒரே நிலையில் பல்வேறு நிலைப்பாடுகளுக்குத் தள்ளும் ஒரு சிக்கலான ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்த பிளவுகளாகவே இருந்தன. நாஸ்திக சக்திகளும் மேற்குக்கு எதிரான மதச்சார்பற்ற அணிகளும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக்கு எதிராகவே இயங்கி பலஸ்தீன விடுதலையையும் ஐக்கியத்தையுமே கோரி நின்றன. இஸ்லாத்தைக் கடைப்பிடித்தொழுக வேண்டும் என்ற சக்திகளும் இஸ்லாமியப் பணியை ஊக்குவித்தவர்களும் அல்லது இஸ்லாமிய நிலைப்பாட்டுக்கு கருத்து நிலையில் ஆதரவளித்தவர்களையும் இக்கட்டத்தில் அவதானிக்கின்றோம். அதே நோரத்தில் மேற்குக்கு விசுவாசமாக இருந்தவர்கள் கொமியுனிசத்திற்கு எதிராக தம்மைக் காட்டிக் கொண்டனர். ஏனையோர் பிராந்தியக் கட்டமைப்பைப் பாதுகாப்பதாக வாதிடுகின்றனர். அல்லது அருகிருக்கும் சகபாடிகளின் பயத்தின் காரணமாக அரசுக்கு சில நலன்களை பெற்றுக் கொடுப்பதற்காக எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர்.

இங்கு முக்கியம் என்னவென்றால் இன்றைய இஸ்லாமிய சமூகத்தில் உட்பிளவுகள் சிக்கலை அடைந்திருக்கின்றன என்பதை அவதானிக்க வேண்டியதாகும். அதைவிட மேலாக மத்ஹபு, கிப்லா-திசை, வர்க்க உட்பிளவுகளும் செல்வந்த நாடுகள் வறிய நாடுகள் எனவும் உட்பிளவுகள் இருக்கின்றன. ஆயுள் தலைமைத்துவம், பிராந்திய செல்வாக்கு என்றும் முரண்பாடுகள் உள்ளன. இப்பிளவுகள் சர்வதேச ஆதிக்கச் சூழலில் அதுவும் இஸ்ரேலிய ஸியோனிசக் கட்டமைப்பைப் பாதுகாக்கும் நோக்கில் இருப்பதால் இவை இன்னும் விரிவடைய ஏதுக்கள் உள்ளன. மேற்கில் இருந்து கிழக்குவரை முஸ்லிம் உம்மத்தை துண்டாடுவதற்கும் பிரித்தாளுவதற்கும் இராணுவ மேநிலையை கூட்டிக்கொள்ள ஆதிக்க சக்திகள் முனைந்து வருகின்றன. இப்போது இஸ்லாமிய சமூகத்தின் கழுத்தில் கத்தியை வைத்து அவை அச்சுறுத்திக் கொண்டிருக்கின்றன. தலையீடு, விஸ்தரிப்பு, பன்னாட்டுப் பயங்கரவாதத்தை ஒழித்தல், ஜனநாயகத்தை ஏற்படுத்தல் என்ற பெயரில் அது நடக்கின்றது. பிராந்திய விவகாரங்களில் பங்குகொண்டு தன் நலனுக்குச் சார்பாக அனைத்தையும் கையகப்படுத்தும் பணியை அதிகார வர்க்கம் மேற்கொண்டு வருகின்றது.

பனிப்போர் முடிவுற்றதன் பின் வளைகுடாப் போர் ஆரம்பமானது. உலகளாவிய சியோனிஸத்தோடு கைகோர்த்துக் கொண்டு அமெரிக்கா இஸ்லாமிய உம்மத்தை சிதைத்து பலவீனமுறச் செய்து அதன் அடயாளத்தையும் சக்தியையும் அழித்துவருகின்றது. இஸ்லாமிய எழுச்சி உம்மத் முழுவதும் பரவவும் இல்லை. இஸ்லாமிய இயக்கங்கள் இன்னும் மக்கள் மயப்படவும் இல்லை. இஸ்லாமிய சமூகத்தில் உள்ள செல்வாக்கான சக்திகள் இவ்வச்சுறுத்தலுக்குத் துணைபோகின்றன. இஸ்லாமிய இயக்கங்களை அடித்து வீழ்த்தி இஸ்லாமிய எழுச்சியை சிதைப்பதற்கு உள்ளக செல்வாக்குச் சத்திகள் வல்லரசுகளின் உதவியைப் பெற்று வருகின்றன. பல இஸ்லாமிய நாடுகளில் இஸ்லாமிய வாதிகள் மீதான அடக்குமுறை அதிகரித்து வருகின்றது.

எதார்த்தத்தில் இஸ்லாமிய அறிஞர்களும் இஸ்லாமிய இயக்கத் தலைமைகளும் முதலில் இவ்வபாயங்களை நீக்குவதற்கு சக்தியை ஒருங்குதிரட்டும் காரணிகளைப் பற்றி ஆராய்வது அவசியமாகும். அப்போதுதான் இஸ்லாமிய எழுச்சி இயக்கத்தைக் காக்கமுடியும். இங்குதான் இஸ்லாமிய சக்திகள் ஒருவருக்கொருவர் பரஸ்பர ஒத்துழைப்புக்களை ஒப்பந்தங்களை செய்துகொள்ள வேண்டியது அவசியமாகும். சில வரையறுக்கப்பட்ட அரசியல் இலக்குகளில் இணைந்து

செயற்படலாம். உதாரணமாக வெளிப்புற சதித்திட்டங்களை குறிப்பாக அமெரிக்க சியோனிஸ சதித்திட்டங்களை எதிர்த்தல். அல்லது குறிப்பிட்ட பிராந்தியத்தைப் பாதுகாத்தல். இனச்சுத்திகரிப்பைத் தடுத்தல். அல்லது எதேச்சதிகார அரசுகளை எதிர்ப்பதற்கு அணிதிரட்டல் போன்ற விடயங்களில் பரஸ்பர ஒத்துழைப்புக்களை வழங்கலாம்.

இதுபோன்ற இலக்குகள் இஸ்லாமிய சமூகத்தில் உள்ளகப் பலங்களை அதிகரிக்க உதவும். முரண்பட்ட நம்பிக்கை, சிந்தனை, அரசியல் அணிகள் இதில் இணைந்து செயற்பட வாய்ப்பு ஏற்படும். இந்த வரலாற்றுக் கட்டத்தில் இவ்வாறு இணைந்து செயற்படுவது முதன்மையான பணியாகும் என்பதை அறிஞர்களும் இயக்கத் தலைவர்களும் உணர்தல் வேண்டும். இஸ்லாமிய இயக்கங்களின் சக்தியை விடவும் தாண்டிய ஒரு பலம் இதை நிறைவேற்றத் தேவைப்படும் என அவர்கள் நினைக்கட்டும். ஆனால் தற்போதைய வலுசமநிலை, சமூக நலன், இஸ்லாமிய இயக்க நலன்களுக்குப் புறம்பான வகையிலேயே இருந்து வருகின்றது. ஒரு தாக்குதலுக்கு தாக்குப்பிடிக்க முடியாத நிலையே இன்று காணப்படுகின்றது.

இங்கிருந்துதான் ஒப்பந்தங்கள், கூட்டிணைவுகள், சமூக சக்திகளை ஒருங்கு திரட்டுதல் எமக்கெதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதலிலிருந்து தப்பிக் கொள்ளவும் எழுச்சிபெறவும் அவசியப்படுகிறது. இதுவே இன்றைய சமூகத்தேவையாகும்.

இஸ்லாமிய சக்திகள் இஸ்லாம் அல்லாத சக்திகளுடன் எவ்வாறு கூட்டுச் சேர்வது. முஸ்லிம் முஸ்லிம் அல்லாத சக்திகளின் உதவியைப் பெறமுடியுமா, அவர்களுடன் ஒப்பந்தம் செய்வது ஆகுமா? என்ற பிரதிவாதங்களும் இச்சந்தர்ப்பத்தில் எழக்கூடும்.

இலங்கை முஸ்லிம்களைப் பொறுத்தவரையில் ஐரோப்பியரின் வருகைக்குப் பின்பிருந்து இன்றுவரை ஒடுக்கப்படும் சிறுபான்மையாகவே இருந்துவருகின்றனர். சுதந்திரத்திற்குப் பின் சிங்கள பௌத்த இனவாத அரசு நிறுவப்பட்டதன் விளைவாக இந்த ஒடுக்குமுறை நிறுவன ரீதியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அவ்வாறே வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் தமிழ் மேலாதிக்க சக்திகளால் இன அழிப்புக்கும் இனச் சுத்திகரிப்புக்கும் அவர்கள் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர். இவ்வகையில் அவர்கள் இரட்டைப் பேரினவாத அடக்குமுறையை எதிர்கொள்ள

வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். முன்பு வியாபார முஸ்லிம் என்ற அடையாளம் இலங்கை முஸ்லிம்களுக்கு இருந்தது. இலங்கையின் கரையோர மலைநாட்டு சமூகங்களுக்கு மத்தியில் ஏக விநியோகஸ்தர்களாக அவர்கள் விளங்கினர். அந்த அடையாளம் சுதந்திரத்துக்குப் பின் ஆளும் வர்க்கத்தினரால் அழிக்கப்பட்டுவிட்டது. கடந்த இருபது ஆண்டுகளாக அரசியல் முஸ்லிம் என்ற அடையாளம் உருவாக்கப்பட்டது. பேரம் பேசும் அரசியலில் இலங்கையின் ஆளும் வர்க்கத்தை தீர்மானிக்கும் சக்தி அவர்கள் கைகளில் இருந்தது. ஆனால் அதுவும் தற்போது பலவீனப்பட்டுப் போயுள்ளது. நாவலர் காலத்தில் தமிழும் சைவமும் தமிழர்களின் இரு கண்கள் என்று கூறப்பட்டது. அதற்கெதிராக இந்திய வழியில் இஸ்லாம் எங்கள் வழி, இன்பத் தமிழ் எங்கள் மொழி என்று முஸ்லிம்கள் தங்கள் அடையாளத்தை வைத்தனர். அதன் பின் தமிழ் பேசும் மக்கள் என்ற அடையாளம் வந்தது. பின்னர் தமிழ் மக்கள், முஸ்லிம் மக்கள் என்ற சொற்களை தமிழ்த் தரப்பு பயன்படுத்தியது. 80களின் நடுப்பகுதியில் இருந்து முஸ்லிம் தேசம் என்ற கருத்தாக்கம் முன்வைக்கப்பட்டது. ஒலுவில் பிரகடணத்தின் பின் முஸ்லிம் தேசம் புதிய பரிமாணத்தைப் பெற்று வருவதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மூடப்பட்ட எந்தப் பொருளாதார அமைப்பையும் அடித்துத் திறப்பதே அமெரிக்காவின் கொள்கையாகும். முதலாளித்துவத்தின் வீழ்ச்சியிலேயே சமதர்மத்தின் எழுச்சி ஏற்பட முடியும். முதலாளித்துவத்துக்கு எதிர் நிலையில் ஒன்று இல்லாததால் அது வாழும் அனுபவமாகவே இருக்கின்றது. எனவே இடதுசாரி ஆட்சி இலங்கையில் இனிவரும் காலங்களில் நீடிக்கும் என்ற நம்பிக்கையை வைக்கமுடியாதுள்ளது. அவர்கள் கடந்த காலங்களில் சிறுபான்மையினரின் நம்பிக்கையை வென்றெடுக்கவும் இல்லை. இந்நிலையில் சிறுபான்மைச் சமூகங்கள் தமது அதிகாரங்களைப் பெறவேண்டுமானால் வெளிச்சக்திகளுடன்தான் இணைந்திருக்க வேண்டும். அந்நியராட்சியின் போது சிங்கள அரசு பலமிழந்திருந்ததைப் போல ஒரு நிலையை தோற்றுவிக்கும் போதே சிறுபான்மை பலம்பெற முடியும். இதே நேரத்தில் விடுதலையின் புதிய எஜமானர்களையும் கவனத்தில் எடுக்கவேண்டியுள்ளது.

இஸ்லாமிய உம்மத்தும் இஸ்லாமியப் பணியும் எதிர்கொள்ளும் இந்த யதார்த்தம் அவை எழுப்பியுள்ள கேள்விகளும்தான் நம்மை சீறாவை மறுவாசிப்புச் செய்ய வேண்டிய அவசியத்தை ஏற்படுத்தியுள்ளன. நமது

யதார்த்தத்தின் வடிவத்தையும் அதன் ஆழ அகலங்களுடன் அதன் சவால்களையும் கேள்விகளையும் நாம் வாஜிபென்றும் தேவையென்றும் கருதுபவற்றை நம் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்துதல் வேண்டும்.

பகிரங்க அழைப்பு விடுக்கப்பட்டது முதல் நுஸ்ரத் கட்டம் வரை சீறா கொண்டிருந்த சிக்கலான அரசியல் உறவுகள், ஒப்பந்தங்களின் தொடரை நாம் ஆழமாக வாசிப்புச் செய்ய முடியும். அவ்வரசியல் உறவுகளும் ஒப்பந்தங்களும் பன்முகப்பட்டதாய் இருந்தன. அவற்றில் சில தற்காப்பு நோக்கம் கொண்டவை. வேறுசில பரஸ்பர ஒத்துழைப்பு, ஒப்பந்த, யுத்த நிறுத்த, திருப்தியை அடிப்படையாகக் கொண்டவை. இன்னும் சில பேச்சுவார்த்தைகள், உடன்படிக்கைகள் என்ற பாரிய விடயங்களாகவும் அமைந்தன.

உள்ளடக்கத்தைப் பொறுத்தவரை இறைத்தூதருக்கும் அவரது கொள்கை சாராத ஒருவருக்கும் இடையில் நடந்த முதலாவது ஒப்பந்தம் அவரது சிறிய தந்தை அபூதாலிபுடன் செய்து கொண்ட ஒப்பந்தமாகும். நபிகளார் தனது பணியைத் தொடர்ந்து செய்வதற்கும் அதை வளர்ப்பதற்குமான பாதுகாப்பை அபூதாலிப் இவ்வொப்பந்தத்தில் வழங்கினார்.

குறைஷிகளின் ஒடுக்குதல் அதிகரித்த போது இரண்டாம் கட்டத்தில் இவ்வொப்பந்த உறவில் வளர்ச்சி ஏற்பட்டு ஹாஷிம் கோத்திரம் அப்துல் முத்தலிப் அணியில் இணைந்து கொண்டது. பனு அப்துஷம்ஸ், பனு நவ்பல் தமது கொள்கையிலேயே இருந்தனர். பனு அப்துஷம்ஸ் தரப்பின் ஒப்பந்தக் காரர் உத்துபாபின் ரபீஆவுக்கும் நபிகளாருக்கும் இடையில் சூடான விவாதங்களும் நடைபெற்றன. பனு மக்ஸூம், பனு அப்துத்தார், பனு அத்தி, பனு ஹம்ஜ் கொடுமைகள் நபிகளாருக்கு எதிராக அதிகரித்த போதும் உத்பா மிகக் கடுமையான எதிரியாகவே இருந்தார். பனு ஹாஷிம், அப்துல் முத்தலிப், அப்துஷம்ஸ், பனு நவ்பல் தம்மோடு இணைந்து கொண்ட சான்றோர்களுக்கெதிரான ஒப்பந்தத்தில் ஜாஹிலிய்யாக் காலத்தில் ஈடுபட்டவர்களாக அவர் இருந்தும் இறைத்தூதர் அவருடன் நல்லுறவையே பேணிக் கொண்டார்.

உண்மையில் அப்துஷம்ஸ், பனு நவ்பல் கொள்கைச் சார்பு தளம்பல் நிலையிலேயே இருந்தது. மோதுகையின் வளர்ச்சிக் கேற்ப ஏமாற்றியும் எதிர்ப்புக் காட்டியும் வந்தனர்.

இங்கு நாம் அவதானிக்க வேண்டிய விடயம் முஷ்ரிக்குகள் தமது ஒப்பந்தத்தை நிறைவேற்றி ஒதுக்கிவைத்தல், சித்திரவதை, பசியில் போடல் போன்ற பல சோதனைகளைச் செய்த போது பனு ஹாஷிம், பனு அப்துல் முத்தலிப் தாங்கிக் கொண்டனர்.

அபுதாலிபின் மரணத்தோடு வலுசமநிலை மாறியது. அப்துல் முத்தலிப் கோத்திரத்தில் அல்லது பனு ஹாஷிம்களில் யாரும் அந்த இடத்தை எடுப்பதற்குத் தயாராய் இருக்கவில்லை. அபுலஹப் அபுதாலிபின் இடத்தை எடுத்துப் பாதுகாப்பு வழங்குவதாக பிரகடனம் செய்தான். ஆனால் அப்பாதுகாப்பு குறுகிய ஆயுள் கொண்டதாகவே இருந்தது. காரணம் 'அபுதாலிப் முஸ்லிம் என்றும் அவர் மரணத்தின் பின் சொர்க்கத்தில் இருக்கிறார் என்றும் நபிகளார் கூறவேண்டும்' எனப்பணித்தான். அதற்கு இறைத்தூதர் மறுக்கவே அபுலகபின் நிலைப்பாடு மாறியது. அதன் பின் அவன் பலத்த எதிரியாக மாறினான். நபிகளார் கொள்கையை விட்டுக் கொடுக்காததால் பாதுகாப்பு மறுக்கப்பட்டது.

நபிகளார் தாயிபில் உள்ள தனது மாமாமாரிடம் செல்கிறார். அவர்கள் முஷ்ரிக்குகளாக இருந்தும் அவர்களின் உதவியையும் பாதுகாப்பையும் நாடி நிற்கிறார். தாயிபின் ஒவ்வொரு தலைவரிடமும் இவ்வொப்பந்தக் கரத்தை நீட்டுகிறார். அவர்கள் முற்றாக மறுக்கவே உள்ளமும் உடலும் புண்பட்டவராக திரும்பிவருவதைப் பார்க்கின்றோம்.

திரும்பிவந்த நபிகளார் மக்கா கணவாயில் உள்ள ஹிராவில் தங்குவதென்று முடிவெடுக்கின்றார். அதற்காக அஹ்னஸ் பின் ஷரீபிடம் உதவிகேட்டுத் தூதனுப்பினார். அவர் ஏற்கனவே நபிகளாரின் எதிரிகளுடன் ஒப்பந்தம் செய்திருந்ததால் உதவி செய்ய மறுத்துவிடுகின்றார். பின்னர் நபிகளார் சுஹைல் பின் அம்ரிடம் தூதனுப்ப அவரும் மறுத்துவிடுகின்றார். பின்னர் பனூ நவ்பலுடன் ஒப்பந்தம் செய்திருந்த முத்இம் பின் அத்தியிடம் உதவிகேட்டுத் தூதனுப்பினார். அவர் அதை ஏற்று நபிகளாருக்குப் பாதுகாப்பு வழங்குகின்றார். ஆனால் இப்புதிய ஒப்பந்தம் அபுதாலிபுடன் நபிகளார் ஒப்பந்தம் செய்ததைப் போல உறுதியான விதிகளைக் கொண்டிருக்கவில்லை. மிகச்சிக்கலான கட்டங்களில் இது புதிய பாதுகாப்பு ஒப்பந்தங்களைத் தேடிச் செல்லும் நிலைக்கும் நபிகளாரை நகர்த்தியது.

குறைஷிகளுக்கு வெளியிலான கோத்திரங்களோடும் நபிகளார் தமது த.்வா மற்றும் ஒப்பந்தத் தொடர்புகளை ஏற்படுத்த ஆரம்பித்தார். அதாவது

குறைசிகள் தடுத்துக் கொண்டிருந்த த..வத்தை அனுமதிக்கும் பாதுகாப்பைத் தேடிப் புறப்பட்டார். இஸ்லாத்தை எடுத்துச் செல்ல அல்லது இஸ்லாத்தோடு ஒப்பந்தம் செய்ய முடியுமான எந்தவொரு கோத்திரத்தையும் இறைத்தூதர் விட்டுவைக்கவில்லை. பனு கிந்தா, பனு ஆமிர், பனு ஹனீபா எனப் பதிற்றுக் கணக்கான கோத்திரங்களோடு அவர் தொடர்பு கொண்டார்.

இங்கும் அங்கும் வைக்கப்பட்ட நிபந்தனைகளோடு தொடர்புபட்ட காரணத்தால் அல்லது குறிப்பான சூழல்களோடு கணிப்புக்களோடு தொடர்பான காரணங்களால் இம்முயற்சிகள் ஈற்றில் அவ்ஸ் ஹஸ்ரஜ் பேச்சுவார்த்தைச் சுற்று வரும்வரை உரிய வலுசமநிலையைப் பெறவில்லை என்றுதான் கூறவேண்டும்.

அடுத்து இஸ்லாத்திற்காக பைஅத் செய்யும் நுஸ்ரத் கட்டம் வருகிறது. த..வா வரலாற்றில் புதிய ஆனால் தீர்க்கமான ஒரு கட்டம் தொடங்குகின்றது. அதுதான் மக்காவில் இருந்து யத்ரிப்-மதீனா நோக்கிய ஹிஜ்ரத் ஆகும். இதன் மூலம் பலமான இஸ்லாமிய அரசுக்கான அத்திவாரம் இடப்படுகிறது.

மதினாவில் இடம்பிடித்தல் கட்டம்; முஸ்லிம் அல்லாதவர்களுடன் ஒப்பந்தம் செய்தல், பரஸ்பரம் ஒத்துழைத்தல் என்ற பகுதிகளோடு மட்டும் குறைத்து மதிப்பிடக்கூடிய ஒன்றல்ல. இந்தப் பகுதி வாசிப்போடு நாம் குவிமையப்படுத்திவிடவும் கூடாது. மோதுகையை நிகழ்த்துதல், அத்திவாரத்தை எழுப்பல், அரசை நிர்மாணித்தல், முஸ்லிம் போராளிகளைப் பயிற்றுவித்தல், ஆயுதங்களைச் சேகரித்தல், வேலைப்பகிர்வு போன்ற மிகப் பெரும் வாய்ப்புக்களை ஏற்படுத்திய கட்டமாக அது பார்க்கப்பட வேண்டும்.

## மதீனா சாசனம் : மதீனா கட்டம்

அன்ஸார் முஹாஜிர்களுக்கிடையிலான சகோதரத்துவ ஒப்பந்தத்தோடு இக்கட்டம் ஆரம்பமாகின்றது. பின்னர் மதீனா சாசனத்தின் பிரதிநிதிகள் என்ற வகையில் யூதர்களுடனான ஒப்பந்தம் தொடங்குகின்றது. முதலாவது இஸ்லாமிய அரசை நிறுவிய மிக முக்கியமான அதே நேரம் அது மிக அபாயகரமான ஒப்பந்தமும் ஆகும். முதன் முதல் உடன்பாடு ஒப்பந்தம்

என்ற வகையில் அதன் உள்ளடக்கத்தில் இஸ்லாமிய சக்திகளுக்கும் ஏனைய இயக்கங்களுக்கும் இடையில் இருந்த உறவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள உதவும் முன்மாதிரியாகும். ஒரு கருத்தில் அதை ஒப்பந்தமாகவும் பார்க்கலாம். மற்றொரு கோணத்தில் முஸ்லிம்களுக்கு மத்தியில் அது சகோதரத்துவ உடன்படிக்கையாகும். புலமைவாதிகள் ஜாஹிலிய்ய ஒப்பந்தங்களிலிருந்து வேறுபடுத்திப் பார்ப்பதில் பிடிவாதமாக இருக்கின்றனர். இவ்விறுதி ஒப்பந்தம் ஒப்பந்தக் காரர் அநியாயக் காரராகவோ அல்லது அநீதிக்குட்பட்டவராகவோ இருப்பினும் உதவவேண்டும் என்றே கூறியது. அதேவேளை முஸ்லிம்கள் சத்தியம் நீதி என்பவற்றுக்காக அல்லாஹ்வின் பாதையில் உழைக்க வேண்டுமெனக் கோரியது.

சாசனம் யூதர்களோடு தொடர்புபட்டது என்ற வகையில் பனு அவ்ப், பனு நஜ்ஜார், பனு ஹாரிஸ், பனு ஸாயிதா, பனு ஷஹ்ம், பனு அவ்ஸ், பனு த்.லபா அவர்களின் அடிமைகள் யாவரும் ஒப்பந்தம் செய்திருந்தனர். வேதக்காரர்களுடனான ஒப்பந்தம் என்ற வகையிலும் முஷ்ரிக், காபிர்களுடனான ஒப்பந்தம் என்ற வகையிலும் மதீனா சாசனம் முன்னுதாரணமாகும். மதீனாவில் இஸ்லாமிய அரசை நிறுவிய ஆரம்பக் கட்டங்களில் அவ்ஸ் கஸ்ரஜ் கோத்திரத்தார் அனைவரும் இஸ்லாத்தைத் தழுவியோ குப்ரிலிருந்து விலகியோ இருக்கவில்லை. உதாரணமாக அப்துல்லாஹ் பின் உபை இஸ்லாத்தை வெளிப்படுத்த முன் குறிப்பிட்ட காலம் குப்ரிலேயே இருந்தார்.

அதன் பின்னர் ஜுஹைனா, முத்லஜ் கோத்திரங்களுடன் இறைத்தூதரின் ஒப்பந்தம் இடம்பெற்றது. பனு ழம்றா கோத்திரத்துக்கும் தனக்குமிடையில் பிரியாவிடை ஒப்பந்தத்தை இறைத்தூதர் எழுதினார். இது குறைஷிகளுக்கு முன்னால் பெருந்தடையாக இருந்தது. இக்கோத்திரங்கள் ஷிர்க்கிலும் குப்ரிலும் இருந்த போதிலும் இறைத்தூதரின் இவ்வொப்பந்தத்தால் இரு துருவ சக்திகள் தோன்ற வழிவகுத்தது.

முஸ்லிம்கள் பத்ரில் தமது வெற்றியை உறுதி செய்து கொண்ட போது வலுசமநிலையில் புதிய கட்டத்தை நோக்கிப் பிரவேசித்தனர். ஸ்டடஜி தற்காப்பில் டெக்டிக் தாக்குதல் கட்டத்தில் இருந்தவர்கள் குறைஷிகளை எதிர்கொள்ளக் கூடிய இராணுவப் பலத்திற்கு தள்ளப்படுகின்றனர். இத்தகைய அதிர்வு பலருக்கும் விடயம் சீரியஸானது என்பதை உணர்த்தியது. இஸ்லாத்தின் நகர்வை யாரும் தடுத்துநிறுத்த முடியாது

என்ற நிலை ஏற்பட்டது. இது குறைஷித் தரப்பில் இராணுவ ரீதியான தோல்விக்கு கட்டம் கட்டமாக இட்டுச் சென்றது. முஸ்லிம்களுடன் நேச உறவைப் பேணி ஒப்பந்தம் செய்து கொண்ட அணிகளின் பெருக்கத்தால் குறைஷிகளுடனான உறவு துண்டிக்கப்பட்டு வலுசமநிலை இஸ்லாமிய அணிக்குத் திரும்பியது. இக்கட்டத்தில் பனு கைனுக்கா, பனு நுழைர் யூதர்களோடு சேர்ந்து சதித்திட்டத்தில் ஈடுபட்டனர். முனாபிக்குகளில் சிலரும் இவர்களோடு சேர்ந்து கொண்டனர். இவர்களின் திட்டம் அம்பலத்துக்கு வரத்தொடங்கியது. இக்கட்டத்தில் உபை இப்னு சலூல் போன்றவர்கள் வெளிப்படையாகப் பேசினர். எதிர்த்தரப்பிலே குறைஷிகளுடன் புதிதாகச் சேர்ந்து கொண்ட நேச உறவுகளினால் சுறு சுறுப்படைந்தனர். மதீனாவைத் தாக்குவதற்காக அவர்கள் அத்பான் கோத்திரத்தோடு உடன்பாட்டுக்கு வந்தனர். இக்கட்டத்தில்தான் கந்தக், அஹ்ஸாப் போராட்டங்களைக் காண்கின்றோம்.

நபிகளாரின் தரப்பில் அத்பானின் ஒப்பந்தத்தைச் சிக்கல் படுத்தும் நோக்கத்தோடு உயைனா பின் ஹுனைனை விடுவித்துக் கொள்ள முயற்சி நடைபெறுகிறது. ஆனால் அவர் திரும்பிவந்து குறைஷ்-அத்பான் ஒப்பந்தத்தில் பங்கு கொள்ள முனைகிறார். முஸ்லிம்கள் மீதான ஆக்கிரமிப்பு கடுமையான போது நபிகளார் அத்பான் கோத்திரத்தாருக்கு மதீனாவின் மூன்றில் ஒரு பகுதி விளைச்சலைத் தருவதாகக் கூறி குறைஷிகளுடனான ஒப்பந்தத்தை முறித்துக் கொண்டு தம்மிடம் ஒப்பந்தம் செய்யுமாறு கேட்டுக் கொண்டார். இவ்வொப்பந்தம் எதிரியின் அணியை உடைப்பதற்கான வழியை ஏற்படுத்துகின்றது. இப்போது குறைஷிகளோடு ஒத்துழைப்பதா? நபிகளாரோடு இணைவதா? என்ற அகப்போராட்டம் அத்பான் கோத்திரத்தில் ஏற்படுகிறது.

## ஹுதைபியா உடன்படிக்கை

இப்போராட்டம் முஸ்லிம்களுக்குச் சார்பாகவே முடிவுறுகின்றது. ஹுதைபிய்யா உடன்படிக்கையில் ஏற்பட்ட புதிய மோதுகைக் கட்டத்தை அடையும் வரை இஸ்லாத்தில் இணைதல் அல்லது இஸ்லாமிய சக்திகளோடு ஒப்பந்தம் செய்தல் என போராட்டத்தைத் தொடர்வதற்கு வழிவகுத்தது. யுத்தநிறுத்தம் ஒவ்வொரு அணியிலும் சக்தியைக் கூட்டிக்கொள்ள உதவியது. மிகப் பெரும் சக்தியாக மு∴மின்களின் அணி விரிவடைந்து கொண்டு சென்றது. ஒப்பந்தத் தரப்புக்களின் பலம் கூடிச்

சென்றமையால் ஹுசாஆக் கோத்திரமும் முஸ்லிம் தரப்பில் இணைந்து கொண்டது. ஹுதைபிய்யா உடன்படிக்கையின் பின்னர் நபிகளாருடன் இணைவதாக பகிரங்கமாக அறிவித்துக் கொண்டனர். இன்னொரு புறத்தில் அப்துல் முத்தலிபோடு ஹுசாஆ செய்திருந்த ஒப்பந்தத்தை இது உயர்ப்பிப்பதாகவும் இருந்தது. இது குறைஷிகள் தரப்பில் அவர்களின் மக்காப் பிரதேசத்திலேயே பலத்த ஊடுருவலாய் அமைந்துவிட்டது. முஸ்லிம்களின் புதிய வலுசமநிலையில் அது வளர்ச்சியைப் பெற்றுக் கொடுத்தது. இது குறைஷிகள் தரப்பில் ஹுதைபிய்யா உடன்படிக்கையில் முறிவு ஏற்படுவதற்கும் காரணமாய் அமைந்தது.

## மக்கா வெற்றி

மக்கா வெற்றியும் இஸ்லாத்தில் மக்கள் பிரவேசித்தமையும் இஸ்லாத்தோடு பலரையும் ஒப்பந்தம் செய்வதற்கும் அதில் நுழைவதற்கும் வழியேற்படுத்திக் கொடுத்தது. இக்கட்டத்தில் சிக்கலான உறவுகளில் புதிய பயணம் ஒன்று ஆரம்பமாகின்றது. தஃவா அதன் எதிரிகளின் மோதுகையில் இறை நியதி வேண்டிநிற்கும் ஒன்றே அதுவாகும். அப்புதிய கட்டம் உள்ளங்கள் ஒன்றிணைக்கப்பட்டவர்களோடு யுத்த நிறுத்தம், சமாதானம், ஒப்பந்தம் என அடுத்த கட்டத்திற்கு நகர்கின்றது. உலகின் எல்லா வெற்றிக் கட்டங்களிலும் இந்நிலையைக் காணலாம். எனவேதான் ஹில்புல்புழூலைப் பற்றி நபிகளார் கூறும் பொழுது அத்தகைய ஒப்பந்தத்திற்கு நான் இன்று அழைக்கப்பட்டாலும் கலந்து கொள்வேன் என்று கூறியது இதனால்தான். ஹில்புல்புழூல் ஒடுக்கப்பட்ட அனைவருக்கும் உதவுவதாகும்.

## சிக்கலான மோதுகையும் நிலைப்பாடும்

நபிகளாரின் சீறாவில் அதன் பல்வேறு கட்டங்களையும் சூழ்நிலைகளையும் கவனமாக ஆராயும் ஒருவர் மனிதப்போராட்டங்களில் எல்லாம் இறைவன் விதித்துள்ள அத்தனை விதிகளையும் எதிர்கொள்வதைக் கண்டுகொள்வார். குறிப்பாக வரலாற்றை மாற்றியமைக்கும் போரட்டங்களில் இவை நடந்தேறி வந்துள்ளன. அவ்வாறே சிக்கலான சூழ்நிலைகள் இக்கட்டான நிலமைகளும் சீறாவில் இருப்பதை அவதானிக்க முடியும். கால, இட, சூழ்நிலைகளைக் கருத்திற் கொண்டு மோதுகையை நிகழ்த்துவதும்

மதிப்பீடுகளைச் செய்வதும் நிலைப்பாட்டைத் திட்டமிடுவதற்கான நுண்ணிய செயற்பாடாகும்.

த:.வா அதன் போக்கிலேயே நீண்ட தடைகளைத் தாண்டி வெற்றிக்கான பாதையைத் திறந்துவிட்டது. அரசியல் ராஜதந்திர உபாயங்கள் அத்தனையையும் அது தாண்டிச் சென்றது. ஈமான், தக்வா, பொறுமை, துணிச்சல் ஆகியவற்றோடு அறிவு, சமயோசிதம், புத்திக்கூர்மை, சூழ்நிலைகளை மிகக் கவனமாகப் புரிந்து கொள்ளல் போன்ற பண்புகளையும் அது பெற்றிருந்தது. சண்டை போட்டுக் கொள்ளும் இருவரின் போராட்டத்தைப் போல அது மிக எளிமையாக இருக்கவில்லை. விசுவாசிகள் தங்கள் ஈமானைப் பலப்படுத்தி ஒற்றுமையை உறுதிப்படுத்தி இறைவனில் தவக்குல் வைத்து எதிரியோடு சமராடினர்.

உண்மையில் த:.வாவின் இப்போக்கு இவ்வளவு எளிமையாக இருக்கவும் இல்லை. சிக்கல் நிறைந்த நெடுந்தூரப் பயணமாக அது இருந்தது. ஒவ்வொரு கட்டத்திலும் ஒப்பந்தம் செய்வதற்கோ அல்லது ஒப்பந்தத்தை மறுப்பதற்கோ தீர்க்கமான அரசியலும் சரியான முடிவும் தேவைப்பட்டது. எதிர்கொள்வதாயினும் அல்லது வாபஸ் பெறுவதாயினும் யுத்தமாயினும் அல்லது யுத்த நிறுத்தமாயினும் அதற்குப் பொருத்தமான திட்டமும் செயற்பாடும் தேவைப்பட்டது.

நபிகளாரை எதிர்த்த தலைவர்கள் மிகப்பயங்கரமானவர்கள். நிபுணத்துவம், அனுபவம், விவாதத்திறன், பேச்சுவார்த்தை சமயோசிதம் போன்றவற்றில் வலுகெட்டிக் காரர்களாக இருந்தனர். நபிகளாரின் தலைமைத்துவத்தோடு ஒப்பிடுகின்ற போது அவர்கள் வலுகுன்றியவர்களாக இருக்கவில்லை. மோதுகையை நிகழ்த்துவதில் மேன்னிலையிலேயே இருந்து வந்தனர். நபிகளாரும் ஈமான், தக்வா, இஹ்லாஸோடு சுருக்கிக் கொள்ளாமல் உலகியல் விவகாரங்களிலும் கூரிய அறிவும் விவேகமும் பெற்றிருந்தார்கள். இறை உதவியை நம்பி பௌதீகக் காரணியை நபிகளார் கைவிடவில்லை. பௌதீகக் காரணிகளைப் பயன்படுத்துவதை வஹி நபிகளாரைத் தடுக்கவில்லை. இவை அனைத்தும் ஒன்றிணைந்திருக்காவிட்டால் வெற்றி சாத்தியமாகியிருக்காது. மோதுகை நியதியை இறைவன் நீக்கியிருந்தால் வெற்றி இலகுவில் கைகூடி வந்திருக்கும். ஆனால் வெற்றிக்கான முன்நிபந்தனைகள் நிறைவேறிய போதுதான் வெற்றி சாத்தியமாகியது. கொந்தளிப்பான ஒவ்வொரு கட்டத்திலும் மிகச்சரியான கணிப்பை மேற்கொள்வதே வெற்றியின் முதற்படியாகும்.

# சீறாவும் தற்காலப் போராட்டமும்

தற்கால சமூக அசைவியக்கத்தில் சமூகமாற்றப் பணியின் சிக்கலைப் புரிந்து கொள்வது இஸ்லாமிய வாதிகளின் பொறுப்பாக உள்ளது. வலுசமநிலையில் உள்ள படிக்கல் நமக்கும் எதிரிகளுக்குமிடையில் விரிவடைந்துவிட்டது. அறிவியல் தொழில் நுட்ப, ஆயுத, ஊடக, இணைய, வெப் தள காரணிகள் என பல பௌதீகக் காரணிகளை இன்றைய உலகம் அனுபவித்து வருகின்றது. அதேநேரம் முஸ்லிம் சமூகம் துண்டாடல் பிளவுகளின் எதிர்மறைப் போக்கையும் அனுபவிக்கின்றது.

இஸ்லாம் பற்றிய மேலெழுந்த வாரியான புரிதலுடன் இதனை நாம் வெற்றி கொள்ள முடியாது. இன்றைய உலகம், எமது எதிரிகள், எமது சமூகம் குறித்த மிகச் சரியான புரிதலை எட்டும் போதே நாம் வெற்றியை நோக்கிச் செல்லமுடியும். சமூக மாற்றப் பணிக்குத் தேவையான அல்லது மோதுகையை நிகழ்த்தத் தேவையான காரணிகளை ஈட்டிக் கொள்ளும் போது இது சாத்தியமாகும். அதே நேரம் நீண்ட பயணத்தில் இவற்றை எவ்வாறு கையாள்வது என்பதையும் தெரிந்திருக்க வேண்டும்.

உதாரணமாக தற்காலத்தில் நமது சமூகத்திற்கும் எதிரிக்குமிடையிலான மோதுகையை நிகழ்த்துவதற்கான கட்டத்தை அடையும் பட்சத்தில் இஸ்லாமிய சக்திகளை ஒருங்குதிரட்டிக் கொள்வதும் அச்சக்திகளின் வலைப்பின்னலை விரிவாக வடிவமைப்பதும் இலக்கை நோக்கி ஒவ்வொன்றையும் ஆற்றுப் படுத்துவதும் முக்கியமாகும். இம்மோதுகை அடிப்படையாக்கல் நபிகளாரின் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த அனுபவங்களில் இஜ்திஹாதை மேற்கொள்ளல் என்ற நிலைக்கு அழைத்துச் செல்லும். அல்லது பிற்கால இஸ்லாமிய வரலாற்றில் நிகழ்ந்த பல கட்டங்களையும் இத்தலைப்பில் இமாம்கள் மேற்கொண்ட இஜ்திஹாத் முடிவுகளையும் படிப்பதாக அமையும்.

வேறுவார்த்தையில் கூறுவதனால் ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் அல்லது யுத்தநிறுத்தம் என்ற தலைப்புக்களையும் ஒரு சட்ட வசனத்தினூடாக புரிந்து கொள்ள முடியுமா? மோதுகையை நிகழ்த்துவதில்

நிலைப்பாட்டைத் தீர்மானிப்பதில் சீறா அனுபவங்களில் இருந்து ஒரு அறிவிப்பின் ஊடாக நபிகளாரின் கோட்பாட்டை புரிந்து கொள்ள முடியுமா? இங்கு கோட்பாடு எனும் போது மாறாத்தன்மையுடைய நியதி அல்லது இலக்கையே குறிப்பிடுகின்றது. இந்நிலமையை நுட்பமாகக் கணிப்பிடுவதும் அந்நிலமைக்குத் தேவைப்படும் அரசியல் பரிமாணம் போன்றவையும் இங்கு அவசியப்படுகின்றன.

ஒவ்வொரு காலத்திற்கும் இடத்துக்கும் சூழலுக்கும் ஏற்ப சரியான தீர்வை எடுப்பதற்கு முடியுமாக இருத்தல் வேண்டும். ஒப்பந்தம் அல்லது இணக்கப்பாடு அல்லது முஸ்லிம் அல்லாதவரின் உதவியைப் பெறுதல் போன்ற விடயங்கள் ஆகுமா என்பது தொடர்பான வாதவிவாதங்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கும். ஆகும் என்பதும் ஆகாதென்பதும் அல்லது ஏற்பதும் ஏற்காதிருப்பதும் இக்கட்டத்தில் நிலைமை பற்றிய கணிப்பீட்டோடு தொடர்பு படுத்திப் பார்ப்பது அவசியமாகும். ஒவ்வொரு நிலைப்பாட்டின் பிரதிவிளைவாக ஏற்படப் போகும் மாற்றத்தை நுட்பமாகக் கணிப்பிடுவதும் அவசியமாகும்.

இங்கு அவதானிக்கப்பட வேண்டிய மற்றொரு விடயமும் உண்டு. இத்தகைய ஒப்பந்தங்கள் ஹராமானவை என்ற கூற்று அத்தியவசியம்(ழரூரா), இயலும்தன்மை(இஸ்ததாஆ) என்ற கோட்பாட்டோடு பொருந்திச் சென்று அத்தடையை நீக்கவும் கூடும். அதாவது நிலைப்பாட்டைக் கணிப்பிட்டது சரியா சரியில்லையா என்ற தீர்ப்பிலேயே நாம் தொடர்ந்தும் இருக்கின்றோம். சரியானதற்கு அருகில் அல்லது மோதுகையை நிகழ்த்தும் நபிகளாரின் கோட்பாட்டுக்கு அண்மையில் நமது தீர்ப்பு வந்தடையும் வரை நாம் எதிர்நோக்கும் நிலையை நாம் மிகச்சரியாகப் புரிதல் வேண்டும்.

ஒப்பந்தம் பற்றிய ஹதீஸ் அதை அனுமதிப்பதன் மஸ்அலா தொடர்பான சட்ட வசனங்களை, இஜ்திஹாத் முடிவுகளை பதிற்றுக் கணக்கில் ஆதாரம் காட்ட முடியும். ஆகும் அல்லது ஆகாது என்பதை நீக்குவதற்கும் அவசியம், நிர்ப்பந்தம், இயலும் தன்மை என்பவற்றைக் காட்டுவதற்கும் பல சட்டவசனங்களை ஆதாரம் காட்ட முடியும். எனவேதான் ஆகுமா அல்லது ஆகாதா அல்லது தடுக்கப்பட்டதா என்ற நிலைப்பாட்டை வரையறை செய்வதில் இருந்து தப்பமுடியாது. சுயவிருப்பு வெறுப்புகளுக்கு இடம் கொடுக்காமல் குறிப்பிட்ட நிலைப்பாடு பற்றிய நுண்ணிய கணிப்பீட்டின் பகைப் புலத்திலிருந்தே முடிவுகளை எடுக்க

வேண்டும். செயலற்றுப் போகச் செய்வது இங்கு நோக்கமல்ல. கால இட சூழல்களுக்கு அமைவாக சற்றுப் பிற்போடுவதே நோக்கமாகும்.

ஒன்றின் அனைத்துப் பகுதிகளையும் என்ற கூற்றினால் இங்கு கருதப்படுவது நமது நிலைகளையும் எதிரியின் நிலைகளையும் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளையும் அதன் பிரதிவிளைவுகளையும் மிகச்சரியாக கணிப்பிடுவதாகும். ஏனெனில் ஒவ்வொரு அரசியலும் நமது நிலையிலும் எதிர் நிலையிலும் குறிப்பிட்ட விளைவுகளையே இட்டுச் செல்லும். எனவேதான் விளைவுகள் நிலமைபற்றிய சீரிய கணிப்பீட்டை அல்லது சீரற்ற கணிப்பீட்டை அளவு கோலாகக் கொண்டிருக்கும்.

ஒரு நிலையில் எல்லாப் புறங்களையும் ஆழமாக ஆய்வுக்குற்படுத்துவதில் குவிமையப்படுத்தும் போது ஷரிஅத்தை சரியாகக் கையாள்வதிலும் அரசியல் புள்ளிகளைப் பிரித்தறிவதிலும் சரியான நுழைவாசலை அது திறந்து கொடுக்கும். குறிப்பான நிலைப்பாட்டுக்கு மிக நெருங்கிய சரியான முடிவை யார் கொண்டிருந்தார் என்பதை குறிப்பான விளைவுகள் வெளிப்பட்ட பின் தெளிவாகத் தெரியவரும்.

தலைப்பு வெறுமையாக்கல், பொதுமையாக்கல், சட்ட வசனத்தை ஆராய்வதில் சட்ட அறிஞர்களின் நிலைப்பாடுகளை, கருத்து வேறுபாடுகளை மீளாய்வு செய்வதில் சுருக்கிக் கொள்வது அந்தச் சட்டகத்திற்குள் தேர்ந்த கருத்தொன்றைக் கொண்டுவருவது குறிப்பிட்ட கருத்தில் அதற்குரிய இடத்தில் முரண்பாடு தொடர்ந்து இருக்கும். தேர்ந்த கருத்தை அது மாற்றாது. ஆனால் அக்கருத்தை கொண்டுள்ளவர் மாற்றிக் கொள்ள முடியும். அதற்கெதிரான ஆதாரம் அதன் நிலையிலேயே இருக்க அதற்கான ஆதாரம் தொடர்ந்து இருக்கும்.

இங்கு அடிப்படையாக்கல் வழிமுறை கோட்பாட்டின் உள்ளடக்கத்திற்கு ஏற்ப கற்றல் அல்லது ஆய்வின் போது அத்தியவசியமானதாகக் கொள்ளப்படும் ஆரம்பத்தில் இருந்து அது கலந்துரையாடப்படுவதாகவே இருக்கவேண்டும். ஆனால் மோதுகையை நிகழ்த்துவதில் செயல்நிலைக்கு வரும்போது நபிகளாரின் கோட்பாட்டுக்கும் புரிதலுக்குமான தொடர்ச்சியான முயற்சியுடன் சேர்த்து முதலாவது எதிர் கொள்ளலில் குவிமையப்படுத்த வேண்டியிருக்கும். பின்னர் அதனைப் பின்பற்ற வேண்டும்.

இத்தீர்மானத்துக்கு அல்லது இம்முடிவுக்கு வருவதற்கு இறைத்தூதரை

உள்ளாக்கிய காரணிகளையும் சூழ்நிலைகளையும் ஆழமாகப் புரிந்து கொள்வது அவசியமாகும். இதுவே தேர்வாகும். எனவே முன்னர் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் ஏன் தோல்வியடைந்தன? குறிப்பிட்ட மரபுகள் ஏன் வழக்கிழந்தன? எதிரியின் தரப்பில் முரண்பாடுகள் எழக் காரணம் யாது? அல்லது பொதுவான நிலையில் பொருத்தமான அரசியலை முன்னெடுப்பதற்கு இப்போக்கை மிகக் குறுகிய கணவாயால் கடப்பதற்கு முடியுமாக இருந்தது எப்படி? இருளுக்கும் புயலுக்கும் இடிக்கும் மின்னலுக்கும் மத்தியில் குறுகிய கணவாயின் ஊடாக கடந்து செல்வதற்கு பொருத்தமான அரசியல் முன்னெடுப்பை பொதுநிலையில் நபிகளார் எவ்வாறு செய்தார்.

வலு சமநிலையின் ஒவ்வொரு கட்டத்திற்கும் அதற்குரிய காரணிகளைப் பெறுவதில் அலைகள் கொந்தளிக்கும். கண்ணுக்குப் புலப்படாத கற்பாறைகள் கொண்ட ஆர்ப்பரிக்கும் கடலில் தன் த.்.வாக் கப்பலை எப்படி ஓட்டினார் என்பதை சிந்திப்பது சீறா ஆய்வாளன் முன்னுள்ள சுவையான சவாலாகும்.

## மக்கள் சக்தியை திரட்டுதல்

போராட்டத்தின் மூலம் உத்தியோக பூர்வ அரசுக்கெதிராக ஒழுங்கமைக்கப்பட்ட அரசியல் இயக்கம் ஒன்று வெற்றிவாகை சூடுவது தற்காலத்தில் அசாத்தியமானது என்பதே நவீன கணிப்பாகும். எந்தவொரு அரசியல் கட்சியைவிடவும் அல்லது அரசியல் இயக்கத்தை விடவும் பெருந்தொகையான உறுப்பினர்களைக் கொண்டிருந்த போதிலும் அரசின் பட்டாளத்தை விட பலம்குறைந்ததே. ராணுவப் புரட்சியின் ஊடாக ஆட்சிக்கு வரும்போதே அது பலம் பெற்றதாக மாறமுடியும். ஆனால் ராணுவப் புரட்சியானது முன்னைய அதிகாரத்தை வீழ்த்தி புதியதோர் அதிகாரத்தைக் கட்டமைப்பதே அனுபவமாய் மாறியுள்ளது. ஆனால் பெரும் படையைக் கொண்டுள்ள நாடுகளில் இப்பலம் படிப்படியாகக் குறைந்து கொண்டு வருகின்றது. இப்பெரும் படைக் குவிப்பினால் உள்ளக ராணுவப் புரட்சி பலவீனமான ஒன்றாகவே மாறியுள்ளது. புரட்சிக்கு எப்போதும் சிறிய படையே பொருத்தமானது. அது வளம் நிறைந்த கையடக்கமான நிலத்தைப் போன்றது.

நவீன அரசுகள் ஒழுங்குபடுத்தப்பட்ட மைய அதிகாரத்தைக் கொண்டவையாக மாறிவிட்டன. பயிற்சி அளிக்கப்பட்டு ஒழுங்குபடுத்தப்பட்ட ஆயும் தரித்த சிப்பாய்களை நகரங்களில் இருந்து கிராமங்கள் வரை நிறுத்திவைத்துள்ளன. இவ்வரச படை இயக்கத்துக்கெதிராகத் திருப்பப்படும் போது பெரும் அமளிதுமளியே ஏற்பட்டுவிடுகிறது. அப்போது நடைபெறும் ஆயுதக் கிளர்ச்சிகள் தோல்வியையே தழுவுகின்றன. அவ்வரசு வல்லரசுகளின் துணையை நாடி குறிப்பிட்ட இயக்கத்தை தடைசெய்ய அல்லது சுத்திகரிப்புச் செய்ய முயல்கின்றது. இக்கட்டத்தில் மக்கள் புரட்சி நிகழ்வதும் சிரமசாத்தியமான ஒன்றாகவே மாறிவிடுகின்றது. இக்கட்டத்தில் சர்வதேச மட்டத்தில் வல்லரசுகளுக்கிடையில் போர் நிகழ்கின்ற போது அல்லது சர்வதேச வலுசமநிலையில் மாற்றம் நிகழ்கின்ற கட்டங்களில் உள்நாட்டு புரட்சிகரக் குழுக்களுக்கு இயங்குவதற்கான சுதந்திரம் ஓரளவு தாராளமாகவே கிடைக்கின்றது.

எல்லா நாடுகளிலும் பொதுவாகவும் நகரமயமாக்கம் ஏற்பட்டு வருவதன்

காரணமாக குறிப்பிட்ட நகரங்களில் பெருந்தொகையான மக்கள் திரள் வாழ்ந்துவருகின்றது. இக்குடியிருப்புப் பிரதேசங்களில் மக்கள் அரசின் மீது தங்கியிருக்கின்றனர். அவர்கள் அரசுக்கெதிராக கிளர்ச்சி செய்யும் பட்சத்தில் ராணுவ மற்றும் பாதுகாப்புப் பிரிவின் துணையுடன் அரசு அவர்களின் புரட்சியை நசிக்கிவிட முடிகின்றது. ஊரடங்குச் சட்டத்தை பிறப்பிப்பதன் ஊடாக மக்களின் அன்றாடத் தேவைகள் நிறைவு செய்யப்படாமல் முடக்கப்படுகின்றன. இது மைய அதிகாரத்தை ஒழுங்கவிழ்க்க முடியுமான சந்தர்ப்பமாயினும் ஈற்றில் அரசே வெற்றி பெறுகின்றது.

மேற்குறித்த விளக்கங்களில் இருந்து நாம் விளங்குவது யாதெனில் அரசுடன் எந்தவொரு மோதுகையை நிகழ்த்துவதாயினும் அது மக்கள் மயப்படுத்தப்பட வேண்டும். மாவோ கீழ்க்கண்டவாறு இதைத் தொகுத்துக் கூறினார்.

'மக்கள் திரள்களுடன் ஒருவர் தன்னை இணைத்துக் கொள்ள வேண்டுமானால் அவர் மக்கள் திரள்களின் தேவைகள், விருப்பங்கள் ஆகியவற்றுக்கு இசைந்த வகையில் செயல்பட வேண்டும். மக்கள் திரள்களுக்காகச் செய்யப்படும் பணி அனைத்தும் அவர்களது தேவைகளிலிருந்து துவங்கவேண்டுமே அன்றி எந்தவொரு தனிநபரின் விருப்பத்திலிருந்தும் அல்ல. அந்த விருப்பம் என்னதான் நல்ல நோக்குடையதாக இருந்த போதிலும் அடிக்கொருதரம் நிகழ்வது என்னவெனில் புறநிலை ரீதியாகப் பார்க்கும் போது மக்கள் திரளினர் ஒரு குறிப்பிட்ட மாற்றத்தை தேவையாகக் கொண்டுள்ளனர். ஆனால் மாற்றத்தை உருவாக்க இன்னும் விருப்பமோ உறுதியோ கொண்டிருப்பதில்லை. இத்தகைய சமயங்களில் நாம் பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். நமது பணியின் மூலமாக மக்கள் திரள்களில் பெரும் பகுதியினர் தேவையை உணர்வுபூர்வமாக அறிந்து அதை நடைமுறைப்படுத்துவதற்கு விருப்பம் கொண்டு உறுதி பூணும் வரை மாற்றத்தை நாம் செய்யக் கூடாது. அப்படிச் செய்தால் நாம் மக்கள் திரளிடமிருந்து நம்மை நாமே தனிமைப்படுத்திக் கொள்வோம்.'

மக்கள் திரளின் அபிப்பிராயத்தின் முக்கியத்துவத்தை மாவோவின் மேற்கோளிலிருந்து நாம் புரிந்து கொள்கிறோம். அதாவது மக்களின் விமர்சனத்துக்குத் தலைசாய்த்து அவர்களது அபிப்பிராயங்களுக்கு செவிமடுத்து அவர்களால் வழிநடாத்தப்பட வேண்டிய தேவையே

அதுவாகும். இந்நிலையை சீறாவில் மிகத் தெளிவாக நாம் அவதானிக்கலாம். 'நபிகளாரைப் போல தனது தோழர்களுடன் கலந்தாலோசித்த ஒரு தலைவரை என்னுடைய வாழ்நாளில் நான் கண்டது கிடையாது' என இப்னு மஸ்ஊத் (ரலி) கூற்று இதை உண்மைப்படுத்து கின்றது. உஹத் போராட்டத்தில் உள்ளிருந்து போராடுவதே நல்லது என்ற கருத்தை நபிகளார் கொண்டிருந்த போதும் பெரும்பாலான இளைஞர்களின் விருப்பத்திற்கு ஏற்ப தனது கருத்தை மாற்றிக் கொண்டார்கள். பிற்காலத்தில் குலபாஉர் ராஸிதீன்களும் மக்கள் கருத்தை பெற்றே தமது சீர்திருத்தப் பணியை மேற்கொண்டனர். 'யாராக இருப்பினும் எமது குறைபாடுகளை சுட்டிக் காட்டலாம். அவர் கூறுவது சரியாக இருக்குமேயானால் நாம் திருத்திக் கொள்ளத் தயாராக இருக்கிறோம்.' என்று உமர் மிம்பரில் வைத்து கூறினார். சல்மானுல் பாரிஸி ஆயுதத்தைக் காட்டி திருத்துவேன் எனக் கூறியபோது 'அத்தகைய ஒரு சகோதரனை எனது சமூகத்தில் நான் பெற்றிருப்பது இறைவன் எனக்குச் செய்த பேறாகும் என்றார்' மஹர் குறைப்புப் பற்றி தனது ஆட்சேபனையைத் தெரிவித்த பெண்மணிக்கு 'உமர் தவறிழைத்துவிட்டார். ஒரு பெண் சரியாகச் சொன்னாள்' என்று அவர் கூறினார். இத்தகைய செழுமையான வண்ணமயமான சம்பவங்களையும் ஆளுமைகளையும் நபிகளாரின் சீறா அபரிமிதமாகக் கொண்டுள்ளது.

மக்கள் திரள்களிடம் இருந்து கருத்துக்களை எடுத்துக் கொண்டு அவற்றை ஒருமுகப்படுத்தி முறைப்படுத்தப்பட்ட கருத்துக்களாக மாற்றுவதன் மூலம் பிறகு மக்கள் திரள்களிடம் சென்று அவர்கள் தமது சொந்தக் கருத்துக்களாகவே அவற்றைத் தழுவி அவற்றை இறுக்கமாகப் பின்பற்றி நடைமுறைப்படுத்தும் வரை இக்கருத்துக்களை அவர்களிடம் பரப்பவும் விளக்கவும் வேண்டும். பிறகு மீண்டுமொருமுறை மக்களிடமிருந்து வருகிற கருத்துக்களை ஒரு முகப்படுத்தி மீண்டும் மீண்டும் மக்களிடம் செல்லவேண்டும். இவ்வகையில் கருத்துக்கள் ஒரு முடிவில்லாத படிப்படியான ஏற்றத்தில் பாதுகாக்கப்பட்டு ஒவ்வொரு முறையும் அவை மென்மேலும் சரியானவையாக மென்மேலும் உயிர்த்துடிப்புடையனவாக மென்மேலும் செழுமையானவையாக மாறும்.

நபிமார்கள் தமது சக்தி அனைத்தையும் மக்கள் திரள்களிடமிருந்தே பெற்றனர். சிக்கல் நேரும் போதெல்லாம் மக்களையே சார்ந்திருந்தார்கள். இதனால் மக்கள் அவர்களை ஆழ்ந்து நேசித்தனர். 'இந்த இடத்தில் முஹம்மதை வைத்து கனல் தெறிக்கும் பாராங்கல்லை அவர்மீதேற்றி

சித்திரவதை செய்தால் எப்படியிருக்கும்' எனக் கேட்டபோது 'அவரது செருப்பில் முள்தைப்பதைக் கூட நான் விரும்பமாட்டேன்' என சித்திரவதைக் குட்பட்ட நபித்தோழர் அபூஜஹ்லிடம் கூறினார்.

மக்கள் சக்தியை இளக்காரமாகப் பார்க்கும் நிலை பெருந்தொகையான இஸ்லாமியவாதிகளிடம் காணப்படுகின்றது. பொதுமக்கள் அறிவில்லாதவர்கள், மந்தைகள் என்றெல்லாம் கூறி ரெடிகல் திரள் மாத்திரமே புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியவர்கள். பிற்போக்குவாதிகள், அன்றாடம் காய்ச்சிகள் என்றெல்லாம் மக்களை புறமொதுக்குவதானது இயக்கவாதிகள் அதிகாரத்தின் பிடிகளுக்குள் சிக்குண்டு சித்திரவதைக்குள்ளாகும் போது மக்கள் வாளாதிருந்துவிட அல்லது கைகட்டிப் பார்த்து நிற்க வழியேற்படுத்திக் கொடுத்துவிடுகிறது. கடலில் இருந்து பிரிக்கப்பட்ட மீன் எப்படி உயிர்வாழ முடியாதோ அவ்வாறே மக்கள் திரளிடமிருந்து தம்மை வேறாக்கிக் கொண்ட போராட்ட, சீர்திருத்த குழுக்களும் உயிர்வாழ முடியாது. இங்கு பிரச்சினை இயக்கமோ அதைப்பாதுகாப்பதோ அல்ல. மாறாக மக்களின் விருப்பங்களையும் தேவைகளையும் நிறைவேற்றுவதாகும். தொடர்ச்சியான சிறிய தாக்குதலிலிருந்து பாரிய தாக்குதல்களுக்கு உள்ளாகும் போது மக்கள் இயக்கம் எழுச்சி பெற ஆரம்பிக்கும். ஆழத்திலிருந்து மேற்பரப்பிற்கு வருவதைப் போல மக்கள் பிரக்ஞை நிலைக்கு திரும்புவர். தாக்குதல் தனிப்பட்டதாக இயக்கத்தோடு மட்டும் சம்பந்தப்பட்டதாக அமையக் கூடாது. மாறாக மக்களை நோக்கியதாக அவர்களின் விருப்பங்கள் தேவைகளை நோக்கியதாகவும் இருக்கவேண்டும்.

மேற்குறித்த வகையில் அமையும் போது அதிகாரத்தை மாற்றுவதற்கான மக்கள் பங்கேற்பு மிகப் பெரிய அளவில் கிடைக்கமுடியும். சமூக மாற்றப் பணியை மைய வலுவை இது அதிகரிக்கும். இது முடியாவிட்டால் சமூக மாற்றம், புரட்சி செயற்கையானதாகவே அமையும். அதாவது புரட்சிக்கு மக்கள் மத்தியில் வேர்கள் இருக்க வேண்டும். அதாவது அதிகாரத்துக்கும் மக்களுக்குமிடையிலான ஆழமான உறவில் மோதுகையை ஏற்படுத்தக் கூடிய வேர்கள் இருக்க வேண்டும். ரெடிக்கல் குழு பிரச்சினையின் சொந்தக் காரர்களாகவோ மக்களை அதற்கு அழைப்பவர்களாகவோ இருக்கக் கூடாது. மாறாக மக்களே பிரச்சினையின் தோழர்களாகவும் அதில் செயலூக்கம் உள்ளவர்களாகவும் தலையிடுதல் வேண்டும். பெரும்பான்மை மக்களுக்கு மோதுகையில் விருப்பமில்லாத போது முன்னணிப்படை அதனை மதிக்க வேண்டும். அந்நிலையில்

மக்கள் தலைமீதேறி சவாரி செய்யக் கூடாது. மக்களின் யதார்த்தத்திற்கு முந்தியோ அல்லது பிந்தியோ காரியத்தில் ஈடுபட்டுவிடக் கூடாது. மக்களின் விருப்புக் கணிந்து வருகின்ற போதே இயக்கம் செயலில் இறங்க வேண்டும். பொருத்தமற்ற நேரத்தில் அவசரப்பட்டு தாக்குதலில் ஈடுபடுவதோ அல்லது சந்தர்ப்பத்தை தவறவிட்டு நிற்பதும் மக்கள் சக்தியைத் திரட்டுவதில் மாபெரும் தோல்வியையே தழுவும்.

மக்கள் சக்தியை குறைத்து மதிப்பிடுகின்ற போக்கு இஸ்லாமியவாதிகளிடம் அதிகமாவே காணப்படுகிறது என்று ஏலவே குறிப்பிட்டோம். மக்கள் சக்தியை விடவும் களாகத்ர் - விதிவாதத்திற்கு உட்பட்டுச் சிந்திப்பதே அதற்கான காரணமாகும். மக்கள் பலவீனப் பட்டிருக்கும் சந்தர்ப்பங்களும் வரலாற்றில் இருந்தே வந்துள்ளன. உதாரணமாக "தங்களுக்குத் தாங்களே அநீதி இழைதத்துக் கொண்டவர்களை மரணிக்கச் செய்த வேளையில் மலக்குகள் பின்வருமாறு வினவுவர்: 'எப்படி இருந்தீர்கள்' அதற்கவர்கள் 'நாம் பூமியில் பலவீனவர்களாக இருந்தோம் என்று கூறுவர். அதற்கு மலக்குகள் 'அல்லாஹ்வின் பூமி விசாலமானதல்லவா நீங்கள் ஹிஜ்ரத் செய்திருக்கலாமே' என்று கேட்பார்கள்." (அந்நிஸா 97-98) இந்த வசனத்தில் பலவீனர்களின் நிலை விளக்கப்படுகின்றது. தனிமனிதனுக்கு நிர்ப்பந்தம் ஏற்பட முடியும். ஒரு சமூகத்திற்கு நிர்ப்பந்தம் இல்லை. அநீதியை விட்டு வெளியேறுவதற்கு சக்தி உள்ளவர்கள் வெளியேறியே ஆக வேண்டும். அநீதியை எதிர்த்து நிற்காமல் அநீதிக்கு தலைவணங்கி வாழக்கூடாது என்பதையே இந்த வசனம் உணர்த்துகின்றது.

"நாம் பூமியில் பலவீனப்பட்டவர்கள் மீது அருள்பாலிக்க விரும்பினோம். அவர்களைத் தலைவர்களாகவும் பூமியின் வாரிசுகளாகவும் ஆக்கினோம் (அல்-கஸஸ் 5) இங்கு தலைமைத்துவம் என்பது பலவீனக் கட்டத்துக்குப் பின் நிகழும் எதிர்கால வாக்குறுதியாகவே அமைந்திருக்கின்றது. மக்கள் வரலாற்றில் அக்கட்டத்தை தாண்டியே தலைவர்களாகவும் வாரிசுகளாகவும் மாறியுள்ளனர். நாளுக்கொரு கடவுளை வழிபட்டு வருடம் 360 விக்ரகங்களை வழிபட்டு பல்வேறு கோத்திரங்களாகப் பிரிந்து நின்று போராடி தம்மை தாமே அழித்துக் கொண்ட வேளையில் ஏகத்துவத்தை முன்வைத்து ஐக்கிய உம்மத்தாக கட்டியெழுப்பிய நபிகளாரின் சீறாவில் மக்கள் சக்தியை எவ்வாறு பயன்படுத்தலாம் என்பதற்கு எண்ணற்ற சான்றுகள் இருக்கின்றன. எந்தக் கோத்திரத்தையும் நபிகளார் தன் இயக்கத்தோடு இணைக்காமல் விட்டதில்லை. எல்லாக் கோத்திரங்களிலிருந்தும் ஒன்றுக்கு மேற்பட்ட பிரதிநிதிகளை அங்கத்தவராக சேர்த்திருந்தார்.

குறைஷிகளால் புறக்கணிக்கப்பட்ட தைம் கோத்திரத்திலிருந்தும் நபிகளாருக்கு உறுப்பினர்கள் இருந்தனர். நபிகளாரின் தெரிவை முனீர் கழ்பான் பின்வருமாறு பட்டியலிடுகின்றார்

அ. பனுஹாஷிம்

1. அலி பின் அபிதாலிப்
2. ஜ.்.பர் பின் அபிதாலிப்
3. உம்முல் பழ்ல் பின்த் அல்ஹாரிஸ்
4. உபைதா பின் அல் ஹாரிஸ்
5. அஸ்மா பின்த் உமைஸ் (ஜ.்.பரின் மனைவி)
6. கதீஜா பின்த் குவைலித்
7. ஸைத் பின் ஹாரிஸா (அடிமை)

ஆ. பனு உமையா

8. உஸ்மான் பின் அப்வான்
9. காலித் பின் ஸயீத்
10. அமீனா பின்த் காலித் (காலிதின் மனைவி)
11. ஹாதிப் பின் அம்ரு
12. அப்துல்லாஹ்பின் பின் ஜஹ்ஷ் (நேசக் கூட்டுறவாளர்)
13. அபூ அஹ்மத் பின் ஜஹ்ஷ் (நேசக் கூட்டுறவாளர்)
14. பாதிமா (மனைவி)

இ. பனு மக்ஸுூம்

15. அபூ ஸலமா பின் அப்தில் அசத்
16. அய்யாஷ் பின் அபி ரபீஆ
17. அம்மார் பின் யாஸிர் (நேசக் கூட்டுறவாளர்)
18. அஸ்மா (அய்யாஷின் மனைவி)
19. யாஸிர் பின் ஆமிர் (நேசக் கூட்டுறவாளர்)
20. சுமையா பின்த் கையாத் (யாஸிரின் மனைவி)
21. அல் அர்க்கம் பின் அபில் அர்க்கம்

ஈ. பனு தைம்

22. அபூபக்ர் அஸ் ஸித்தீக்
23. தல்ஹா பின் உபைதுல்லாஹ்
24. ஆமிர் பின் புஹைரா (அடிமை)
25. பிலால் பின் அபி ரபாஹ் (அடிமை)

26. ஸுஹைப் பின் ஸினான் (அடிமை)

உ. பனு அதீ

27. ஸயீத் பின் ஸைத்
28. பாத்திமா பின்த் அல் கத்தாப்
29. ஆமிர் பின் அபி ரபீஆ (நேசக் கூட்டுறவாளர்)
30. நயீம் பின் அப்தில்லாஹ்
31. வாகித் பின் அப்தில்லாஹ் (நேசக் கூட்டுறவாளர்)
32. காலித் பின் அல் பகீர் (நேசக் கூட்டுறவாளர்)
33. ஆமிர் பின் அல் பகீர் (நேசக் கூட்டுறவாளர்)
34. இயாஷ் பின் அல் பகீர் (நேசக் கூட்டுறவாளர்)

ஊ. பனு ஸஹ்ரா

35. ஸஃத் பின் அபி வக்காஸ்
36. அப்துர் ரஹ்மான் பின் அவ்ப்
37. உமைர் பின் அபி வக்காஸ்
38. அல் முத்தலிப் பின் அஸ்ஹர்
39. அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் (நேசக் கூட்டுறவாளர்)
40. கப்பாப் பின் அல் அர்த் (நேசக் கூட்டுறவாளர்)
41. மஸ்ஊத் பின் ரபீஆ (நேசக் கூட்டுறவாளர்)

எ. பனு ஸஹ்ம்

42. குனைஸ் பின் ஹுதாபா
43. ஹப்ஸா பின்த் உமர் (மனைவி)

ஏ. பனு ஜம்ஹ்

44. ஹாதிப் பின் அல் ஹாரிஸ்
45. பாத்திமா (மனைவி)
46. கத்தாப் பின் அல் ஹாரிஸ்
47. புகைஹா (மனைவி)
48. அஸ்ஸாயிப் பின் உஸ்மான்
49. முஅம்மர் பின் அல் ஹாரிஸ்
50. உஸ்மான் பின் மழ்ஊன்
51. அப்துல்லாஹ் பின் மழ்ஊன்
52. ரம்லா (மனைவி)
53. அஸ்ஸாயிப் பின் மழ்ஊன்

ஐ. பனு அஸத்

54. அஸ் ஸுபைர் பின் அல் அவாம்

ஒ. பனு அல் ஹாரிஸ்

55. அபு உபைதா ஆமிர் பின் அல் ஜர்ராஹ்

ஓ. பனு ஆமிர்

56. ஸலீத் பின் அம்ரு

57. ஹாதிப் பின் உமர்

ஒ. இத்தியாதி கோத்திரங்கள்

58. அம்ரு பின் அப்ஸா அஸ்ஸுல்லமி

59. ஜுந்துப் பின் ஜுன்னாதா அல் கிபாரி (அபூதர்)

இந்த அறுபது பேரும் மக்கா சமூகத்தின் எல்லாக் கோத்திரங்களையும் பிரதிபலித்தனர். அபூதர்ருக்கும் உமருக்கும் நபிகளார் மக்காவில் தங்குவதற்கு அனுமதிக்கவில்லை. வாடகை செலுத்தாமல் மக்காவில் தங்க முடியாது. முஷ்ரிக்குகளில் யாரும் இவர்களைப் பொறுப்பெடுக்கத் தயாரில்லை.

சமூக அந்தஸ்துள்ள மனிதர்களை வைத்தும் சமூக மாற்றத்தை நபிகளார் நிகழ்த்தியதைப் போல எதிரிகளையும் தனது போராட்டத்தில் பயன்படுத்தியுள்ளார். போர் என்பது தந்திரோபாயமே என்பதே அவர் கருத்தாக இருந்தது. போர்க்காலத்தில் போராளிகளின் குற்றச் செயல்களுக்காக ஒருபோதும் அவர் தண்டனை வழங்கியதில்லை. மக்காவில் தனது கொள்கையை ஏற்றுக் கொண்டவர்கள் அணி திரள்வதற்காகவும் பயிற்சி பெறுவதற்காகவும் அர்க்கம் பின் அபில் அர்க்கம் அவர்களின் வீட்டை நிலையமாக மாற்றினார்கள். அது வரலாற்றில் 'தாருல் அர்க்கமாக' அழைக்கப்படுகின்றது. பதினாறு வயது நிரம்பிய இளைஞன் அர்க்கமுக்கு தனியான வீடு இருக்குமென்று யாரும் நினைக்க வாய்ப்பில்லை. நாற்பது வயதைத் தாண்டிய பெரியோர்களின் இல்லங்களையே அல்லது அவர்கள் வசிக்கும் வீதியின் விபரங்களையே மக்கள் நன்கு அறிந்திருப்பர். அதே நேரம் தனது இயக்கத்தில் பிரபல்யமான உறுப்பினர்களின் வீடுகளைப் பயன்படுத்தும் போது தனது பணிக்கு ஆள்திரட்டும் வேலை பாழ்பட்டு விடும் என்பதாலேயே மக்களின்

கண்களுக்கு இலகுவில் புலப்படாத சபா மலையில் மறைவாக இருந்த அர்க்கமின் வீட்டை அண்ணலார் தெரிவு செய்தார்கள்.

# உசாத்துணையும் மேலும் அறிய:


❖ கலாநிதி முஹம்மத் ஸயீத் ரமளான் அல்-பூத்தி, பிக்ஹுஸ் சீறா, 7ஆம் பதிப்பு, 1978.

❖ கலாநிதி அல்-பர்கூத், ஹிமாயத்துத் த.்.வா வ முன்ஜஸாத்துஹா பில் பத்ரா அல்-மக்கியா, மலேசியா.

❖ ஸபீயுர் ரஹ்மான் முபாறக்பூரி, அர்ரஹீகுல் மக்தூம் - பஹ்ஸ் பிஸ் சீறா அந்நபவிய்யா, தாருஸ் ஸலாம், 5ஆம் பதிப்பு, சஊதி அரேபியா.

❖ முஸ்தபா அஸ்ஸிபாஈ, அஸ்-ஸீறா அந்நபவியா -துரூஸ்வஇபர்.

❖ கலாநிதி அக்ரம் ழியா அல் உமரி, அஸ்-ஸீறா அந்நபவியா அஸ்-ஸஹீஹா, 5ஆம் பதிப்பு, 2003, பாகம் 1-2, றியாத்.

❖ முனீர் முஹம்மத் அல் கழ்பான், அல் மன்ஹஜுல் ஹரக்கி லிஸ்-ஸீறா, 6வது பதிப்பு, பாகம் 1,2,3 ஜோர்தான்.

❖ அஷ்ஷேய்க் முஹம்மத் அல் கிழ்ரி பெக், நூருல் யகீன் பீ ஸீறத்தி செய்யிதில் முர்ஸலீன், கதீமே குத்பே கானா, கராச்சி.

❖ முனீர் ஷபீக், பீ நழரியாத் அத்த.்.யீர் அல் முஜ்தமா.்., குவைத்.

❖ அஷ்ஷேய்க் ஷாஹுல் ஹமீத் முஹம்மத் பளீல், அத்த.்.யீர் அல் இஜ்திமாயி பில் இஸ்லாம், நளீமிய்யா ஆய்வு, 1987.

❖ பிரடறிக் ஏங்கெல்ஸ், இயற்கையின் இயக்கவியல், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, பக். 40.

❖ எமிசியோ, மாவோவின் இளமைக்காலம் - முகவை இராஜ மாணிக்கம், வ.உ.சி நூலகம், 2003, சென்னை.

❖ அல்லெனினிய்யா வகழாயா அல் இந்திக்கால் மினர் ர∴சுமாலிய்யா இலல் இஷ்திராக்கியா பில்லுருபில் ராஹினா, கிஸ்தன்தீன், தாருத்தகத்தும், 1975 சேவியத் யூனியன்.

❖ Hamid Algar - The roots of Islamic Revolution, The open press, Canada, Second printing 1984 page 99.

❖ முனீர் ஷபீக், அந்நிழாமுல் துவலி அல் ஜதீத்- வகியாருல் முவாஜகா, அர்ரிஸாலா பதிப்பகம்- பெய்ரூத்.

**நன்றி:**

இஸ்லாமிய சிந்தனை
இர்பான்
நவாஸ்
அகீலா பானு
நியாஸ்
றினோசா
முஅஸ்ஸம்
இர்ஷாத்
றமீஸ்
ஆயிஷா

## பிற வெளியீடுகள்

1. முக்காடு (சிறுகதைத் தொகுப்பு)
வை. அஹமத்
*1999*

2. தரிசனம் - நிலவின் நிழலில் (குறு நாவல்கள்)
வை. அஹமத்
*1999*

3. நவீனத்துவத்தின் தோல்வி (கட்டுரைகள்)
றவூப் ஸெய்ன்
*2002*

## குறிப்புகள்

தாகம் தீராத பாலை நிலத்தைப் போன்றே
பிரச்சினைகளும் தீர்வுகளும் இருக்கின்றன.
நீர் புகட்டப்படும் போதெல்லாம்
இன்னும் நீர் கேட்டுக்கொண்டே இருக்கின்றது.
தாகம் தீர்வதில்லை என்பதைப் போல் தேவையான
சமூக மாற்றம் இன்னும் நிகழவில்லை.
மனித இன வரலாற்றில் செயலூக்கத்துடன்
தலையிட்டவர் என்ற வகையில் நபிகளாரின் சீறாவில்
இயங்கிவந்த விதிகளையும் உண்மைகளையும்
இந்நூல் தொகுத்தாராய்கிறது.

உயிர்ப்பைத் தேடும் வேர்கள்

Rs. 100/-